# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

இரண்டாம் பதிப்பு
விலை: 20
பக்கங்கள்: 32

சுடர் 33 கதிர் 164 சித்திரை 26ஆம் நாள் புதன்கிழமை 09 மே 2018 வள்ளுவர் ஆண்டு 2049


## வடக்கு மருத்துவர்கள் திங்கள் போராட்டம்

யாழ்ப்பாணம், மே 9
வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து அரச மருத்துவமனைகளிலும் » 06

**கல்வியியற் கல்லூரியில் மாணவர் உணவுக்கென அரசு வழங்கிய நிதியில் ரூ.1 1/2 கோடி தேக்கம்!**

*கல்லூரிச் சமூகம் விசனம்*

(விரிவு பக். 9)

## பல்கலை மாணவர் ஒன்றியம் விக்கியைச் சந்திக்க மறுப்பு

*நினைவேந்தலை அரசியலாக்க முயற்சி என்றும் குற்றச்சாட்டு*

யாழ்ப்பாணம், மே 9
முள்ளிவாய்க்கால் நினைவாலயத்தில் நினைவேந்தல் நிகழ்வை நடத்துவது தொடர்பில் வடக்கு மாகாண முதலமைச்சருடனும், அமைச்சர்களுடனும் யாழ்ப்பாணப் » 06

# ஏமாற்றம்



கொழும்பு, மே 9
அடுத்த இரண்டாண்டுகளுக்கு அரசின் நகர்வு எப்படி அமையப் போகின்றது என்பதைக் கூறும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் உரை தமிழ் மக்களுக்குப் பெரும் ஏமாற்றமாகவே அமைந்துள்ளது. புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சி தொடர்பில் அரச தலைவர் தனது உரையில் எதையும் குறிப்பிடவில்லை. ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை இணை அனு » 28

## மாநகர சபை மோசடி விசாரணை அறிக்கையைப் பெற நடவடிக்கை

*மேயர் ஆர்னோல்ட் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், மே 9
யாழ்ப்பாணம் மாநகர சபையில் கடந்த காலங்களில் இடம்பெற்றன என்று கூறப்படும் ஊழல், மோசடிகள் தொடர்பான வடக்கு மாகாண சபையின் விசாரணை அறிக்கை கோரப்படவுள்ளது என்று தெரிவித்தார் யாழ்ப்பாணம் மாநகர சபையின் மேயர் இ.ஆர்னோல்ட்.
யாழ்ப்பாணம் மாநகர சபையின் அமர்வு நேற்று சபை மண்டபத்தில் நடைபெற் » 06

## ஆர்னோல்ட்டுக்கு அடங்காத முன்னாள் மேயர்

யாழ்ப்பாணம், மே 9
யாழ்ப்பாணம் மாநகர சபையின் அமர்வு நேற்று நடைபெற்றது. அதில் முன்னாள் மேயரான திருமதி ப. யோகேஸ்வரி எழுந்து நின்று பேச மறுத்தார். மேயர் இ.ஆர் » 29

## முட்டைக்குக் காவல் போட்டதால் முரண்பட்ட சபை உறுப்பினர்

*யாழ். மாநகர சபை அமர்வில் சுவாரசியம்*

யாழ்ப்பாணம், மே 9
யாழ்ப்பாணம் மாநகர சபையின் அமர்வு நேற்று நடைபெற்றது. உறுப்பினர்களுக்கான மதிய உணவு வழங்கும் இடத்தில் முட்டைக்கும், இறைச்சிக்கும் மாநகர சபை உத்தியோகத்தர்கள் காவலிருந்தனர். அதனால் சீற்றமைடைந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் ஒருவர் சீறிப் பாய்ந்தார். அந்த இடம் சிறிது » 06

## தமிழர் பலவீனத்தைத் தெரிந்து முட்டாளாக்கச் சிலர் முயற்சி

*சாடுகின்றார் ஆனந்தசங்கரி*

யாழ்ப்பாணம், மே 9
எவரையும் இலகுவாகத் தமிழ் மக்கள் நம்புவார்கள் என்ற அவர்களின் பலவீனத்தை வைத்துக்கொண்டு எல்லாக் காலத்திலும் அவர்களை முட்டாள்களாக்கச் சிலர் நினைப்பது வேதனைக்குரிய விடயம். விடுதலைப்புலிகளால்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது என்று மோசடியாக அந்தப் பெயரை உபயோகித்துக் » 06

## மைத்திரியின் கீச்சகப் பக்கத்தில் புகுந்து அவருக்கே ஆலோசனை

*"ஆசாமி" செய்த வேலையால் பரபரப்பானது கொழும்பு அரசியல்*

கொழும்பு, மே 9
அரச தலைவர் மைத்திரியின் ஊடகப் பிரிவு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆலோசனை வழங்குவது போன்ற கீச்சகப் (ருவீற் » 29

## வழிநடத்தல் குழு கூடவில்லை ஜூன் மாதமே கூடும் அறிகுறி

கொழும்பு, மே 9
புதிய அரசமைப்பை உருவாக்குவதற்காக நிய மிக்கப்பட்ட அரசியல் நிர்ணய சபையின் வழிநடத்தல் குழுவின் கூட்டம் நேற்று நடைபெறும் என்று எதிர்பார்க்கப்பட்டபோதும், கூட் » 06



## மைத்திரிக்குப் பெரும் வரவேற்பு ராஜபக்ச குடும்பத்தினர் மாயம்

கொழும்பு, மே 9
எட்டாவது நாடாளுமன்றத்தின் இரண்டாவது அமர்வு நேற்றுப் பிற்பகல் வைபவ ரீதியாக ஆரம்பமானது. அரச தலைவர் மைத்திரிபால » 29

*அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவின் முழுமையான கொள்கை விளக்க உரை 21, 22, 23 ஆம் பக்கங்களில்*

## புலிகளுடைய ஆயுதங்களை சலிக்காது தேடும் படைகள்

*வவுனியாவிலும் நேற்று ஏமாற்றம்*

வவுனியா, மே 9
விடுதலைப் புலிகள் அமைப்பால் பதுக்கப்பட்டுள்ளன என்று நம்பப்படும் ஆயுதங்களைத் தேடும் நடவடிக்கைகளை வன்னியின் பல பகுதியிலும் படைத்தரப்புகள் முடுக்கி » 06

## மைத்திரி வருமுன்னரே கரணமடித்த சு.கவினர்

- ஆரவாரத்துடன் வரவேற்றது மகிந்த அணி
- ஆளுங்கட்சி உறுப்பினர்கள் கூச்சல்

கொழும்பு, மே 9
தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்த சிறிலங்கா » 29



## விவசாயக் காணியில் அரபு வீட்டுத் திட்டம்

*மக்களின் முறைப்பாட்டையடுத்து முசலி பிரதேச செயலர் தடைவிதிப்பு*

மன்னார், மே 9
முசலி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கொக்குப்படையான் கிராம மக்களுக்குச் சொந்தமான » 29

## வேலைதேடும் பட்டதாரிகள் கொழும்பில் ஆர்ப்பாட்டம்



» 29

## 6 கிலோ கேரளக் கஞ்சா புதுக்குடியிருப்பில் மீட்பு

» 29




# சாதாரண தரம் தோற்றியோர் உயர்தரத்தில் கல்வி கற்கலாம்

## கல்வி அமைச்சு அறிவித்துள்ளது

**மாங்குளம்,மே.9**

**இந்தமுறை சாதாரணதரப் பரீட்சை எழுதிய மாணவர்கள் அனைவரும் உயர்தரம் கற்க முடியும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. 2017 ஆம் ஆண்டு பரீட்சை எழுதி முடிவுகள் கிடைத்த மாணவர்கள் அனைவரும் உயர்தரம் கல்வி கற்க முடியும். உயர்தரம் மட்டுமல்லாது பல்கலைக்கழகம் சென்று பட்டம் பெறமுடியும்.**

2 வருடங்கள் கொண்ட உயர்தரக் கல்வியில் 6 தவணைகள் தொடர்ந்துகல்விகற்கவேண்டும். தற்போது உயர்தரத்தில்காணப்படுகின்ற கலை, வர்த்தகம், கணிதம், விஞ்ஞானம் மற்றும் 2 தொழில்நுட்பப் பிரிவுகள் என 6 பாடத்திட்டங்கள் காணப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக தொழில் கல்வி என்ற பிரிவு 7 ஆவது பிரிவாக அறிமுகப்படுத்தப்படுகிறது. இந்தப் பிரிவு இந்த முறை பரீட்சை எழுதிய 2018/2020 ஆம் மாணவருக்கேஅறிமுகப்படுத்தப்படவுள்ளது. இதன்போது மொழிப்பாடங்கள், தொழில் வழிகாட்டல், உளவியல், தொடர்பாடல் தொழில்நுட்பம் போன்றன கட்டாயமாக கற்றல் வேண்டும். இவற்றில் தெரிவு கிடையாது. இப்பாடங்கள் முதலாம் வருட ஆரம்பத்தில் கற்கவேண்டும்.

மேலும் தொடர்பாடல் தொழில்நுட்பம், பொறியியல், மின்னியல், பிளம்பிங், விடுதி முகாமைத்துவம்,பெண்அலங்காரம் போன்ற பாடங்களில் 3 பாடங்கள் தெரிவுசெய்து முதலாம் வருட இறுதியில் கற்கவேண்டும். இரண்டாம் வருடம் முதல் வருட இறுதியில் கற்ற பாடத்தில் இருந்து ஒரு பாடத்தைத் தெரிவு செய்து அதனையேஇரண்டாம் வருடம்முழுவதும்கற்றுஅந்தப் பாடத்தையே உயர்தரப் பரீட்சையில்சித்திபெற்றுபல்கலைக்கழகம் செல்ல வேண்டும்.

இதற்கு சிறப்பாக இரத்மலானையில் தொழில் பிரிவுக்கு தனித்துவமானபல்கலைக்கழகம்மானியங்கள் ஆணைக்குழுவால் பரிந்துரைக்கப்பட்டுசெயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ந.ரி4.72)

# ஆயுதங்களுடன் குழுவொன்று கைது

கொழும்பு,மே.9

மட்டக்குளியில் போதைப்பொருட்கள் மற்றும் ஆயுதங்களுடன்தொடர்புடையசந்தேகத்தின் பேரில்குழுவொன்றைபொலிஸார்கைதுசெய்தனர்.

இவர்கள் நேற்றுக் கைதுசெய்யப்பட்டனர் எனப்பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்குளி சமித்புரத்தில் மேற்கொள்ளப்பட்ட சிறப்புச்சுற்றிவளைப்பின்போதே பாதாளகும்பலுடன்போதைப்பொருள்விற்பனையாளர்களும் கைதுசெய்யப்பட்டனர்.

இந்தத் தேடுதல் நடவடிக்கையில் சுமார் 300க்கும் மேற்பட்ட பொலிஸ் மற்றும் பொலிஸ் சிறப்புஅதிரடிப்படையினர்ஈடுபடுத்தப்பட்டனர் எனவும் இதன் போது இராணுவ சீருடையொன்றும் கைப்பற்றப்பட்டது எனவும் கூறப்பட்டது. (ந.ரி4)

# நீதிமன்றில் தீ விபத்து சந்தேகநபர் கைது

கொழும்பு,மே.9

பண்டாரவளை நீதிவான் நீதிமன்றில் ஆவணக்காப்பகத்தில்ஏற்பட்டதீவிபத்துதொடர்பில் சந்தேகநபரொருவர்கடந்த 6 ஆம்திகதி மஹரகம ரயில் நிலையத்தில் கைதுசெய்யப்பட்டார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்தார்.

கொழும்பிலுள்ளபொலிஸ்தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

மேல்மாகாண புலனாய்வு பிரிவு, பண்டாரவளை பொலிஸார் மற்றும் பிலியந்தலை பொலிஸார் ஆகியோர் இணைந்து ஆலிஎல பகுதியைச் சேர்ந்த 41வயதுடைய சந்தேக நபரைக் கைதுசெய்தனர்.

அந்த சந்தேகநபருக்கு எதிராக வீடுடைப்பு கொள்ளைச்சம்பவங்கள்தொடர்பில்பண்டாரவளைநீதிவான்நீதிமன்றில்11வழக்குகள்பதிவு செய்யப்பட்டுள்ளன.

சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றார்.

பண்டாரவளை நீதிவான் நீதிமன்றில் ஆவணக்காப்பகத்தில்கடந்தஏப்ரல்மாதம்30ஆம் திகதி தீவிபத்து ஏற்பட்டது. இதில் அங்கிருந்த உடைமைகள் அனைத்தும் சேதமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (ந.ரி4)

# தங்கத்துடன் யாழ்ப்பாண பெண்கள் கைது

கொழும்பு,மே.9

சுமார்10மில்லியன்ரூபா பெறுமதியான 1.1 கிலோகிராம் தங்கத்துடன் இரண்டு பெண்கள் பண்டாரநாயக்க பன்னாட்டு விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டனர். இவர்கள் நேற்றுக் கைது செய்யப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட இரு பெண்களும்சிங்கப்பூரில் இருந்து வருகை தந்த யாழ்ப்பாணத்தைச்சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. சந்தேகநபர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கானநடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர். (ந.ரி4)

# வாகன விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு,மே.9

மெதகம பிபிலவில் இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்ததுடன் இருவர்படுகாயமடைந்தனர்.

இந்தவிபத்துநேற்றுஇடம்பெற்றதுஎனப்பொலிஸார் தெரிவித்தனர்.

மூவர் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று கட்டுப்பாட்டை இழந்து பாதையை விட்டுவிலகியதிலே விபத்து இடம்பெற்றது எனக் கூறப்பட்டது.

படுகாயமடைந்த மூவரும் மெதகம மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சை பயனின்றிஒருவர்உயிரிழந்தார். இவ்வாறு உயிரிழந்தவர் 18 வயதுடைய இளைஞன் எனத் தெரிவிக்கப்பட்டது.

விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர். (ந.ரி4)



# செஞ்சிலுவை சங்கத்தின் ஆண்டு நிறைவு நிகழ்வு

வவுனியா,மே.9

உலக செஞ்சிலுவைச் சங்கத்தின் 155 ஆம் ஆண்டு நிறைவு தினத்தை முன்னிட்டு வவுனியா செஞ்சிலுவைச் சங்க கிளையினரால் விழிப்புணர்வு நிகழ்வும்தாகசாந்திவழங்கும்நிகழ்வும்நடத்தப்பட்டன.

வவுனியா காமினி மகாவித்தியாலத்துக்கு முன்னால்சங்கத்தின் உறுப்பினர்கள் மற்றும் தொண்டர்களின் பங்களிப்புடன் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

இலங்கைச்செஞ்சிலுவைசங்கம்மற்றும் செம்பிறைச் சங்கம் என்பன இணைந்து இந்தநிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன.

பன்னாட்டுச் செஞ்சிலுவை சங்கம் என்பது பக்கச்சார்பற்ற நடுநிலையான, சுதந்திரமாகசெயற்படும்ஒருஅமைப்பாகும். ஆயுத மோதல்களின் போதும், உள்நாட்டுக் கலவரங்களின் போதும் மக்களை அச்சுறுத்தல்களில் இருந்து பாதுகாத்து அவர்களுக்கு அடிப்படை வசதிகளை வழங்குவதை எமது அமைப்பு பிரதானமான நோக்கமாக கொண்டிருக்கிறது.

இலங்கையில்நடைபெற்றபோர்காலத்தின் போது மக்களுக்கு சிறப்பான சேவைகளையும்வாழ்வாதாரங்களையும் வழங்கியிருந்தோம் என்று சங்கத்தின் உறுப்பினர் ஒருவர் கருத்துத் தெரிவித்தார். (ந.ரி4.110)

# மருத்துவ அதிகாரிகள் சங்க கோரிக்கைகள் நிறைவேறின

## சங்கத்தின் தகவல் தொடர்பு அதிகாரி தெரிவிப்பு




மட்டக்களப்பு,மே.9

கிழக்கு மாகாண அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் கோரிக்கைகள் நிறைவேற்றப் பட்டுள்ளன என்று அந்தச் சங்கத்தின் தகவல் தொடர்பு அதிகாரி வைத்தியர்எம்.ஏ.சுஹைல் அஹமட் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

தமதுகோரிக்கைக்கு அமைவாக அரச மருத்துவர்களுக்கு 2018ஜனவரியிலிருந்துஅதிகரிக்கப்பட்ட மேலதிக நேரக் கொடுப்பனவுகள், புதிய சுற்றறிக்கையின்படி மே மாதத்திற்குரிய சம்பளப் பட்டியலில் புதிதாக மாற்றியமைக்கப்பட்ட மேலதிக நேரக் கொடுப்பனவு சேர்த்துக் கொள்ளப்படல், ஏறாவூர் ஆதார மருத்துவமனையில் தகுதியுடைய மருத்துவ நிர்வாகி இல்லாததால் நோயாளிகளும், மருத்துவர்களும் ஏனைய சேவையாளர்களும் பலநிர்வாகசீர்கேடுகளைஅனுபவிக்கின்றனர்.

எனவே அங்கு தகுதியுடைய மருத்துவநிர்வாகிநியமிக்கப்படல், திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் ஒரு பிரதிப் பணிப்பாளர் வெற்றிடத்துக்கு இரு பிரதிப்பணிப்பாளர்கள்சேவையில் அமர்த்தப்பட்டுள்ளமை போன்ற விடயங்களுக்குத் தீர்வு கிடைத்திருக்கிறது என்றார். ஏப்ரல்மாதம்10ஆம்திகதி கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித்த போகொல்லாகம உடனான சந்திப்பில் வாக்குறுதியளிக்கப்பட்ட விடயங்கள் நடைமுறைப்படுத்தப்படாமல் உதாசீனம் செய்யப்பட்டிருந்தமையால் கிழக்கு மாகாண அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கடந்த 26 ஆம் திகதி கிழக்கு மாகாணம் தழுவிய ரீதியில்தொழிற்சங்கப்போராட்டத்தை முன்னெடுத் திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந.ரி4)

# மின்னல் தாக்கி மீனவர் உயிரிழப்பு

திருகோணமலை சம்பூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சூடாக்குடா கடலில்படகில் மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மீனவர் மீதுமின்னல்தாக்கியதில் மீனவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். மற்றுமொருமீனவர் அதிர்ச்சிக்குள்ளாகிய நிலையில் மூதூர் தள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் நேற்று இரவுநடந்துள்ளது. இந்தச் சம்பவத்தில் மூதூர் பாலநகரைச்சேர்ந்த45வயதுடைய எம்.பரீஸ் என்பவரே உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப்பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நரி5)

## மதுபானசாலையை அகற்றக்கோரி பருத்தித்துறையில் ஆர்ப்பாட்டம்



பருத்தித்துறை,மே.9
பருத்தித்துறை நகரில், இயங்கிவரும் மதுபான சாலை ஒன்றை அகற்றக் கோரி பருத்தித்துறை நகராட்சி மன்றத்துக்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

அந்தப்பகுதிமக்கள்மற்றும் தமிழ்த்தேசியமக்கள்முன்னணியின் நகர சபை உறுப்பினர்கள்இணைந்து ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர். மக்களுக்கும்நகரத்துக்கும் இடையூறாகக் காணப்படும் இந்த மதுபானசாலை நகரசபையின் கட்டட அனுமதி இல்லாமலும், வியாபாரஉரிமம்இல்லாமலும் இயங்குவதாகத் தெரிவிக்கப்பட்டது.

"கோவில் மற்றும் பாடசாலைக்கு அருகில் மதுபான சாலையை அமைக்க தவிசாளரே அனுமதிக்கலாமா, ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் மதுபானசாலைக்கு எதிராகக் கதைத்துவிட்டு, பதவிவந்ததும்பம்முவது ஏன்? அரசியல் அழுத்தமா, இலஞ்சமா?, எங்கே? எங்கே? வீதி அபிவிருத்திக்கானசட்டவிதிகள்எங்கே?" உள்ளிட்ட வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஆர்ப்பாட்டக்காரர்கள் இதன்போது ஏந்தியிருந்தனர். சம்பவம் தொடர்பில் தமக்குஉரியதீர்வுவேண்டி நகரசபைத் தவிசாளருக்கு மனுஒன்றும்கையளிக்கப்பட்டது. (ந,ரி2,26)



## தீர்வு இல்லையேல் தொடர்ந்தும் போராட்டம்

வட மாகாண மிகை ஊழியர் அதிபர் சங்கம் கொழும்பில் கவனவீர்ப்புப் போராட்டத்தை நேற்று ஆரம்பித்தது. கல்விஅமைச்சின்வளாகத்தில்இந்தக்கவனவீர்ப்புப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

தம்மைஅதிபர்சேவையில்நிரந்தரநியமனத்தின்அடிப்படையில் இணைத்துக் கொள்ளுமாறு வலியுறுத்தி இவர்கள் இந்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை இன்று (நேற்று) அமைச்சரையோ அல்லது அமைச்சின் அதிகாரிகளையோ தம்மால் சந்திக்க முடியாவிட்டால் நாளை வரை (இன்று) தொடர்ந்தும் கல்வி அமைச்சின் வளாகத்தில் தங்கியிருக்கப் போவதாக அவர்கள் கூறுகின்றனர். (ந,ரி2)

# மகிந்த பெற்ற கடனால் பன்னாட்டில் அவமானம்

### சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு

**கொழும்பு,மே.9**

**முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் பெறப்பட்ட வெளிநாட்டுக் கடன்களை விரைவில் மீள் செலுத்த வேண்டிய தேவை தேசிய அரசுக்குக் காணப்படுகின்றது . இல்லாவிடின் எமது நாடு பன்னாட்டு மட்டத்தில் வெட்கித் தலை குனிய நேரிடும். அரசு குறுகிய காலகட்டத்தில் நாட்டின் அபிவிருத்திகளை மேம்படுத்தியதுடன், வெளிநாட்டுக் கடன்களையும் மீள் செலுத்தி வருகின்றது.**

இவ்வாறு ஜாதிக ஹெல உறுமய அமைப்பின்தலைவர்பாட்டலிசம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

ஜாதிக ஹெல உறுமய அமைப்பின் மேதின நிகழ்வுகள் நேற்று முன்தினம் புதியநகரமண்டபத்தில்இடம்பெற்றன. இந்தநிகழ்வில்கலந்துகொண்டுஉரையாற்றும்போதே அவர் இதனைத்தெரிவித்தார். அவர் தெரிவித்ததாவது:

பன்னாட்டுமட்டத்தில்கொண்டாடப்படுகின்ற மே தினம் சில தவிர்க்கமுடியாத காரணங்களால் இம்முறை பிற்போடப்பட்டதற்கு எவ்வித அரசியல் உள்நோக்கங்களும் கிடையாது என்பதை உழைக்கும் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். ஆனால் இதனை எதிரணியினர் முழுமையாக அரசியல் மயப்படுத்தி விட்டனர்.

தேசிய அரசு 2015 ஆம் ஆண்டு மக்களுக்கு முன்வைத்த வாக்குறுதிகள் முழுமையடையவில்லை என்று பலர் குற்றம் சுமத்துகின்றனர். கடந்த கால அரசு வெளிநாடுகளில் பெற்ற கடன்களை தேசிய அரசே இன்றுவரை மீள் செலுத்தி வருகின்றது.

கொழும்பு நகரில் ஒரு நாள் கூலியை பெறும் நோக்கில் கஷ்டப்பட்டு உழைக்கும்வர்க்கத்தினர்பெருமளவில்காணப்படுகின்றனர். இவர்களின்நலன்களை பேணும் பல காப்புறுதித் திட்டங்கள் கடந்தவருடம்ஆரம்பிக்கப்பட்டுசிறந்த முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. கொழும்பு நகரில் 75 சதவீதமான மக்கள் சேரிப்புற குடியிருப்புக்களிலேவாழ்கின்றனர். இப்பிரதேசங்களிலே அதிகமான சட்டவிரோதத் தொழில்களும் இடம்பெறுகின்றன. இவற்றைத்தேசியஅரசைத்தவிரஎந்த அரசும்கவனத்தில்கொள்ளவில்லை.

தற்போது கொழும்பு நகர் உள்ளிட்ட 5 உப நகரங்கள் பெரிய அபிவிருத்திகள் அடைந்துள்ளன. இந்தப் பிரதேசங்களில் வாழும் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளான திண்மக் கழிவகற்றல் பிரச்சினைகளுக்கு 2023 ஆம் ஆண்டுக்குள்தீர்வுகாணப்படும். கடந்த கால அரசு பெருந்தெருக்களை மாத்திரம்அபிவிருத்திசெய்வதைநோக்காகக் கொண்டு மனிதர்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண மறந்துவிட்டது. ஆனால்இன்றுதேசிய அரசு அனைத்துத் துறைகளிலும் அபிவிருத்திகளை பகுதியளவில் மேற்கொள்கின்றது.

தேசிய அரசின் பிரதான நோக்கம் 2023ஆம்ஆண்டுக்குள் வாடகைவீட்டில் வாழும் மக்களுக்கு அனைத்து வசதிகளும் கொண்ட சொந்தத் தனி வீட்டை அமைத்துக் கொடுப்பதாகும். ஆரம்பிக்கப்பட்டுள்ளஅனைத்துஅபிவிருத்தித்திட்டங்களும்2020ஆம்ஆண்டுக்குள்முழுமைபெறும்என்றும்அவர் தெரிவித்தார். (ந,ரி2,31)

## மோ.சைக்கிள்பள்ளத்தில் பாய்ந்ததில் மாணவி சாவு

கொழும்பு,மே.9
பயணித்துக்கொண்டிருந்த மோட்டார்சைக்கிள்பள்ளத்தில் வீழ்ந்ததில் பாடசாலை மாணவிஒருவர்உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம்நேற்றுமுன்தினம் பண்டுவஸ்நுவர, ரத்முளுகந்த பகுதியில் இடம்பெற்றது.

இதில், துனகயாவத்தபகுதியைச் சேர்ந்த உயர்தரத்தில் கல்வி கற்கும் 17 வயதுடையபாடசாலைமாணவி ஒருவரே சாவடைந்தார்.

விகாரை ஒன்றுக்குப் பயணம் செய்துகொண்டிருக்கும்போதேஇந்தச்சம்பவம் ஏற்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் படுகாயமடைந்தஇளைஞர்கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டிலுள்ளவர்கள் அநுராதபுரம் பகுதிக்கு யாத்திரை சென்றிருந்த வேளையில் மாணவி தனது காதலன் மற்றும் இன்னும் இரண்டு நண்பர்களுடன்மோட்டார் சைக்கிளில் ரத்முளுகந்த விகாரையில் உள்ள மலை உச்சிக்கு சென்றதாகப் பொலிஸாரின் விசாரணைகளில்தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ந,ரி2)

## கேரளக் கஞ்சாவுடன் மூவர் கைது

உயர்தர மாணவர்கள் மூவர் கேரளக் கஞ்சாவுடன் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர். கண்டிநகரின், பிரதான பாடசாலைஒன்றின், மாணவர்களே, கைது செய்யப்பட்டதாக பூஜாபிட்டிய பொலிஸார் தெரிவித்தனர். சந்தேக நபர்கள் கலகெதர நீதிவான் முன்னிலையில் முன்னிலைப்படுத் தப்பட்டனர். இதன்போது, எதிர்வரும் 14 ஆம் திகதி வரை அவர்களை விளக்கமறியலில் வைக்கநீதிவான்உத்தரவிட்டார். (ந,ரி2)

## கைதியைப் பார்க்கச் சென்றவர் போதைப் பொருளுடன் கைது

குருணாகல்,மே.9
கைதியைப் பார்வையிடச் சென்றவர் போதைப் பொருளுடன்நேற்றுக்கைது செய்யப்பட்டார்.

இந்த சம்பவம் வாரியபொல சிறைச்சாலையில் இடம்பெற்றது.

சிறைச்சாலைக்கைதிஒருவரைப்பார்வையிடவந்த ஒருவரை சிறைச்சாலை அதிகாரிகள் சோதனையிட்டனர். இதன்போது, அவரிடமிருந்து 33 கிராம் 230 மில்லிகிராம் ஹெரோயின் மற்றும் 35 கிராம் 140மில்லிகிராம்அய்ஸ்எனும்போதைப்பொருளும் மீட்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

குளியாப்பிட்டிய பகுதியைச் சேர்ந்த 22 வயதுடைய ஒருவரே கைது செய்யப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வாரியபொலபொலிஸார்மேலதிகவிசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ந,ரி2)

## தகவலறியும் உரிமைச் சட்டம் தொடர்பில் பன்னாட்டு மாநாடு

கொழும்பு,மே.9
அரசுக்கும் மக்களுக்குமிடையில் சிறந்த உறவைபேணுவதற்கும்அரசமற்றும்அரச நிறுவனங்களின் பொறுப்புக் கூறல் தன்மையைஉறுதிப்படுத்துவதற்குமானதகவலறியும் உரிமைச் சட்டம் தொடர்பான பன்னாட்டுமாநாடுநேற்றுகொழும்பில்உள்ள கொள்கை ஆய்வு நிலையத்தில் இடம்பெற்றது. இலங்கையில்தகவலறியும்உரிமைச் சட்டமூலம்நடைமுறைப்படுத்தப்பட்டுஒரு வருட கால நிறைவை முன்னிட்டு இந்த மாநாட்டைஇலங்கைபத்திரிகைநிறுவனம் மற்றும்நோர்வேதூதரகம்இணைந்துஏற்பாடுசெய்தன.

நோர்வே, இந்தியா, மெக்சிகோ, பங்களாதேஷ், மியன்மார் பாகிஸ்தான் மற்றும் இலங்கைஉட்படஏழுநாடுகளைச்சேர்ந்த பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டனர்.

இரண்டுநாள்கள் ஏற்பாடுசெய்துள்ள இந்த மாநாட்டில் இலங்கை உள்ளிட்ட ஏனைய நாடுகளிலும்தகவலறியும்உரிமைச்சட்டம் தொடர்பான நடைமுறைத் தன்மை குறித்தும், தகவலறியும் உரிமைச் சட்டத்தின் மூலம்நாட்டுமக்களுக்கு காணப்படும்உரிமைகளின் நிலையான தன்மை குறித்து கலந்துரையாடப்படவுள்ளது.

தகவல் தேடுவோரின் பாதுகாப்பு ஆபத்து, தனிப்பட்ட தரவுகளைப் பாதுகாத்தல், ஊடகம்சிவில்சமூகஅமைப்புகளின்வகிபாகம், எதிர்காலத்தில் தகவலறியும் உரிமைச் சட்டம்மற்றும்தகவல்வெளிப்படுத்தல்நுணுக்கங்கள் எனும் தலைப்புக்களில் விரிவுரைகள் என்பன வழங்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ந,ரி2)

## சார மரத்திலிருந்து வீழ்ந்தவர் காயம்

சாவகச்சேரி,மே.9
மாடிக்கட்டடத்துக்குஅமைக்கப்பட்டிருந்த சார மரத்திலிருந்து தவறி வீழ்ந்த முதியவர் ஒருவர் காயமடைந்தார்

இந்தச் சம்பவம் நேற்று சாவகச்சேரி சங்கத்தானைப் பகுதியில் இடம்பெற்றது.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி சாலையைச் சேர்ந்த 60 வயதுடைய கட்டடக் கலைஞரே காயமடைந்தவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்தவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுமேலதிகசிகிச்சைக்காகயாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டார். (ந,ரி2,9)

## விபத்தில் இருவர் காயம்

சாலையோர மதிலுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில்பெண்கள் இருவர் காயமடைந்தனர். இந்தச்சம்பவம் நேற்று தாவளை, இயற்றாலைப் பகுதியில் இடம்பெற்றது. ஞானகுலசேகரம் யசிந்தினி (வயது21) சிவகரன் கௌசிலா (வயது30) ஆகிய இருவருமே காயமடைந்தனர். சாலையின் குறுக்கே மாடு ஓடியதால் இவ் விபத்து இடம்பெற்றதாகப்பொலிஸார்தெரிவித்தனர். விபத்தில்காயமடைந்தவர்கள்சாவகச்சேரிமருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். (ந,ரி2,9)

# 13 வருட உத்தரவாத கல்வித் திட்டத்தில் மேலும் ஒரு பாடசாலை தெரிவு

சாவகச்சேரிமே 9
13 வருட உத்தரவாதக் கல்வித் திட்டத்தின் கீழ் தென்மராட்சி கல்வி வலயத்தில் இந்த வருடம் மேலும் ஓர் பாடசாலை தெரிவு செய்யப்பட்டு மாணவர்களுக்கு தொழில்முறைப்பாடங்கள் மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயத்தில் நாளை வியாழக்கிழமை நடத்தப்படவுள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளது.

13 வருட உத்தரவாதக் கல்வித் திட்டம் என்னும் தொழில்முறைப் பாடத்துறையில் கடந்த 2016 2017 ஆகிய ஆண்டுகளில் ஜி.சி.ஈ.சாதாரண தரப் பரீட்சையில்சித்திபெறாதமாணவர்கள்இணைந்துகல்வியினைத் தொடர முடியும் என வலயக் கல்விப் பணிப்பாளர் ச.சுந்தரசிவம் அறிவித்துள்ளார்.

மாணவர்கள்நாளைகாலை 8.00 மணிக்கு வருகை தந்து அங்கு விண்ணப்பப் படிவத்தைப் பெற்று பூர்த்தி செய்து வழங்கி பாடநெறியில் கலந்து கொள்ளலாமெனவும் அறிவிக்கப்பட்டது.

இந்தக் கல்வித் திட்டத்தில் கடந்தவருடம்தென்மராட்சி கல்வி வலயத்தில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி தெரிவுசெய்யப்பட்டுவகுப்புகள் நடைபெற்று வருகின்றது. (9)

# குப்பைக் கூடைக்குள் விலங்குகளின் கழிவுகள்

*துர்நாற்றம் வீசுவதாக மக்கள் விசனம்*



யாழ்ப்பாணம்,மே 9
சங்கானை நகர் பகுதியில் உள்ள குப்பைக் கூடைக்குள் குப்பைகளுடன் இறந்த விலங்குகளின் கழிவுகளை போடுவதால் அந்தப் பகுதில்துர்நாற்றம்வீசுவதால்பல்வேறு அசோகாரியங்களைஎதிர்நோக்குவதாக மக்கள்கவலைதெரிவிக்கின்றனர்.

இதுபற்றிஅவர்கள்மேலும் தெரிவித்ததாவது:
சங்கானை நகர்ப் புறங்களை அண்டிய பல்வேறு பகுதிகளிலும் பிரதேசசபையால் குப்பைத் தொட்டிகள் வைக்கப்பட்டுக் குப்பைகளின் தரம் தொடர்பில் பிரித்து எழுதப்பட்டுள்ள நிலையிலும் குப்பைகளுடன் விலங்குகளின் தோல்கள் ,பாகங்கள் என்பன போடப்படுவதாக தெரிவிக்கப்பட்டது. இவ்வாறான விலங்குகழிவுகளைபோடுவதால் அதனை சபை ஊழியர்களால் அகற்ற முடியாத நிலை காணப்படுகின்றது.

அத்துடன் இது தொடர்பில் உரியவர்கள் நடவடிக்கை எடுக்கப் வேண்டும் என்றும் மக்கள் கேட்டு கொண்டனர்.

இந்த விடயம் தொடர்பாக சங்கானை பிரதேச சபையின்கவனத்துக்குகொண்டு வரப்பட்டுள்ளது. இவ்வாறு குப்பைக் கூடைக்குள் விலங்கு கழிவுகளை இடுவதை தவிர்க்க வேண்டும் என்று சபை அறிவித்தல் விடுத் துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (7)

# விடுவிக்கப்பட்ட பகுதியின் வீதிகள் சீரமைப்பு ஆரம்பம்

அளவெட்டிமே 9
அண்மையில் விடுவிக்கப்பட்ட வலி வடக்கில் குரும்பசிட்டி பகுதியின் வீதிகள் சீரமைப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன். இந்நிலையில்வலி.வடக்குபிரதேசசபைதவிசாளர் சுகிர்தன்மற்றும்பிரதேசசபைஉறுப்பினர்களானவிஜயராசா ,தங்கராசா ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டனர்
இதேவேளை மயிலிட்டி பூதவரதராயர் ஆலயம் மக்களின் கோரிக்கைக்கு அமைவாகபிரதேசசபையால்துப்பரவுசெய்யப்படுகின்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (63)

# முன்பள்ளிக்கு ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான தளபாடங்கள்

சாவகச்சேரி, மே.9
தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த கெற்பேலி சிவசக்தி முன்பள்ளிக்கு ஒரு இலட்சம் ரூபா பெறமதியான தளபாடங்கள் வழங்கப்படவுள்ளன.

தளபாடங்கள்கொள்வனவுசெய்யவன்னிமாவட்டபாராளுமன்றஉறுப்பினர்சாந்திசிறிஸ்கந்தராசா பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதி யிலிருந்து ஒரு இலட்சம் ரூபாவினை ஒதுக்கீடு செய்துள்ளார் என மாவட்டச் செயலகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (9)

# ஒரே இலக்கத்தில் இரு வாகனங்கள்

*யாழ்ப்பாண விசாரணை பிரிவில் முறைப்பாடு*

யாழ்ப்பாணம், மே 9
ஒருபதிவு இலக்கத்தில் இருவாகனங்கள் பயன்படுத்தப்பட்டமை தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸ் சிறப்பு விசாரணைப்பிரிவினருக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சம்பவம்தொடர்பாகதெரியவருவதாவது:
யாழ்ப்பாணம் வள்ளிக்கரையைச் சேர்ந்த அ.ஜான்சன் என்பவர் கண்டியில் உள்ள சியபத பினான்ஸ் நிதி நிறுவனம் ஒன்றின் மூலம் சிபிஜே ஆர்4118 என்ற இலக்கத்தை உடைய டொல்பின் ரக வாகனமொன்றை கடன் அடிப்படையில் பெற்றுள்ளார்.

இவர் தன்னுடைய வாகன வரிப்பணத்தை கட்டுவதற்காக சென்றபொழுது இவருடைய பதிவு இலக்கத்தில் ஏற்கனவே பணம் கட்டப்பட்டு பதிவு இலக்கம்வெளியிடப்பட்டமைதொடர்பாக அறியப்பட்டதை அடுத்து யாழ்ப்பாணம் சிறப்புக் குற்றப் பொலிஸ் பிரிவில் முறைப்பாடு செய்துள்ளார்.

முறைப்பாட்டுக்கமைய பொலிஸாரின் தீவிர விசாரணைகளில் இந்த இலக்கத்தில் டபிள்யூபிஜேஆர் 4118 கொழும்பில் வாகனமொன்று இருப்பது உறுதி செய்யப்பட்டு இரு வாகனங்களும் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு வழக்குத் தொடரப்பட்டுள்ளது. முதற்கட்ட விசாரணை களில் கொழும்பு பதிவில் உள்ள வாகனப் பதிவே ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவும் கண்டிப் பதிவில் உள்ள வாகனம் ஏற்கனவே கை மாற்றப்பட்டுள்ளதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சரியானகுற்றவாளிகளை வெகு விரைவில் பொலிஸார் கைது செய்ய இருப்பதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (26)

# யாழ்.மாநகர சபையின் நிலையியல் குழுக்கள் நேற்று நியமிக்கப்பட்டன

யாழ்ப்பாணம், மே 9
யாழ்ப்பாணம்மாநகரசபைக்கானநிலையியல் குழுக்களுக்கான உறுப்பினர்கள் நேற்றைய மாநகர சபை அமர்வில் நியமிக்கப்பட்டனர்.

மாநகர சபைக்கான நிலையியல் குழுக்களாக நிதிக் குழு, பராமரிப்புக் குழு, சுகாதாரக் குழுக்களும் மேலதிகமாக இலஞ்சம், ஊழல்கண்காணிப்புக்குழு, பெண்கள், சிறுவர்விவகாரக் குழு, சமயம், கலாசாரவிவகாரக்குழு, கல்வி மற்றும் விளையாட்டு சார்ந்த குழு என மொத்தமாக ஏழு குழுக்கள் நியமிக்கப்பட்டன. ஒவ்வொரு குழுக்களுக்கும்ஆறு உறுப்பினர்கள்வீதம் நியமிக்கப்பட்டனர்.

யாழ்ப்பாணம் மாநகர சபைக்கான நிதிக் குழுவில் முதல்வர் தலைமையில்உறுப்பினர்களானஈசன்,அருள்குமரன், கிருபாகரன்,தனுஜன், திருமதி யோகேஸ்வரி ஆகியோர் நியமிக்கப்பட்டனர். பராமரிப்புக் குழுவில் உறுப்பினர்களான நித்தியானந்தன், மணிவண்ணன், ஜெயசீலன், திலீப், இளங்கோ, கிறேசியன் ஆகியோர் நியமிக்கப்பட்டனர், சுகாதாரக் குழுவில் உறுப்பினர்களான சிறில், தர்சானந்தன், பார்த்தீபன், கணேசராஜா, கிரிதரன், சத்தியசீலன் ஆகியோர்நியமிக்கப்பட்டனர். சமயம் மற்றும் கலாசாரம் சார்ந்த குழுவில் உறுப்பினர்களான பாலச்சந்திரன், சுபதிஸ், நிபாகிர், சுகந்தினி, குகேந்திரன், டேமியன் ஆகியோரும் இலஞ்சம்மற்றும்ஊழல்கண்காணிப்புக்குழுவில்உறுப்பினர்களானதனேந்திரன், நளினா, விஜயதட்சாயினி, மயூரன், சாந்தரூபன், ராஜீவ்காந் ஆகியோரும், பெண்கள் மற்றும் சிறுவர் விவகாரக் குழுவில் உறுப்பினர்களான ராகினி, மதிவதனி, மேரி அஞ்சலா, அஜந்தா, சுபாஜினி, ஜெயந்தினி ஆகியோரும் கல்வி மற்றும் விளையாட்டுக் குழுவில் குலேந்திரராஜா, நியாஸ், ஜெனன், பத்மமுரளி, செல்வவடிவேல், அனுசியா ஆகியோர் நியமிக்கப்பட்டனர். (21,8)

# குழப்பத்தின் பின் தெரிவானது யாழ்ப்பாண மாநகர நிதிக்குழு

யாழ்ப்பாணம், மே 9
யாழ்ப்பாணம்மாநகரசபையின் நிலையியல் குழுக்களில் ஒன்றான நிதிக்குழுவின் உறுப்பினர்களை நியமிப்பதில் ஆரம்பத்தில் குழப்பநிலை ஏற்பட்டு இறுதியில் சுமுகமாகத் தீர்க்கப்பட்டது.

மாநகர சபையின் நேற்றைய கூட்டத்தொடரின் போது மாநகர முதல்வர் நிலையியல்குழுக்களைஅமைப்பதற்கு அதற்கானஉறுப்பினர்களைநியமித்து அந்த உறுப்பினர்களின் பெயர்களை வாசித்தார். நிதிக்குழுவுக்கு ஐந்துஉறுப்பினர்கள்தெரிவுசெய்யப்பட்டிருந்தனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து முதல்வர்உள்ளிட்டமூன்றுஉறுப்பினர்களும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியில் இருந்து இரண்டு உறுப்பினர்களும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியில் இருந்ரு ஒரு உறுப்பினரும் இவ்வாறு தெரிவாகினர். இதற்குசபையின் அங்கீகாரத்தை முதல்வர் கோரினார். இதன்போது குறுக்கிட்ட சபை உறுப்பினர் றெமிடியஸ்தமதுகட்சிசார்பில்இரண்டு உறுப்பினர்களைநிதிக்குழுவுக்குச்சிபாரிசு செய்தார். அத்தோடு தமது கட்சியே மாநகர முதல்வர் தெரிவின் போது தமிழ்த்தேசியக்கூட்டமைப்புக்கு அடுத்ததாக அதிக வாக்குகளைப்பெற்றிருந்த நிலையில்அந்தக்கட்சிக்குஒருஉறுப்பினரையும், மூன்றாவதாகக்கூடியவாக்குகளைப்பெற்றதமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு இரண்டு ஆசனங்கள் வழங்கப்பட்டுள்ளது தவறானது. எனவே இந்தநிதிக்குழுவுக்கானஉறுப்பினர்களை நியமிப்பதை சபையின் வாக்கெடுப்புக்கு விட வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

இதனையடுத்து சபையின் செயலாளர் நிதிக்குழுவுக்கு ஐந்து உறுப்பினர்கள் நியமிக்க வேண்டும் எனவும், அதற்கு மேலாகஉறுப்பினர்கள்தெரிவுசெய்யப்பட்டால்அதுசபையின்வாக்கெடுப்புக்கு விடப்பட வேண்டும் எனத் தெளிவுபடுத்தினார். இதன்படி அதற்கான வாக்கு சீட்டுக்களைத் தயாரிக்கும் கால நேரத்தில் தேநீர் இடைவேளை விடப்பட்டது. தேநீர் இடைவேளையின் பின் மீண்டும் சபை ஆரம்பமானது. இதன்போது கட்சிகளுக்கு இணக்கப்பாடு வாக்கெடுப்பைத்தவிர்க்கத்தீர்மானித்துள்ளோம் என்று மாநகர முதல்வர் சபையில் அறிவித்தார். (21,8)

## தெளிவூட்டல் செயலமர்வு

யாழ்ப்பாணம். மே 9
யாழ்ப்பாணக்கல்லூரிபட்டப்படிப்புகள் அலகினர் தொண்டமானாறு வெளிக்கள நிலையத்தின் அனுசரணையுடன் வடமராட்சிகல்விவலயப்பாடசாலைகளில் 2019 ஆம் ஆண்டுஜி.சி.ஈ உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள கணித விஞ்ஞான பாட மாணவர்களுக்கு மறுசீரமைக்கப்பட்ட புதிய பாடத்திட்டம் தொடர்பான தெளிவூட்டல் செயலமர்வு எதிர்வரும் 17 ஆம் திகதி வியாழக்கிழமைகாலை 8.30 மணிக்குநெல்லியடிமத்தியமகாவித்தியாலயமண்டபத்தில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (9)

## அன்னாசிச்செய்கையில் ஈடுபடுவதற்கு ஆர்வம்

யாழ்ப்பாணம், மே 9
யாழ். மாவட்டத்தில் இம்முறை போகத்தின் போது செய்கையாளர்கள் சிலர் அன்னாசிச்செய்கையில்ஈடுபடுவதற்கு ஆர்வம் காட்டியுள்ளனர்.

உரும்பிராய், சாவகச்சேரி, எழுதுமட்டுவாள் ஆகிய பிரதேசங்களில் இந்த அன்னாசிச் செய்கையில் ஈடுபடுவதற்கு மாவட்டவிவசாயதிணைக்களத்தினால் சுமார் பத்து வரையிலான செய்கையாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு அன்னாசிச்செய்கையை மேற்கொள்வதற்குரியஅன்னாசிஉறிஞ்சிகளை பெற்றுக் கொடுப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஒவ்வொரு செய்கையாளர்களுக்கும் ஆயிரம்வரையிலானஅன்னாசிஉறிஞ்சிகள் வழங்கப்படவுள்ளன. ஏற்கனவே இப்பிரதேசங்களில் செய்கையாளர்கள் அன்னாசிச் செய்கையில் ஈடுபட்டு வெற்றியளித்ததாக தெரிவிக்கப்பட்டது. (17)

*மாதாந்தம்*

# அவசரதேவைகளுக்கு 5 இலட்சம் ரூபா நிதி

*மாநகர முதல்வர் செலவு செய்யலாம்*

யாழ்ப்பாணம், மே 9
யாழ்ப்பாணம் மாநகர சபையின் முதல்வர் உச்ச எல்லைப் பணமாக 5 இலட்சம் ரூபா வரையில் அவசர தேவைகளுக்குச் செலவு செய்யலாம் என்று அங்கீகாரம் வழங்கியுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் அமர்வு மாநகர முதல்வர் இ.ஆர்னோல்ட் தலைமையில் நேற்று இடம்பெற்றது. இந்த அமர்வில்சபைக்கானநிலையியல்குழுக்கள்நியமித்தல் மற்றும் சபை அங்கீகாரம் பெறாது முதல்வர் அவசர நிலையில் செலவழிக்கக் கூடிய உச்ச எல்லை நிதி தொடர்பாகவும் ஆராய்யப்படது. இதில் பல உறுப்பினர்களும் தமது கருத்துகளை முன்வைத்தனர்.

அனைத்து உறுப்பினர்களின் கருத்துக்களையும் கேட்டறிந்த பின்னர் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் மணிவண்ணன் முன்வைத்த் முன்மொழிவைஅனைத்துஉறுப்பினர்களும் ஏகமனதாக ஏற்றுக்கொண்டனர். அவர் தனது முன்மொழிவில் மாதாந்தம் ஒரு முறை அவசர தேவை ஏற்படும் போது மாநகர முதல்வர் செலவு செய்யக் கூடிய அதியுச்ச தொகையாக 5 இலட்சம் ரூபாயும், மாநகர சபையின் ஆணையாளர் அதியுச்ச தொகையாக ஒரு இலட்சத்து 25 ஆயிரம் ரூபா வரையும் செலவு செய்ய முடியும். அதற்கு நாம் அனுமதி கொடுப்போம் என்றார். ஏனைய உறுப்பினர்களும் அதனை ஏற்றுக்கொண்டனர். மேலும் குறிப்பிட்ட தொகைக்கு அதிக நிதி தேவைப்படும் பட்சத்தில் சபையின் அமர்வில் அங்கீகாரத்துக்காகச் சமர்ப்பித்து தேவையான நிதியைப் பெற்றுக் கொள்வது என முடிவு செய்யப்பட்டது. அத்துடன் யாழ்ப்பாணம் மாநகர சபையின் நிதிக் குழுவால்செலவுசெய்யக்கூடியஅதிஉச்ச தொகையாக பத்து இலட்சம் ரூபா வரை தீர்மானிக்கப்பட்டுள்ளது. (21,8)

## மானிய அடிப்படையில் வீட்டு திருத்தத்துக்கு 4 பேர் தெரிவு

சாவகச்சேரி மே 9

சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் "கிரியபியஸ" திட்டத்தின் கீழ் தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த நான்கு பேர் மானிய அடிப்படையில் வீடு திருத்தத்திற்கு பிரதேச சமுர்த்தி அபிவிருத்திப் பிரிவினரால் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி, கைதடி, கொடிகாமம், வரணி ஆகிய நான்கு சமுர்த்தி வலயங்களிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட தலா ஒருவருக்கு ஒரு இலட்சம் ரூபா வீதம் வழங்கப்படவுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டது.

சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தினால் பொருளாதார நிலையில் பின்தங்கி வாழும் குடும்பங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்டு வீடு திருத்தத்திற்கு என தலா ஒரு இலட்சம் ரூபா வீதம் வருடாந்தம் வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (9)

## தொழில் மேம்பாட்டுப் பயிற்சி வகுப்புகள்

சாவகச்சேரி மே 9

தென்மராட்சி பிரதேச செயலக பிரிவில் பணியாற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு தொழில் மேம்பாட்டுக்கான மூன்று நாள் பயிற்சி வகுப்புகள் எதிர்வரும் 13 ஆம் திகதி பொலனறுவையில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வேள்ட் விஷன் லங்கா நிறுவன அனுசரணையுடன் நடத்தப்படும் பயிற்சி நெறியில் நீர்வள முகாமைத்துவம் மண் அறுவடையின் முன்னரான தொழில்நுட்பம் ஆகியவை தொடர்பான பயிற்சிகள் வழங்கப்படவள்ளன.

இந்தப் பயிற்சி நெறியில் முதற்கட்டமாக பிரதேச செயலகத்தில் பணியாற்றும் 30 பொருளாதார அபிவிருத்தி அலவலர்கள் பங்குபற்றவுள்ளனர் என தெரிவிக்கப்பட்டது. (9)

ஒய்வுபெற்றோருக்கு

## ஓய்வூதிய விளக்க விவரம் இதுவரை வழங்கவில்லை

அலுவலர் பற்றாக்குறையே காரணம்

சாவகச்சேரி, மே 9

சேவையிலிருந்து ஓய்வு பெற்றபோதிலும் ஓய்வூதியர்களின் ஓய்வூதியம் தொடர்பான விபரங்கள் இன்னமும் தாம் கடமையாற்றிய அலுவலகத்தால் ஓய்வூதியத் திணைக்களத்துக்கு அனுப்பப்படவில்லை என்று ஓய்வுபெற்றவர்கள் கவலை தெரிவித்தனர். ஓய்வூதியம் செய்து அனுப்புவதற்கு அலுவலர் இல்லாததால் விபரங்கள் அனுப்ப முடியவில்லை யென அலுவலகப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

அரச பணியாளர் ஒருவர் சேவையிலிருந்து ஓய்வு பெறுவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் உரிய படிவங்கள் அனுப்பப்பட்டு ஓய்வூதியத் திணைக்களத்தின் அனுமதி கிடைத்த பின்னரே ஓய்வூதியம் பெறமுடியும். இந்தநிலையில் உரிய விவரங்கள் அனுப்பப்படாததால் தாம் ஓய்வுபெற்று ஆறு மாதங்களுக்கு மேலாகியும் விவரங்கள் திணைக்களத்துக்கு அனுப்பப்படவில்லையென்று ஓய்வுபெற்ற பணியாளர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக அலுவலக பொறுப்பதிகாரியுடன் தொடர்பு கொண்டபோது "ஓய்வுபெறுபவர்களின் விவரங்கள் திணைக்களத்துக்கு அனுப்புவதற்கு அலுவலகத்தில் ஓய்வூதியப் படிவங்கள் தயாரிக்கக்கூடிய அலுவலர் இல்லை. அதனால் இன்னமும் அனுப்பவில்லை. வேறு அலுவலகங்களில் உள்ள அனுபவம் உள்ளவர்களின் உதவியுடன் விவரங்களை அனுப்ப ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன" என்று தெரிவித்தார்.

சேவையிலிருந்து பணியாளர் ஓய்வுபெறும் மாதத்தின் அடுத்த மாதம் தொடக்கம் ஓய்வூதியம் வழங்கப்படல் வேண்டுமென்று அரசு அறிவித்துள்ளது.


ஆனால் இந்த அலுவலகத்தில் மாதக்கணக்கில் உரிய படிவங்கள் ஓய்வூதியத் திணைக்களத்துக்கு அனுப்பப்படவில்லை என்று ஓய்வூதியர்கள் கவலை தெரிவித்தனர். (9)

## மருதங்கேணி கோட்ட புத்தாண்டு நிகழ்வு

வடமராட்சி, மே 9

மருதங்கேணி கோட்ட சித்திரைப் புத்தாண்டு நிகழ்வு உடுத்துறை மகாவித்தியாலயத்தில் இன்று புதன்கிழமை காலை 8 மணிக்கு கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.திரவியராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக பருத்தித்துறை பிரதேச செயலர் அ.ச. அரியகுமார், சிறப்பு விருந்தினராக உடுத்துறை மகாவித்தியாலயத்தின் அதிபர் பே.புவனேந்திரராசா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (173)





## நினைவுதினமும் குருதிக்கொடை முகாமும்

யாழ்ப்பாணம் மே 9

உபபொலிஸ்பரிசோதகர் அமரர் ஆனந்தீஸ்வரன் துரைராஜசிங்கத்தின் ஓர் ஆண்டு நினைவு தினமும் குருதிக் கொடை முகாமும் சித்திரமேழி பழனியானந்தன் சனசமுக நிலையத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

இதன்போது பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் உட்பட 40 பேர் குருதிக்கொடை வழங்கினர்.

கொடையாளர்களுக்கும் நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்களிற்கும் ஞாபகார்த்தமாக மா மரக்கன்றுகள் வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (114)

போக்குவரத்துக்கு இடையூறாகத் திரியும்

## கட்டாக்காலிகள் பிடிபட்டால் இனி ஏலத்தில் விற்கப்படும்

பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றம்

**ஊர்காவற்றுறை, மே 9**

**ஊர்காவற்றுறை பிரதேசத்தில் போக்குவரத்துக்கு இடையூறான வகையில் வீதியில் அலைந்து திரியும் கட்டாக்காலிகள் பிரதேச சபையினால் பிடிக்கப்பட்டு ஏலத்தில் விற்கப்படும் எனப் பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் இரண்டாவது மாதாந்தக் கூட்டம் சபை மண்டபத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை தவிசாளர் ம.ஜெயகாந்தன் தலைமையில் நடைபெற்றது. இதன்போது கட்டாக்காலிகளின் தொல்லை குறித்தும் இதனால் மக்களுக்கும் போக்குவரத்திற்கும் ஏற்படும் இடையூறுகள் பற்றியும் விரிவாக ஆராயப்பட்டு இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இத்தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஆடு மாடுகளை வளர்ப்போர் அவற்றைக்கட்டிவளர்க்குமாறும் தவறும்பட்சத்தில் இம்மாதம் 31ஆம் திகதிக்குப் பின்னர் வீதிகளில் அலைந்து திரியும் கட்டாக்காலிகள் பிரதேச சபையினால் பிடிக்கப்பட்டு 1987 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபையின் சட்டத்தின் 66ஆம் பிரிவுக்கு அமைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (115)

## மாணவர்களுக்கு கணித உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு

தென்மராட்சி மே. 9

கச்சாய் அ.த.க. பாடசாலையில் தரம் 6 தொடக்கம் 11 வரையான வகுப்புகளில் கற்கும் மாணவர்களுக்கு கணித உபகரணப் பெட்டிகள் வழங்கும் நிகழ்வு நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை காலை 7.45 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் கா.குணசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலையின் மாணவர் நாடாளுமன்ற கல்வி மனிதவள அபிவிருத்தி மற்றும் தகவல்தொழில்நுட்ப அமைச்சின் ஏற்பாட்டில் பிரான்ஸ் நாட்டில் வதியும் புங்குடுதீவைச் சேர்ந்த தி.லோகேஸ்வரன் பிரான்ஸில் உள்ள பாடசாலை பழைய மாணவர் சங்கத்தின் ஊடாக வழங்கிய நிதியின் மூலம் கொள்வனவு செய்து மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (9)





## ஆண்டு நிறைவும், நிறுவுநர் சிலை திறப்பும்

சாவகச்சேரி மே. 9

மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயத்தின் 110 ஆவது ஆண்டு நிறைவும், நிறுவுநர் சிலை திறப்பும், வித்தியாலய பரிசில் நாள் நிகழ்வும் நேற்று அதிபர் க.உதயகுமாரன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ். மாவட்டச்செயலர் நா.வேதநாயகன் கலந்துகொண்டு நிறுவுநர் முருகேசு முத்துத்தம்பியின் சிலையைத் திறந்து வைத்ததுடன் மகாலிங்கம் அரங்கில் நடைபெற்ற நிகழ்வில் சிலையை நிறுவிய யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளரான சிற்பக் கலைஞரை மதிப்பளித்ததுடன் வித்தியாலய 110 ஆவது ஆண்டு நினைவு மலரினையும் வெளியிட்டு வைத்தார். நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி கோட்டக்கல்வி அலுவலர் வ.நடராசா, தென்மராட்சி கல்வி வலய கணக்காளர் சி.நந்தகுமார் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நூலின் ஆய்வுரையினை கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை பிரதி அதிபர் ச.லலீசன் நிகழ்த்தினார். (9)

## குருபூசையும் பரிசளிப்பு நிகழ்வும்

யாழ்ப்பாணம், மே 9

ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய சைவ சமய அபிவிருத்திக் கழகத்தினால் திருநாவுக்கரசு நாயனார் குருபூசையும் பரிசளிப்பு நிகழ்வும் ஆலய மண்டபத்தில் இன்று புதன்கிழமை மாலை 5 மணிக்கு இரா. செல்வவடிவேல் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தநிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை அதிபர் பே.தனபாலசிங்கம் கலந்துகொள்ளவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

## நிர்வாகத் தெரிவு

தென்மராட்சி மே. 9

பருத்தித்துறை தும்பளைத் தெற்கு திருவள்ளுவர் சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் நடப்பு வருட நிர்வாகத் தெரிவும் நிலைய மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

பிரதேச சனசமூக அபிவிருத்தி அலுவலர் இளமுருகன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் வே. இளவேந்தன் உபதலைவர் செ.செல்வச்சந்திரன் செயலாளர் க. பாலசந்திரன் பொருளாளர் வே.கபிரியேல் பீற்றர் உபசெயலாளர் இ.மேனன் கணக்காய்வாளர் மா.கண்ணதாசன் ஆகியோரும் நிர்வாக உறுப்பினர்களாக ப.திருச்செல்வம் ம. மேரிவினி விக்ரர் ,செ.சந்திரசேகரன், க.பாஸ்கரன் ெ.கேஜினி, ப.புஸ்பராணி ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (9)

## வடக்கு...

(யாழ்ப்பாணம் போதன மருத்துவமனை தவிர்த்து) அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எதிர்வரும் திங்கட்கிழமை அடையாள பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை நடத்தவுள்ளது. திங்கட்கிழமை காலை 8 மணி முதல் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் ஆரம்பிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அந்தச் சங்கம் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது அரச மருத்துவ அதிகாரிகளுக்கு வழங்கப்பட வேண்டிய மேலதிக கொடுப்பனவுகள் (புதிய சுற்றறிக்கையின்படி) கடந்த 4 மாதங்களாக வழங்கப்படவில்லை. வடக்கு மாகாணத்தில் பணிபுரியும் மருத்துவர்களுக்கு மட்டுமே அவை வழங்கப்படவில்லை. இது தொடர்பாக அரச மருத்து அதிகாரிகள் தாய்ச் சங்கம் பல தடவைகள் வடக்கு மாகாண சுகாதார அதிகாரிகளிடம் சுட்டிக்காட்டி, நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரியிருந்து.

அது தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாத நிலையில் வடக்கு மாகாண அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வடக்கு மாகாண சுகாதார அமைச்சருடனும், மாகாண சுகாதாரப் பணிப்பாளருடனும் பேசசு நடத்தியது. மேலதிக கொடுப்பனவுகள் சிறிது காலத்தில் வழங்கப்படும் என்று அவர்கள் உறுதியளித்தனர். எனினும் அவை வழங்கப்படவில்லை.

இலங்கையின் அனைத்து மாகாணங்களுக்கும் (கிழக்கு மாகாணம் உட்பட) இந்தக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ள நிலையில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சு அதிகாரிகளின் அசமந்தப் போக்கால் நாம் பணிப்புறக்கணிப்பு நடத்தும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

பணிப்புறக்கணிப்பால் நோயாளர்களுக்கு ஏற்படும் சிரமங்களுக்கு வடக்கு மாகாண சபையும், அதன் அதிகாரிகளுமே பொறுப்புக் கூற வேண்டும். பணிப் புறக்கணிப்பு நடத்தப்படும் நேரத்தில் உயிர்காக்கும் அவசர சிகிச்சைகள் அனைத்து மருத்துமனைகளிலும் வழங்கப்படும். எமக்கு உரிய பதில் வழங்கப்படாவிட்டால் போராட்டம் மேலும் விரிவுபடுத்தப்படும். - என்றுள்ளது. (ற-21)

## மாநகர...

றது. சபையின் உறுப்பினரான ந.லோகதயாளன் இந்த விடயம் தொடர்பில் கோரிக்கை ஒன்றை முன்மொழிந்தார். கடந்த கால ஆட்சியில் சபையின் நிதி தெரிந்தே இழக்கப்பட்டமை தொடர்பாக விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று அவர் அதில் குறிப்பிட்டார்.

முன்னர் ஆட்சி செய்த கட்சி சார் உறுப்பினர் ஒருவர் நான் இங்கு எழுந்தமானமாகக் குற்றஞ் சாட்டுகின்றேன் என்று குறிப்பிட்டிருந்தார். எனினும் அந்த விடயத்தை ஆவண ரீதியாக நிரூபிக்க முடியும்.

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குச் சொந்தமான யாழ்ப்பாணம் நகரின் மத்தியில் உள்ள கடைத் தொகுதியின் மோல்மாடியில் இலக்கம் 5 கடையை சபையின் அனுமதி பெறாது முன்னாள் முதல்வர் தன்னிச்சையாக வழங்கியுள்ளார்.

2014ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் முதல் 2017ஆம் ஆண்டு மே மாதம் வரையான காலப்பகுதிக்கான வாடகை மற்றும் வரி, தண்டம் உட்பட 10 லட்சத்து 16 ஆயிரம் ரூபா சபைக்குச் செலுத்தப்படவுள்ளது. அந்தப் பணம் சபைக்குச் செலுத்தப்படவில்லை. இலக்கம் 2 கடையை மகேஸ்வரி நிதியத்துக்கு வழங்கியமைக்காக 56 ஆயிரத்து 12 ரூபா நிலுவை உள்ளது.

சங்கிலியின் வீதியில் உள்ள சபைக்கான கட்டம் புல்னாய்வாளர்களுக்குக் கொடுக்கப்பட்டதால் அந்தக் கட்டடத்தில் இருந்த ஆரம்ப சுகாதார நிலையம் 22 மாதங்களாக தனியார் வீடொன்றில் வாடகை அடிப்படையில் இயங்குகின்றது. அதற்காக மாதம் ஒன்றுக்குப் 13 ஆயிரம் ரூபா வழங்கப்படுகின்றது. இதனால் 2 லட்சத்து 76 ஆயிரம் ரூபா வீணடிக்கப்பட்டுள்ளது.

இந்த மூன்று சம்பவங்களுக்குமான சான்று ஆவணங்கள் என் வசம் உண்டு. சபைக்கு ஏற்பட்ட நட்டம் மற்றும் நிதி கிடைக்காமை என்பவற்றால் 13 லட்சத்து 48 ஆயிரத்து 12 ரூபா வீணடிக்கப்பட்டமை ஆவணங்கள் மூலம் உறுதியாகின்றது. இது போன்ற வேறு சம்பவங்களும் இருப்பின் அவற்றையும் கோரிப் பெற்று ஒரு வலுவான குழுவை நியமித்து விசாரணை செய்து சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்த வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார். தன் வசமுள்ள ஆவணங்களையும் சபையில் காண்பித்தார்.

முன்னாள் மேயரும், தற்போதைய உறுப்பினருமான யோகேஸ்வரி பற்குணராசா இது தொடர்பில் கருத்துத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் நகரில் வழங்கிய கட்டடங்கள் சேதமடைந்த நிலையில் எவரும் பயன்படுத்தப்படாது இருந்தது. வருமானம் ஈட்டும் வகையில் அவை வழங்கப்பட்டன. எமது சபையின் ஆட்சிக்காலம் வரை வாடகை செலுத்தப்பட்டது. அதன்பின்னர் வாடகை பெறாதது அலுவலர்களின் தவறு. சங்கிலியன் வீதியில் உள்ள கட்டடம் புலனாய்வாளர்களுக்கு வழங்கப்படவில்லை. அந்தப் பகுதியில் கால் நடைத்திருட்டு இடம்பெறுகின்றது என்றும் அதைக் கட்டுப்படுத்த பொலிஸ் காவலரண் ஒன்று அமைக்க வேண்டும் என்று மாவட்டக் குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது. அமைச்சராக இருந்த டக்ளஸ் தேவானந்தாவால் அந்தப் பகுதியில் உடனடியாக ஒரு இடத்தை வழங்க வேண்டும் என்று பணித்தார். அந்த அடிப்படையில் பொலிஸாருக்குக் கட்டடம் வழங்கப்பட்டது. புலனாய்வாளர்களுக்கு வழங்கப்படவில்லை என்று அவர் தெரிவித்தார்.

பாதுகாப்புக்காகப் பொலிஸார் இருந்தார்கள் என்றால் பொலிஸ் பிரிவு என பெயர் பலகை மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். குறைந்தபட்சம் அங்கிருந்தவர்கள் பொலிஸ் சீருடையிலாவது இருந்திருக்க வேண்டும். அவ்வாறு ஏதாவது இருந்ததா? என்று .கேள்வி எழுப்பினார் உறுப்பினர் ந.லோகதயாளன்.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் உறுப்பினர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் இந்தச் சந்தர்ப்பத்தில் கருத்துத் தெரிவித்தார்.

இதை ஒத்த விடயம் ஒன்றைக் குறிப்பிட வேண்டும். யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் அமைக்கப்பட்ட கட்டடத் தொகுதியில் உள்ள 54 கடைகளில் 32 கடைகள் மட்டும் நிபந்தனைகளுக்கு அமைய விற்பனை செய்யப்பட்டு மாநகர சபையால் பொறுப்பேற்கப்பட்டு அவற்றின் வருமானம் சபைக்கு வருகின்றது. ஆனால் ஏனைய கடைகளும் இயங்குவதாகவே தெரிகின்றது. அவற்றின் ஒப்பந்தகாரர் சபைக்கு இன்னும் உத்தியோகபூர்வமாக அறிவித்ததாகத் தெரியவில்லை. அப்படியானால் ஒப்பந்தகாரரின் அனுமதி இன்றி அந்தக் கட்டடம் எடுக்கப்பட்டுள்ளதா?. இது தொடர்பில் வடக்கு மாகாண சபை ஒரு விசாரணையை நடத்தியிருந்தது. அதன் அறிக்கை கோரிப் பெற்று அந்த விவரங்களை வெளியிட வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார்.

உறுப்பினர் ந.லோகதயாளனின் கோரிக்கையை உறுப்பினர் ப.தர்சானந் வழிமொழிய தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது.

வடக்கு மாகாண சபையின் ஊடாக நடத்தப்பட்ட விசாரணை அறிக்கையைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்று சபை முதல்வர் தெரிவித்தார். (ற-8,105)

## பல்கலை...

பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் கலந்துரையாடாது என்று அந்த ஒன்றியத்தின் தலைவர் கிருஸ்ணமேனன் தெரிவித்தார்.

நினைவேந்தல் நிகழ்வை நடத்துவது தொடர்பில் வடக்கு மாகாண முதலமைச்சர், உறுப்பினர்கள், யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தினர் இன்று சந்திப்பு நடத்துவர் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. அது தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் முன்னெடுத்தது. அதில் தமிழ் அரசியல் கட்சிகள், பொது அமைப்புகள், சிவில் அமைப்புகள் என அனைவரும் ஒற்றுமையுடன் ஆதரவு தரவேண்டும் என்று மாணவர் ஒன்றியம் கோரியிருந்தது.

எனினும் கடந்த 3 ஆண்டுகளாக நினைவேந்தலை மாகாண சபையே நடத்துகிறது. இந்த வருடமும் வடக்கு மாகாணசபை நடத்தும். அதற்குத் தேவையான உதவிகளை மாணவர் ஒன்றியம் வழங்கலாம் என்று மாகாண முதலமைச்சர் ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார்.

அதையடுத்து மாணவர் ஒன்றியத்துக்கும், வடக்கு மாகாணசபைக்குமிடையில் நிகழ்வை நடத்துவது தொடர்பான சிக்கல் நிலை ஏற்பட்டிருந்தது. அதையடுத்து வடக்கு மாகாண சபை முதலமைச்சர் உள்ளிட்ட அமைச்சர்களுக்கும் யாழ்ப்பாண மாணவர் ஒன்றியத்தின் பிரதிநிதிகளுக்குமிடையில் இன்று சந்திப்பு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த ஏற்பாட்டை வடக்கு மாகாண முதல்வர் முன்னெடுத்திருந்தார்.

அந்தக் கலந்துரையாடலில் கலந்து கொள்ளப் போவதில்லை என்று மாணவர் ஒன்றியத்தின் தலைவர் நேற்று இரவு திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபை இந்த நிகழ்வை அரசியலாக்க முனைகிறது. அதில் எமக்கு உடன்பாடில்லை அதனாலேயே இந்தக் கலந்துரையாடலில் நாங்கள் கலந்து கொள்ளவில்லை. எனினும் மக்கள், சிவில் சமூகத்தினர், பொது அமைப்புகளுடன் இணைந்து முள்ளி வாய்க்கால் நினைவு தினத்தை நடத்துவதற்கான ஒழுங்கமைப்புகளைத் தொடர்ந்தும் முன்னெடுப்போம் என்று அவர் குறிப்பிட்டார். (ற-21)

## முட்டைக்கு...

பரபரப்பானது.

அமர்வில் உறுப்பினர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது. அவர்கள் தாமாகவே பரிமாறிக் கொள்ளும் வகையில் (செல்வ் சேவிஸ்) மதிய உணவு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. உணவுகளில் முட்டை, இறைச்சி வழங்க இருவர் அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்தனர்.

அதைக் கண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் ஒருவருக்கு கோபம் வந்துவிட்டது. "மக்களால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களான எங்கள் மீது நம்பிக்கை இல்லையா?. முட்டை, இறைச்சியை களவெடுத்து விடுவோம் என்றா ஆள்கள் போட்டுள்ளீர்கள்?"என்று அங்கிருந்த அதிகாரிகள் மீது சீறிப் பாய்ந்தார். அதனால் அந்த இடத்தில் சற்றுச் சலசலப்பு ஏற்பட்டது. (ற-8)

## தமிழர்...

கொண்டு, தாம் செய்யும் அத்தனை விடயங்களுக்கும் விடுதலை புலிகளைச் சாட்சிக்கு அழைப்பது வேடிக்கை.

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் செலாளர் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்தார். அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் உள்ளதாவது:

2009ஆம் ஆண்டு அரச படையினர் போர் தர்மங்களை மீறி செயற்பட்டு கிளிநொச்சியைக் கைப்பற்றியதால் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிர்பாராத பின்னடைவு ஏற்பட்டமை தெரிந்ததே. ஆனால் அப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மௌனமே சாதித்தது. அதன் விளைவே மன்னார், வவுனியா, கிளிநொச்சி உட்பட முள்ளிவாய்க்கால் வரை தம் சொத்துக்களை இழந்து, வெறுங்கையுடன் வாழ எம் மக்கள் நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களை, பல்லாயிரக்கணக்கான அப்பாவி மக்களின் உயிர்களை காப்பாற்றும்படியும், தவறினால் தங்களின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை துறக்க வேண்டும் என்றும் 11.01.2009ஆம் திகதியில் பகிரங்க அறிக்கை மூலம் தமிழர் விடுதலை கூட்டணி கோரியது. அவர்கள் அந்தக் கோரிக்கையை பொருட்படுத்தவில்லை.

தம்பி பிரபாகரனுக்கு 15.03.2009ஆம் திகதியில் 81ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த மூன்று இலட்சத்து முப்பதாயிரம் மக்களின் சாபத்திற்கு விடுதலைப்புலிகளோ, அவர்களின் சந்ததியோ ஆளாகாமல் மக்களை விடுவிக்கும்படி கேட்டிருந்தேன். இறுதி மூச்சுவரை போராடுவதே இலட்சியமாக கொண்ட ஓர் அமைப்பு என்ற வகையில் எனது கோரிக்கைக்கு செவி சாய்க்காமை பெரும் குற்றமாக எனக்கு தெரியவில்லை.

இதற்கிடையில் சகல தமிழ்கட்சி தலைவர்களையும் 2009ஆம் ஆண்டு மார்ச் 26ம் திகதி 6.30 மணிக்கு அரசியல் நிலமைகள் பற்றி ஆராய்வதற்காக அரச தலைவரால் கூட்டப்பட்ட ஆலோசனை கூட்டத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பினர் தவிர் ஏனைய கட்சிப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

தில் பல்வேறு விடயங்கள், போர் நிறுத்தம், உணவுப் பிரச்சினை போன்றவை ஆராயப்பட்டன. அரச தலைவர் 55ஆயிரம் மக்கள் வெளியேறிவிட்டார்கள் என்றும், இன்னும் 85ஆயிரம் பேர் மட்டுமே வன்னியில் விடப்பட்டுள்ளார்கள் எனவும் கூற, அதை மறுத்து மூன்று இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் உணவின்றிச் சிரமப்படுகின்றனர் என்ற எனது கூற்றை மறுத்துரைத்த அரச தலைவர் பின்னர் மூன்று லட்சம் மக்களுக்கும் சேர்த்து அரசு உணவு அனுப்புகின்றோம் என்று மிக்க கோபத்துடன் என்னிடம் கூறிவிட்டு எழுந்து சென்றமை அனைவரும் அறிந்தது.

11.04.2009ஆம் திகதி இந்திய வெளிவிவகார செயலர் சிவ்சங்கர் மேனன் தமிழ் தேசிய கூட்டமைப்பினரை உடன் டெல்லிக்கு வருமாறு அழைத்தபோது, போரை நிறுத்தினால்தான் வருவோம் என கூட்டமைப்பினர் அறிவித்திருந்தனர். நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசாவுக்கு நான் எழுதிய கடிதத்தில் வெளிவிவகார அமைச்சரைச் சந்திக்காத அவரது தவறைச் சுட்டிக்காட்டியிருந்தேன்.

மே மாதம் 7ஆம் திகதி 2009ஆம் ஆண்டு இலங்கை வந்த பிரித்தானிய பாராளுமன்ற குழுவினரிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் "இந்திய தேர்தல் முடிவடைந்ததும் பெரும் அழிவுக்கான அபாயம் உள்ளது என்றும், அப்பாவி மக்களை உலக நாடுகள் காப்பாற்ற வேண்டும்' எனவும் கூறினர் என்று பத்திரிகைகளில் செய்தி வந்திருந்தது. எம்மக்களை காப்பாற்ற தேடி வந்த வாய்ப்புக்கள் அத்தனையையும், விளைவுகளை சிந்திக்காது தமிழ் தேசிய கூட்டமைப் பின் தலைமை, குறிப்பாக தமிழரசுக் கட்சியின் முக்கிய தலைவர்கள் தட்டிக் கழித்தனர்.

எம்மினத்தின் காவலர்கள் என கூறிக்கொண்டு, ஏனைய சகல அமைப்புக்களையும் மட்டம் தட்டி செயற்பட்டுவந்த தமிழ் தேசிய கூட்டமைப்பினர், தமது குற்றங்களை மறைப்பதற்காக இந்தியாவிலே அமைக்கப்பட்ட நினைவு சின்னம் போன்று முள்ளிவாய்க்காலில் அமைக்க போகின்றோம் என்று தம்பட்டம் அடிப்பது பல்லாயிர கணக்கில் உயிரை இழந்த அப்பாவி மக்கள் மற்றும் போராளிகளையும் ஏளனம் செய்வதாக நான் கருதுகின்றேன்.

அன்புள்ளம் கொண்ட தமிழ் மக்களுக்கு எனது தாழ்மையான வேண்டுகோள். எவரும் இந்த விடயத்தில் அரசியல் இலாபம் தேட முயற்சிக்காமல், சம்பவம் நடைபெற்ற இடத்தில் அமைதியான முறையில் நினைவு நாளைக் கடைப்பிடிக்க வேண்டும் என வேண்டிக்கொள்கின்றேன். தூபி அமைப்பது தொடர்பில் அரசியல் சார்பற்ற ஓர் பொது அமைப்பினர் பொறுப்பேற்பதே பொருத்தமாகும். என்றுள்ளது. (ற)

## வழி நடத்தல்...

டம் நடைபெறவில்லை.

மே மாதத்துக்குரிய இரண்டாவது நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் அல்லது ஜூன் மாத ஆரம்பத்தில்தான் அதற்கான சாத்தியம் உள்ளது என அறியமுடிகின்றது.

வழிநடத்தல் குழு தனது இடைக்கால அறிக்கையை முன்வைத்துள்ள போதும் கடந்த ஐந்து மாதங்களுக்கு மேலாக அதன் செயற்பாடுகள் முடங்கியுள்ளன.

புதிய அரசமைப்பு அவசியமில்லை என்று மகாநாயக்க தேரர்கள் வலியுறுத்தியுள்ளனர். சிறிலங்கா சுதந்திரக் கட்சி, மகிந்த அணியான கூட்டு எதிரணி ஆகியனவும் அந்த நிலைப்பாட்டில்தான் உள்ளன.

முழுமையானதொரு அரசமைப்பு மறுசீரமைப்பு அவசியம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் முற்போக்குக் கூட்டணி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உட்பட சிறுபான்மையினக் கட்சிகள் வலியுறுத்துகின்றன. இந்த நிலைமையில் உள்ளூராட்சி சபைத் தேர்தலும் நடைபெற்றது. இவ்வாறான செயற்பாடுகள் காரணமாகவே வழிநடத்தல் குழுவின் கூட்டம் நிறுத்தப்பட்டது.

எட்டாவது நாடாளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத் தொடர் ஆரம்பமான கையோடு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான 21 பேரடங்கிய வழிநடத்தல் குழுவின் கூட்டம் நேற்று நடைபெறும் என்று எதிர்பார்க்கப்பட்டது. எனினும் அது நடைபெறவில்லை. (ற-5)

## புலிகளுடைய...

விட்டுள்ளன. நேற்று வவுனியாவிலும் ஆயுதங்களைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் கடற்படையினர் ஈடுபட்டனர்.

கூமாங்குளம், நூலக வீதியில் உள்ள சின்னம்மன் ஆலயத்துக்கு முன்பாக உள்ள தனியார் காணியில் தேடுதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. கடற்படையினரின் கொழும்பு அலுவலகத்துக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமையவே இந்தத் தேடுதல் நடத்தப்பட்டது என்று கூறப்படுகின்றது. அநுராதபுரம் பூனாவ கடற்படை முகாமைச் சேர்ந்தவர்களே தேடுதலில் ஈடுபட்டனர்.

நேற்றுக் காலை நீதிமன்ற அனுமதி பெற்று இந்தத் தேடுதல் நடத்தப்பட்டது. அடையாளப்படுத்தப்பட்ட பகுதியில் நேற்று மாலை வரை அகழ்வுப் பணிகள் நடைபெற்றன. சுமார் 10 அடி ஆழம்வரை அகழப்பட்டபோதும் எதுவும் கிடைக்கவில்லை. காணியின் ஏனைய பகுதிகளையும் அகழ்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

அகழ்வுப் பணிகள் நடந்த பகுதிக்கு வவுனியா பொலிஸார் பாதுகாப்பு வழங்கினர். செய்தியாளர்கள் செய்தி சேகரிக்க அனுமதிக்கப்படவில்லை. திடீரென முன்னெடுக்கப்பட்ட செயற்பாட்டால் அந்தப் பகுதி மக்கள் பதற்றமடைந்திருந்தனர். (ற-21,110)

# கோத்தாவைக் கைது செய்வதில் சிக்கல்

## கூறுகிறார் அமைச்சரவைப் பேச்சாளர்

கொழும்பு, மே 9

நாட்டில் உள்ள சட்டச் சிக்கல் காரணமாக முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவைக் கைது செய்ய முடியாதுள்ளதாக சுகாதார அமைச்சரும், அமைச்சரவைப் பேச்சளருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.



அரச தகவல் திணைக்களத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த கால குற்றங்கள் தொடர்பில் இன்று வரையிலும் முறையான தண்டனைகள் வழங்கப்படாத காரணத்தால், குற்றங்களுடன் தொடர்புபட்டவர்களுடன் நாம் ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளோம் என்று விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. முறையான நீதியை நிலை நாட்டுவதில் இழுபறி நிலமை தற்போது ஏற்பட்டது. கூடிய விரைவில் கடந்தகால ஊழல்கள், கொலைகள், கடத்தல்களோடு தொடர்புபட்டவர்கள் தண்டிக்கப்படுவார்கள்.

அதேபோன்று முன்னாள் பாதுகாப்புச் செயலர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் காரணமாக அவரைக் கைது செய்ய முடியுமா அல்லது முடியாதா என்ற சட்டக் கேள்விகள் முன்வைக்கப் பட்டு வந்தன. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட சட்ட ஆலோசனைகளின் மூலம் அவரை கைது செய்ய முடியாது என்று நீதித்துறையினர் கூறுவதாக அறிக்கைகள் குறிப்பிடுகின்றன. இந்த விடயம் தொடர்பாகவும் தற்போது விசாரணைகள் இடம் பெற்று வருகின்றன - என்றார். (5)

# எங்களால் பழிவாங்க முடியாது

## நீதி அமைச்சர் தலதா தெரிவிப்பு

கொழும்பு, மே 9

முன்னைய அரசைப் போன்று எம்மால் முறைகேடான வகையில் நீதியை நடைமுறைப்படுத்த முடியாது. இவ்வாறு நீதி அமைச்சர் தலதா அத்துகோரள தெரிவித்தார்.



அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்தண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

முன்னைய அரசை நடத்தியவர்கள் சரத் பொன்சேகாவை தண்டித்ததைப் போன்று முறைகேடான வகையில் தனக்கு பிடிக்காதவர்களைப் பழிவாங்கும் நோக்கத்தோடு எம்மால் நீதியை நடைமுறைப்படுத்த முடியாது. நீதி எனப்படுவது அரசியல் சார்பற்றதாக சுயாதீனத் தன்மையோடு இயங்க வேண்டும் என்ற வகையிலேயே நாம் செயற்பட்டு வருகின்றோம்.

இதன் காரணமாகவே கடந்த கால குற்றங்கள் தொடர்பில் சுயாதீனத் தன்மையோடு கூடிய, பக்கச் சார்பற்ற விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றோம். தற்போதைய நிலையில் குற்றவாளிகளை எவ்வாறு தண்டிப்பது, திருடர்கள் யார் என்பது தொடர்பில் தெரியு வந்துவிட்டது.

இதனால் நீதிமன்றத் திருத்தச் சட்டங்கள் நாளைய தினம் (இன்று) நாடாளுமன்றத்தில் சமர்பிக்கவுள்ளோம். இந்த சட்டத் திருத்தங்கள் தொடர்பாக ஏற்கனவே ஆலோசனைகள் செய்யப்பட்ட போதும், குற்றங்களைச் செய்துவிட்டுத் தண்டிக்கப்படுவோம் என்று அச்சமடைந்த ஒன்றிணைந்த கூட்டு எதிரணியினர் எனக் கூறிக்கொள்ப வர்கள் மூலமாகவே காலதாமதம் ஏற்பட்டது. எவ்வாறாயினும் விரைவில் குற்றங்களுடன் தொடர்புடையவர்கள் அனைவர் மீதும் தகுந்த சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் - என்றார். (5)

# நெஞ்சில் ‘தில்’ இருக்குமானால் சொற்போரில் ஈடுபட வாருங்கள்

## தொண்டாவுக்கு திலகர் பகிரங்க சவால்

கொழும்பு, மே 9

நாடாளுமன்றத்திலோ அல்லது தொலைக்காட்சியூடாகவோ பகிரங்க விவாதத்துக்கு வருவதற்குரிய ‘தில்’ இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கு இருக்கின்றதா? அவ்வாறு இருக்குமானால், சொற்போரில் ஈடுபடத் தயாரா?’ இவ்வாறு சவால் விடுத்துள்ளார் தொழிலாளர் தேசிய சங்கத்தின் பொதுச் செயலரான எம்.திலகராஜ்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் மே தினக் கூட்டமும், பேரணியும் நேற்று முன்தினம் நுவரெலியாவில் நடைபெற்றன. ‘தில் இருந்தால் மோதிப் பாரு’ என்ற முழக்கத்துடனேயே பேரணி நடைபெற்றது. தனது மே தின உரையிலும் ஆறுமுகன் தொண்டமான் இந்த வசனத்தைச் சுட்டிக்காட்டிப் பேசினார். ‘தில் இருந்தால் மோதிப் பாரு: மூக்குடைத்துக் காட்டுகின்றேன்’ என்று அவர் தெரிவித்திருந்தார்.

ஆறுமுகன் தொண்டமானின் கருத்து தொடர்பில் வினவியபோதே நாடாளுமன்ற உறுப்பினர் திலகர் இந்தச் சவாலை விடுத்தார்.

‘மக்களுக்காக நாடாளுமன்றத்திலும், அதற்கு வெளியிலும் பேசுவதற்குரிய ‘தில்’ எமக்கிருக்கின்றது. அடாவடி அரசியலில் ஈடுபடுவதற்குரிய பெயர் ‘தில்’ அல்ல. எப்படியோ அவர்களுக்குத் ‘தில்’ இருக்குமானால், நாடாளுமன்றத்திலோ அல்லது தொலைக்காட்சியிலோ மலையகம் தொடர்பில் பகிரங்க விவாதத்துக்கு வர வேண்டும். அதற்குரிய ‘தில்’ இருக்கின்றதா?’ என்று கேள்வி எழுப்பினார். (5)

## புதிய அமைச்சரவையின் முதலாவது கூட்டம் இன்று

கொழும்பு, மே 9

புதிய அமைச்சரவையின் முதலாவது கூட்டம் இன்று காலை 10 மணிக்கு அரச தலைவர் செயலகத்தில் அரச தலைவர் மைத்திரி பால சிறிசேன தலைமையில் நடைபெறவுள்ளது.

அமைச்சரவைக் கூட்டத்தை நேற்று நடத்த முன்னதாக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த போதிலும், 8ஆவது நாடாளுமன்றத்தின் இரண்டாவது அமர்வு காரணமாக அரமைச்சரவைக் கூட்டத்தை இன்று நடத்த அரசு தீர்மானித்திருந்தது.

கடந்த முதலாம், இராண்டாம் திகதிகளில் அமைச்சரவை மாற்றம் இடம்பெற்றது. (5)

# ரணிலின் முயற்சிக்கு வலுக்கும் எதிர்ப்பு

கொழும்பு, மே 9

சமுர்த்தி வங்கியை மத்திய வங்கியின் கீழ் கொண்டுவரும் முயற்சியானது, இந்த நாட்டின் சமுர்த்திப் பயனாளர்களின் பணத்தையும் கொள்ளையிடும் முயற்சியென நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர குற்றஞ்சாட்டியுள்ளார்.

மத்திய வங்கியின் கீழ் சமுர்த்தி வங்கியை கொண்டு வரவுள்ளதாக கொழும்பில் கடந்த 6ஆம் திகதி இடம்பெற்ற தொழிலாளர் தினக் கூட்டத்தில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் தனியார் தொலைக்காட்சிக்கு வழங்கிய நேர்காணலில் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த காலங்களில் மத்திய வங்கியைத் தலைமை அமைச்சர் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த காரணமாகவே பெரிய மோசடி இடம்பெற்றது. அவ்வாறான மோசடி மீண்டும் இடம்பெற அனுமதிக்க முடியாது. தலைமை அமைச்சரின் இந்த முயற்சிக்கு சமுர்த்தி பயனாளிகளும், மக்களும் ஒன்றிணைந்து எதிர்ப்பு தெரிவிக்க வேண்டும் என்றார்.

தலைமை அமைச்சரின் இந்தக் கருத்துக்கு, சமுர்த்தி முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திசநாயக்க, கபே அமைப்பின் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் ஆகியோர் எதிர்ப்பு வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (5)

# பகல் கனவு காண்பது மைத்திரியும் ரணிலுமே

## கூறுகிறார் திஸ்ஸ விதாரண

கொழும்பு, மே 9



அரச தலைவர் மைத்திரியும், தலைமை அமைச்சர் ரணிலும் பகல் கனவு காண்கின்றனர். முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் தலைமைத்துவத்தின் கீழ் அரசு செயற்படுவதையே சகலரும் எதிர்பார்க்கின்றனர். இவ்வாறு பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

2020ஆம் ஆண்டுக்கு பின்னர் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அரசதலைவர் பதவியை தொடர விரும்பினாலும், நாட்டு மக்கள் அதனை அனுமதிக்க மாட்டார்கள். கூட்டு அரசை நாட்டு மக்கள் முழுமையாக நிராகரித்து விட்டனர். கூட்டு அரசு 2020ஆம் ஆண்டுக்குப் பின்னரும் தொடரும் என்று அரச தலைவரும், தலைமை அமைச்சரும் பகல் கனவு கண்டு வருகின்றனர். மகிந்தவின் தலைமைத்துவத்தின் கீழ் அரசு செயற்படுவதையே அனைவரும் எதிர்பார்க்கின்றனர்.

கூட்டு அரசு தொடர்ந்து நாட்டை நிர்வகிக்கும் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன குறிப்பிடுவது வேடிக்கையாகவே உள்ளது. சிறிலங்கா சுதந்திர கட்சியின் வேட்பாளராக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன 2020ஆம் ஆண்டு போட்டியிட்டால் பெரிய தோல்வியை எதிர்கொள்ள நேரிடும். ஐக்கிய தேசியக் கட்சியின் எதிர்கால அரசியல் நிலைமைகளும் பரிதாபத்துக்குரியதாகவே காணப்படுகின்றன.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொது வேட்பாளராக 2015ஆம் ஆண்டு போட்டியிட்டதைப் போன்று மைத்திரிபால சிறிசேன மீண்டும் போட்டியிடலாம். ஆனால் அது எந்தளவுக்கு சாத்தியப்படும் என்பது சந்தேகத்துக்கு இடமாகவே காணப்படுகின்றது. இரு கட்சிகளுக்குமிடையில் தற்போது ஒருமித்த இணக்கப்பாடற்ற தன்மைகளே காணப்படுகின்றன - என்றார். (5)

## இதுதான் நல்லாட்சியா?

கொழும்பு, மே 9

'நல்லாட்சி' அரசின் முக்கிய அமைச்சர் ஒருவரின் வாகனம் மோதியதில் மூன்று பாதசாரிகள் அண்மையில் பாதிக்கப்பட்டனர். ஒருவருக்கு காலும், இன்னொருவருக்கு கையும், மூன்றாமவருக்கு இடுப்பிலும் காயம் ஏற்பட்டது.

இவர்களுக்குப் பாடம் படிப்பிக்கின்றோம் என்று புறப்பட்ட அமைச்சரின் பணியாளர்கள், சம்பவம் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்ட அமைச்சரின் வாகனச் சாரதியை பொலிஸாரின் சம்மதமின்றி விடுவித்து அழைத்துச் சென்றனர்.

பொலிஸாராலும் எதுவும் செய்ய முடியவில்லை.

இதுதான் 'நல்லாட்சியா?' என்று காயமடைந்தவர்களின் உறவினர்கள் கேள்வி எழுப்பினர். (5)

# மைத்திரியை விமர்சித்த பொன்சேகாவுக்கு ஐக்கிய தேசியக் கட்சியும் எதிர்ப்பு

கொழும்பு, மே 9

அமைச்சர் பீல்ட் மார்சல் சரத் பொன்சேகாவுக்கு ஐக்கிய தேசியக் கட்சிக்குள்ளேயே எதிர்ப்பு வெளியிடப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தொழிலாள் தினக்கூட்டத்தில் சரத் பொன்சேகா, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவை கடுமையாக விமர்சனம் செய்திருந்தார். அரச தலைவர் மைத்திரியை விமர்சனம் செய்தமை குறித்து கட்சிக்குள்ளேயே கடும் எதிர்ப்பு வெளியிடப்பட்டது.

இந்த விடயம் குறித்து கட்சியின் முக்கிய அமைச்சர்கள் சிலர் தலைமை அமைச்சர் ரணிலிடம் முறையிட்டுள்ளனர். சரத் பொன்சேகாவின் நடவடிக்கை பிழையானது என்பதனை ரணிலும் ஏற்றுக்கொண்டார். அமைச்சரவைக் கூட்டத்தின் போது அரசதலைவரிடம் மன்னிப்பு கோருமாறு சரத் பொன்சேகாவுக்கு பணிப்புரை விடுக்கப்பட உள்ளதாக கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, சரத் பொன்சேகாவின் கருத்து தொடர்பில் சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளதுடன் ஐக்கிய தேசியக் கட்சி எவ்வாறான நடவடிக்கை எடுக்கும் என்பதை உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும் குறிப்பிட்டனர். (5)

# மனிதர்கள் மனிதர்களை கொலை செய்வதில்லையாம்

## இப்படிச் சொல்பவர் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய

கொழும்பு, மே 9

மனிதர்கள் மனிதர்களைக் கொலை செய்து புசித்து வாழ்வதில்லை. இதனாலேயே அவர்களை மனிதன் என்கின்றனர். தற்போது மனிதர்கள் தமது தனிப்பட்ட நலன்கள், அதிகாரங்களை தக்க வைப்பதற்காக விலங்குகளுக்கு அப்பால் சென்று பொய்களைச் சொல்லி வருகின்றனர். கொலை செய்ய முடியாது என்பதால், அவப்பெயரை ஏற்படுத்தி அதிகாரத்தைப் பாதுகாத்து கொள்ள முயற்சித்து வருகின்றனர். இவ்வாறு முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்தார்.



கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வில் பங்கேற்றுக் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

விலங்கு உலகில் வாழும் விலங்குகள் தாம் வாழ்வதற்காகப் பெரிய போராட்டத்திலீடுபடுகின்றன. இந்த விலங்குகளில் வலுவான, வஞ்சகமான மற்றும் சிறிய விலங்குகளும் உள்ளன. விலங்குகளின் தாக்குதல் முறைகளை மனிதர்கள் பயன்படுத்தியுள்ளனர்.

மறைந்திருந்து தாக்குவதே இராணுவத்தில் காணப்படும் பிரதானமான போர் முறை. சூழலுக்கு ஏற்ற வகையில் ஆடைகளை அணிந்து எதிரியின் கண்ணுக்குத் தெரியாமல் எதிரியை சிக்க வைப்பார்கள். இந்த முறை விலங்குகளின் தாக்குதல் பொறிமுறை.

மனிதர்கள் மனிதர்களைக் கொன்று புசித்து வாழ்வதில்லை. இதனால் அவர்களை மனிதன் என்கின்றனர். தற்போது மனிதர்கள் தமது தனிப்பட்ட நலன்கள், அதிகாரங்களை தக்க வைப்பதற்காக விலங்குகளுக்கு அப்பால் சென்று பொய்களைச் சொல்லி வருகின்றனர். கொலை செய்ய முடியாது என்பதால், அவப்பெயரை ஏற்படுத்தி அதிகாரத்தைப் பாதுகாத்துக் கொள்ள முயற்சித்து வருகின்றனர்.

போர் நடைபெற்ற காலத்தில் அதிகளவில் அர்ப்பணிப்புடன் பணியாற்றிய புலனாய்வுப் பிரிவுகளைச் சேர்ந்த சகல தலைவர்களும் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் வெளியில் வர வேண்டுமாயின் எல்லாவற்றுக்கும் காரணம் கோத்தபாய ராஜபக்சவின் பெயரைக் கூறினால் போதும். ஆனால் படையினர் பொய்களைக் கூறி உயிர்களை பாதுகாத்துக் கொள்ளும் நபர்கள் அல்ல என்பதால், அவர்களிடம் இருந்து அந்த வார்த்தையைப் பெற முடியாது - என்றார். (5)

# மைத்திரிக்கு பதவி ஆசை

## கூறுகிறார் ரில்வின் சில்வா



கொழும்பு, மே 9

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன என்னதான் சொன்னாலும், செய்தாலும் அவருக்குப் பதவி மோகம் உள்ளது. அவர் 2020ஆம் ஆண்டிலும் ஓய்வு பெறுவதில்லை எனக் கூறியுள்ளார். இவ்வளவு காலமும் செய்த பணிகள் போதாதா ? இது போன்ற பணிகள் என்றால் இதற்குப் பிறகும் அவர் வேண்டாம். இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அந்தக் கட்சியின் தொழிலாளர் தினக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துக் கூறுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

"இந்த அரச தலைவர் கதிரையில் யார் அமர்ந்தாலும் அதனை போட்டுவிட்டுச் செல்ல மாட்டார். இது ஜனநாயகத்துக்கு பெரிய அடியாகும். நாம் ஆரம்பித்த போராட்டத்தை இலகுவில் கைவிட மாட்டோம்" என்றும் அவர் அங்கு தெரிவித்தார். (5)

# இலங்கைப் பொலிஸ் சிறந்ததாம்

## சொல்கிறார் பொலிஸ் பேச்சாளர்



கொழும்பு, மே 9

இலங்கையில் இடம்பெற்ற கொலைச் சம்பவங்களுடன் தொடர்புடைய 95 வீதமான சந்தேக நபர்களைப் பொலிஸார் கைது செய்துள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்தார்.

நாட்டில் இடம்பெற்ற குற்றங்களுடன் தொடர்புடைய 75 வீதமான சந்தேக நபர்களை அடையாளம் காணவும் பொலிஸாருக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. உலகில் உள்ள ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கைப் பொலிஸாரின் செயற்பாடுகள் அதிகளவு முன்னணியில் இருக்கின்றன என்றும் ருவன் குணசேகர குறிப்பிட்டார். (5)

கேலிச்சித்திரம்



# முற்போக்குக் கட்சிகளும் இனவாதத்தில் சிக்கியுள்ளன

## அமைச்சர் ராஜித குற்றச்சாட்டு



கொழும்பு, மே 9

முற்போக்குக் கட்சிகள் இனவாதத்தின் பிடியில் சிக்கியுள்ளதாகச் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

கொழும்பில் சுகாதார சேவை சங்கத்தின் தொழிலாளர் தினக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் பங்கேற்று உரையாற்றும்போது மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

முற்போக்கு என்று தம்பட்டம் அடித்துக் கொள்ளும் பல கட்சிகள் இன்று இனவாத மதவாத அடிப்படையில் செயற்பட்டு வருகின்றன.

இன, மத அடிப்படையில் தீர்மானங்களை எடுக்காத ஐக்கிய தேசியக் கட்சி ஏனைய கட்சிகளை விடவும் மேலானது. முதலாளித்துவ அரசாக அடையாளப்படுத்தப்படும் ஐக்கிய தேசியக் கட்சி இன்று வறிய மக்களுக்கு உதவிகளை வழங்கும் கட்சியாக உருவாகியுள்ளது.

கல்வி கற்கும் அனைத்துப் பிள்ளைகளுக்கும் இலவச காப்புறுதி வழங்கப்படுகின்றது. 43 லட்சம் பாடசாலைச் சிறுவர் சிறுமியர் இந்தத் திட்டத்தில் உள்வாங்கப்பட்டனர். இலவசக் கல்வி, இலவச சுகாதார சேவை என்பனவற்றை நாம் வழங்கியுள்ளோம். இதற்குத்தான் நல்லாட்சி என்று கூறுகின்றோம். எனினும் எமது அரசில் அங்கம் வகிக்கும் அமைச்சர்களுக்கே இந்த விடயங்கள் புரியவில்லை - என்றார். (5)

# மைத்திரி காலாவதியான பண்டம்

## கிண்டலடிக்கிறார் விமல் வீரவன்ச

கொழும்பு, மே 9

2020ஆம் ஆண்டுக்குப் பிறகும் அரசியல் பயணம் தொடருமென அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அறிவித்துள்ள நிலையில், அவர் காலாவதியான பண்டமாகிவிட்டார் என்று மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

2020ஆம் ஆண்டிலும் தான் ஓயமாட்டாரென மைத்திரி மட்டக்களப்பில் நடைபெற்ற கூட்டத்தில் அறிவித்துள்ளார்.

ஆனால், மைத்திரியை உள்ளூராட்சி சபைத் தேர்தல் ஊடாக மக்கள் ஓய்வுபெற வைத்துவிட்டனர்..

இனிமேல் அவரால் தேர்தலைச் சந்திக்க முடியாது.

காலாவதியான பண்டமாகிவிட்டார்.

மக்கள் ஆதரவு மகிந்த ராஜபக்சவுக்குத் தான் இருக்கின்றது.

கடந்த தேர்தலில் இதைக் காணக்கூடியதாக இருந்தது - என்றார். (5)



# கோத்தா பதவிக்கு வந்தால் நாட்டில் மாபியா ஆட்சியே

## எச்சரிக்கிறார் அனுரகுமார



கொழும்பு, மே 9

நாட்டின் அரச தலைவராக கோத்தபாய ராஜபக்ச தெரிவு செய்யப்பட்டால், அவருடன் உள்ள விமல் வீரவன்ச, உதய கம்மன்பில போன்ற மாபியா குழுவினரே நாட்டின் நிர்வாகத்தை நடத்துவர். இது ஆபத்தானது. இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அனுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மக்கள் விடுதலை முன்னணியின் தொழிலாளர் தினக் கூட்டத்திலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவுக்குப் பதிலாக அவருடைய சகோதரர் கோத்தபாய ராஜபக்சவை அரச தலைவராக்கினால் நன்றாக இருக்கும் என்றும், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்குப் பதிலாக அமைச்சர் சஜித் பிரேமதாசவை அரச தலைவராக்கினால் நன்றாக இருக்கும் என்றும் சிலர் கருதுகின்றனர்.

ஆள்கள் மாறினாலும் அவர்களால் நாட்டை ஒருபோதும் கட்டியெழுப்ப முடியாது.

கடந்த கால அனுபவம் இதைத்தான் சொல்கின்றது.

இதனாலேயே நாம் நிறைவேற்று அரச தலைவர் முறைமையை ஒழிக்கும் 20ஆவது திருத்தச் சட்ட வரைவைக் கொண்டு வருகின்றோம் - என்றார். (5)

## 44 பேருக்கு வெற்றிடம்: உயர் கல்வி அமைச்சு கண்டுகொள்ளவில்லை

### கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மே 9
கோப்பாய் கல்வியியற் கல்லூரியில் பதிவாளர் தொடக்கம் சிற்றூழியர் வரையில் 44 வெற்றிடங்கள் நிலவுகின்றன. பெரும் இக்கட்டுநிலையிலேயேகல்லூரிஇயங்குகிறது. உயர் கல்வி அமைச்சுக்கு அறிவித்தும் இன்னும்உரியநடவடிக்கைஎடுக்கப்படவில்லை என்று கல்லூரியின் பீடாதிபதி எஸ்.அமிர்தலிங்கம் குற்றஞ்சாட்டுகிறார்.
கல்லூரியிலுள்ளமாணவர்களுக்குஉணவு சமைப்பதற்கானஆளணி, சுகாதாரத்தொழிலாளர்கள்,ஏனையபணிகளுக்கானவேலையாளர்கள், கண்காணிப்பாளர்கள்உள்ளிட்ட 44 பேருக்கு வெற்றிடங்கள் நீடிக்கின்றன. இக்கட்டான நிலையிலேயே கல்லூரியை நாம்நடத்திவருகிறோம். உயர்கல்விஅமைச்சுக்குஇவைதொடர்பில்அறிவித்திருந்தோம். இன்னும் நியமனங்கள் கிடைக்கவில்லை என்றும்அவர்குற்றச்சாட்டினார். (எ-4)

### கோப்பாய் கல்வியியற் கல்லூரியில் கற்கும்

# மாணவர் உணவுக்கென வழங்கியதில் ஒன்றரைக்கோடிரூபா செலவிடவில்லை

### அந்த நிதி கொழும்பு அரசுக்குத் திரும்பும் நிலை கல்லூரிச் சமூகத்தினர் விசனம் தெரிவிக்கின்றனர்

**யாழ்ப்பாணம், மே 9**
**கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரியில் மாணவர்களுக்கு உணவுக்கு என்று ஒதுக்கிய பணத்தில் தற்போதுவரை சுமார் ஒன்றரைக்கோடி ரூபா கணக்கில் உள்ளமை இரண்டு வாரங்களுக்கு முன்னர் கணக்காய்வுப் பிரிவினர் நடத்திய சோதனையில் கண்டறியப்பட்டுள்ளது. கடந்த 5 வருடங்களாக மாணவர்களுக்கு வழங்க வேண்டிய ஒரு நேர தேநீரை நிறுத்தியும் உணவில் தரத்தைக் குறைத்தும் அங்கு தங்கியிருக்கும் மாணவர்களுக்கு உணவு வழங்கப்பட்டு வந்துள்ளது என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.**

கல்வியியல் கல்லூரியின் மாணவர் உணவுப்பயன்பாட்டுக்கெனஒவ்வொருவருடமும் ஒரு குறிப்பிட்ட தொகை நிதியை கொழும்பு அரசு ஒதுக்குகிறது. அவ்வாறு கடந்த ஐந்தாண்டு காலப்பகுதியில் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி மாணவர் பயன்பாட்டுக்கு சரியான முறையில்பயன்படுத்தப்படவில்லைஎன்று குற்றஞ்சாட்டப்படுகிறது.

**மாணவர்களுக்கு தேநீர் நிறுத்தம்**
மாணவர்களுக்குகாலைஉணவுகாலை7 மணிக்குவழங்கப்படும். அதன்பின்னர்முற்பகல்10மணிக்குதேநீர்வழங்கவேண்டும். சிலகல்லூரிகளில்தேநீருடன்சிற்றுண்டியும் வழங்கப்படும். ஆனால் இங்கு தேநீரோசிற்றுண்டியோ வழங்கப்படுவதில்லை. அதனால் மாணவர்கள் மதியம் 12.15 வரைக்கு வழங்கப்படும் மதிய உணவுவரையான 5 மணித்தியாலங்களுக்கு தண்ணீரையே குடித்தவாறுகற்றலில்ஈடுபடவேண்டும். அது மாணவர்களுக்கு ஏற்புடையதல்ல.

**அரச நிதி கிடப்பில்; மாணவர் நிதி செலவு**
முற்பகல் இடைவேளையின்போது மாணவர்களில்சுமார்50வீதமானோர்கல்லூரியிலுள்ள சிற்றுண்டிநிலையத்தில்தமது பணத்திலிருந்து தேநீரும் சிற்றுண்டியும் வாங்கி உட்கொள்வர். ஏனையமாணவர்கள்பணம் இல்லாதுவிட்டால்தண்ணீரைக்குடித்தவாறு மதிய உணவு வரை இருப்பர். இது ஏற்றுக்கொள்ளமுடியாத விடயம்.
உணவுத் தேவைக்கென அரசு நிதி ஒதுக்கீடு செய்கிறது. கடந்தபெப்ரவரியிலிருந்துமாணவருக்கான தொகை மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது. ஆனால் ஏற்கனவே உள்ளநிதியே மாணவருக்குப் பயன்படவில்லை.

**பிற கல்லூரிகள்**
ஏனையகல்லூரிகளில்வாரத்தில்2நாள்கள் இறைச்சி, 2 நாள்கள் மீன், 2 நாள்கள் முட்டைப் பொரியல் என வழங்கப்படுகிறது. அது ஆரோக்கிய நிலை. கல்லூரிகளில் பெண்களும் அதிகளவானோர் கற்கின்றனர். கட்டாயம் மீன் வழங்கப்படவேண்டும்.
ஆனால் மீன் துர்நாற்றம் வீசும் என்றும், தேநீர் குடிக்கும் பாத்திரம் கழுவுவது சிரமம் உள்ளிட்ட காரணங்களைக்கூறி நிர்வாகம் தட்டிக்கழிக்கின்றது.
போர்க்காலத்திலும்அதற்குப்பின்னரும்கூட மாணவர்களுக்கு முற்பகல் 10 மணிக்கு தேநீர் வழங்கப்பட்டது. அவ்வாறிருக்கையில் ஏன் தற்போது வழங்க முடியாது?

**வறுமைக்குட்பட்டோர்**
கோப்பாய்க்கல்லூரியில்வறுமைக்கோட்டுக்குள்சுமார்75வீதமானமாணவர்கள்கற்கின்றனர். அவர்கள் பணத்துக்கு எங்கு செல்வார்கள்?
உரியநிதிசெலவுசெய்யப்படவில்லைஎன்ற விடயம் சில மாதங்களுக்கு முன்னரே விரிவுரையாளர்களுக்குத் தெரியவந்தது என்று கூறப்படுகிறது. மாணவர்களுக்கானநிதியை அரசு ஒதுக்கிவரும்போது தரமான, சிறந்த உணவுகளை அவர்களுக்கு வழங்குமாறு விரிவுரையாளர்கள் பீடாதிபதியிடம் வலியுறுத்தியும் அவை கவனத்தில் கொள்ளப்படவில்லை.
அரசு ஒதுக்கிய நிதியை மாணவர்களுக்கு வழங்காதுவிடுவதுமிகப்பெருந்தவறு. இவ்வாறு ஏராளமான குற்றச்சாட்டுகள் கல்லூரி நிர்வாகம் மீது சுமத்தப்படுகிறது.

**கணக்காய்வாளர் விசாரணை**
இவை தொடர்பில் வடக்கு மாகாண கணக்காய்வாளர் நாயகம் திணைக்களத்தினர் கல்லூரியில் இரண்டு வாரங்களுக்கு முன்னர் கணக்காய்வில் ஈடுபட்டனர். அதன்போது இவை உறுதி செய்யப்பட்டுள்ளன என்றுதெரிவிக்கப்பட்டது. அடுத்தகட்டநடவடிக்கைக்கு அவர்கள் தயாராகிறார்கள் என்றும்தெரிவிக்கப்பட்டது.

**பீடாதிபதி கருத்து**
இந்தக் குற்றச்சாட்டுகள் குறித்து கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி எஸ்.அமிர்தலிங்கத்திடம்கேட்டபோதுஅவர் தெரிவித்ததாவது:
"கல்லூரிக்கு2012ஆம்ஆண்டுநான்கடமையேற்றுவரும்போது மாணவர்களுக்கு முற்பகல்10மணிக்குதேநீர்வழங்கப்படுவதில்லை. நான் வருவதற்கு முன்னர் இருந்த நிதியும் சேர்த்தே தற்போதுவரை குறித்த தொகை (சுமார்ஒன்றரைக்கோடிரூபா)நிதிஉள்ளது. கல்லூரி விடுமுறை நாள்களிலும் பொங்கல் போன்ற சிறப்பு நாள்களிலும் பெற்றோர்கள் மாணவர்களுக்குஉணவுகளைக்கொண்டு வந்து கொடுப்பார்கள். அதன்போது கல்லூரிகளில் உணவுசெய்வது குறைவு. இவற்றைவிட உணவு சமைப்பதற்கென கல்லூரியிலுள்ளவிறகுஅதிகளவில்பயன்படுத்துகிறோம். எரிவாயுபயன்படுத்தப்படுவதில்லை. அவ்வாறும் பணம் மீதமாகும். கடந்த வாரம் இடம்பெற்ற கூட்டத்தில், மாணவர்களுக்கு முற்பகல்10மணிக்குஎன்னகொடுக்கலாம்என்று ஆராயப்பட்டது. தேநீர் வழங்குவதைவிட பால்பைக்கட்டுகள்வழங்குவதுசிறந்ததுஎன்று தீர்மானிக்கப்பட்டது. அடுத்தகட்டநடவடிக்கை இடம்பெறுகிறது" என்றார்பீடாதிபதி. (எ-4)

### அதிகரித்துள்ள போதைப் பொருள் பாவனையைதவிர்ப்பது தொடர்பில்

## யாழ்.முஸ்லிம் சமூகப் பிரதிநிதிகள் – முதலமைச்சர் பேச்சு



யாழ்ப்பாணம்.மே.9
யாழ்ப்பாண மாவட்டத்தில் அதிகரித்துள்ள போதைப் பொருள் பாவனை மற்றும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பில் யாழ்ப்பாண முஸ்லிம் சமூகப் பிரதிநிதிகள் மாகாணத்தின் உயர் அதிகாரிகளைச் சந்தித்துகலந்துரையாடிவருவதாகத்தெரிவிக்கப்பட்டது.
மாகாண ஆளுநர் மற்றும் மாவட்டப் பிரதிப்பொலிஸ் மா அதிபர் மற்றும் மாகாண முதலமைச்சர்ஆகியோரைச்சந்தித்துகலந்துரையாடுவதற்கான நடவடிக்கையில் தற்போது ஈடுபட்டுள்ளனர்.
மாகாணமுதலமைச்சர்சி.வி.விக்கினேஸ்வரனை பிரதிநிதிகள் நேற்றுமுன்தினம் சந்தித்துக்கலந்துரையாடினர். இதன்போது மாவட்டமுஸ்லீம்அமைப்புக்கள், பள்ளிவாசல் நிர்வாகிகள், மாநகர சபை உறுப்பினர் எனப் பலர் கலந்து கொண்டனர்.
இதன்போதுபோதைஒழிப்புசம்மந்தமான மனு ஒன்று முதலமைச்சரிடம் கையளிக்கபட்டதாக தெரிவிக்கப்பட்டது. (7)

## பனம் களியிலிருந்து முகப்பூச்சு: தயாரிப்பது தொடர்பாக ஆய்வு

யாழ்ப்பாணம்.மே.9
யாழ்ப்பாணம் பனை அபிவிருத்தி சபையின் ஆராய்ச்சிப் பிரிவினால் பனம் களியில் இருந்து முகத்துக்கு பயன்படுத்தக் கூடிய முகப்பூச்சுதயாரித்தல்தொடர்பானஆய்வுகள்ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று சபையின் ஆராய்ச்சி பிரிவு தெரிவித்துள்ளது.
இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:
பனை அபிவிருத்திச் சபையின் கைதடியில் அமைந்துள்ள ஆராய்ச்சிநிலையத்தில்பனைசார்உற்பத்திகளில்மேற்கொள்ளக் கூடிய சிறப்பான உற்பத்திகள் தொடர்பான ஆய்வுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
முகத்துக்கு எந்தவித பக்க விளைவுகளும் அற்ற முகத்துக்கான ஜெல்தன்மையுடையகிறீம்தாயாரிப்பதற்கான ஆய்வுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பனம்களியின்செம்மஞ்சள்நிறமானநிறத்தை மாற்றுவதனால்பல்வேறுஉற்பத்திகளைவேறுஇரசாயனநிறங்கள் சேர்க்காமல் உற்பத்தி செய்ய முடியும். ஆகவே இதற்கான ஆய்வுகளும், பனம்குருத்தில்செய்யப்படும்கைப்பணிப்பொருள்கள்சில காலத்தின்பின்னர் மங்கும் தன்மை உடையவையாக காணப்படுகின்றன. இந்த உற்பத்திகளை நீண்ட காலம் பயன்படுத்துவதற்கான ஆய்வுகள், எமது பாரம்பரிய பனாட்டு, புழுக்கொடியல் போன்ற பல்வேறு உற்பத்திகளை எவ்வாறு தரம் உயர்த்துவது என்பது தொடர்பிலும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-7)



## விலங்குகளின் தண்ணீர்த் தாகத்தை போக்கும் செயற்பாடுகளில் இராணுவம்

யாழ்ப்பாணம்.மே.9
முல்லைத்தீவு பாதுகாப்புப் படையினர், பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள வறட்சியான காலநிலையை கருத்தில்கொண்டு பறவைகள் விலங்களுக்கான தண்ணீரை அங்குள்ள தண்ணீர் தேங்கும் இடங்களில் நிரப்பி வருகின்றனர். முல்லைத்தீவு பாதுகாப்புப்படைத்தளபதிமேஜர்ஜெனரல்துஸ்யந்தராஜகுருவின்உத்தரவின்பேரில் 64ஆவது படைப்பரிவின் படையினர்களால் இந்தப் பணி முன்னெடுக்கப்பட்டுள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் முத்துஐயன்கட்டுகுளம் தொடக்கம் உடையார் கட்டுக்குளம் வரை இருக்கும் சாலையின் இடங்களில் நீர்ப்போக்கு இடங்களை சரிசெய்து விலங்குகள் மற்றும் பறவைகள் ஆகியவற்றுக்கு நீர் நிரப்பி வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-7)



## மாகாண உள்ளக கணக்காய்வு அலுவலகம் திறந்து வைப்பு

யாழ்ப்பாணம்,மே 9

மாகாண உள்ளக கணக்காய்வு அலுவலகம் கைதடியில் அமைந்துள்ள வடக்கு மாகாண சபை கட்டடத்தொகுதி வளாகத்தில் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டுபுதிதாக அமைக்கப்பட்ட கட்டடத்தைநாடாவெட்டித் திறப்பதைப் படத்தில் காணலாம்.

நிகழ்வில் மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், பிரதி முதன்மைச் செயலாளர்கள், பிரதான உள்ளக கணக்காய்வாளர்எஸ்.சுரேஸ்ஜினி, ஏனைய உயர்அதிகாரிகள்மற்றும் மாவட்ட உப அலுவலகங்களின் உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். (எ-7)

*மாகாண சுகாதார அமைச்சின்*

## வாகனங்கள் பிரதித் தலைமை செயலருக்குக் கீழ் மாற்றப்படும்

யாழ்ப்பாணம்,மே 9

வடக்கு மாகாண சுகாதார அமைச்சின்கீழ்உள்ளவாகனங்களைப் பிரதித் தலைமைச் செயலரின் பெயரில் மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாகாண சுகாதார அமைச்சுதெரிவித்துள்ளது.

இது பற்றி மேலும் தெரிவித்ததாவது:

அமைச்சின் கீழ் உள்ளவாகனங்கள் மாகாண பிரதித் தலைமைச் செயலரின் பெயரில் பதிவுகள் இருக்க வேண்டும் என்பது நடைமுறையாகும். ஆனால் அமைச்சுகளுக்கு வாகனங்கள்பல்வேறு தரப்பினரால் வழங்கப்படுகின்றன.


கொழும்பு அமைச்சு, அரச சார்பற்ற நிறுவனம் போன்றவர்களால் வாகனங்கள் வழங்கப்படும்.

இவ்வாறு வழங்கப்படும் வாகனங்கள் வழங்குநர்களின் பெயர்களில் இருக்கும்.

ஆகவே பிரதி தலைமைச் செயலரின் கீழ் இந்த வாகனங்களின் உரிமம் மாற்ற வேண்டிய அவசியத்தை கருத்தில் கொண்டுஅமைச்சின்கீழ்உள்ளவாகனங்கள் செயலரின்பெயரில் மாற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-7)

# வடக்கில் அருகிச் செல்லும் மட்பாண்ட உற்பத்தி

### மண் இன்றி வாழ்வாதாரத்துக்கு அல்லற்படுகின்றனர் உற்பத்தியாளர்கள்



யாழ்ப்பாணம்,மே 9

**மட்பாண்ட தொழிலுக்கான மண் கிடைக்காமையால் தொழில் செய்யும் மக்கள் பெரிதும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். வடக்கில் மட்பாண்ட உற்பத்தி அருகி வருவதற்கு மண் இல்லாமையும் ஒரு காரணமாக அமைந்துள்ளது. மட்பாண்டத் தொழிலை வாழ்வாதாரமாக நம்பியுள்ள கொடிகாமம், மட்டுவில் பிரதேச மக்கள் இன்று பெரும் இன்னல்களை எதிர்கொள்கின்றனர்.**

இதுதொடர்பில்மண்பானைஉற்பத்தியாளர்கள் தெரிவித்ததாவது:

**போதியளவு மண் இல்லை**

இப்போது மண் கிடைப்பது அரிதாகிக் கொண்டு செல்கின்றது. மல்லாவி, கண்டாவளை போன்ற இடங்களில் இருந்துதான் நாங்கள் மண்ணை பெற்று வந்தோம்.

தற்போதுஅதற்குகூடஅனுமதிகிடைப்பதில்லை. அங்கிருக்கும் மக்கள், மணலை எல்லோருக்கும் கொடுத்தால் தங்களுடைய வளம் இல்லாமல் போகின்றதுஎன்றுதெரிவிக்கின்றனர், தர மறுக்கின்றனர்.

குறித்த பிரதேசசபையினரும் மணல் அள்ளுவதற்கான அனுமதி தருவதற்கு இழுத்தடிக்கின்றனர். கொழும்பு அரசு, கனியவளத் திணைக்களம் போன்றவற்றின்அனுமதிகள்தேவை என்று ஒவ்வொரு காரணம் கூறு கின்றனர். நாங்கள் பல ரைக்ரர் மணல் கேட்டால்பிரதேச செயலகம்ஒருரைக்ரர் மண் தருகின்றது. இருந்தபோதும் கண்டாவளை மண்ணை முற்றுமுழுதாக தடை செய்துள்ளனர்.

போர் முடிந்த பின்பு மணல் அள்ளும் கண்டாவளைக் காணி அரசுடமை ஆக்கப்பட்டுள்ளது. அந்தக் காணிக்கு சிலர் தங்களுடைய காணி என உரிமை கோரி பல்வேறு பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளனர். இதன் காரணத்தால் அங்கு மண் ஏற்றுவது முற்றுமுழுதாகதடைசெய்யப்பட்டுள்ளது.

போர் முடிவுற்று பாதை திறந்த காலத்தில் இருந்தே மண் பிரச்சினை இருக்கின்றது. எனினும் தற்போது அதிகளவில்காணப்படுகின்றது. மல்லாவியில் ஏப்ரல் மாதத்தில் இருந்து செப்ரெம்பர் மாதம்மட்டும்மழைகுறைவுகாரணத்தால் மண் ஏற்றமுடியும்.

ஆனால் அதற்கு அவர்கள் அனுமதி தருவதற்குகாலதாமதம்ஏற்படுவதால் மண்ணை ஏற்றுவதற்குப் பல்வேறு இன்னல்கள் ஏற்படுகின்றன.



**தென்பகுதியிலிருந்து வரும் வியாபாரிகளும் இடைஞ்சல்**

மண்இல்லாதபிரச்சினையேபெரிதாக உள்ள நிலையில் சிங்களவர்களும் மட்பாண்டத் தொழிலுக்கு இடையூறாக உள்ளனர். அவர்கள் மட்பாண்டங்களைச் செய்து குறைந்த விலையில்விற்றுஎங்களுடையதொழிலுக்கு வீழ்ச்சி ஏற்படுத்துகின்றனர். நாங்கள் மண்ணை அதிக விலையில் வாங்கி ஒரு சிட்டி விளக்கை 3ரூபாய்க்கு விற்றால் சிங்களவர்கள் 2ரூபாய்க்கும், 1ரூபா 75 சதத்துக்கும் விற்கின்றனர். இதனால் வர்த்தகர்கள் அவர்களிடம் மட்பாண்டப்பொருள்களைமலிவாகப் பெற்றுக் கொள்கின்றனர். இதனால் எங்களுடைய உற்பத்திசரியாக நடைபெறுவதில்லை.

**தெற்கிலுள்ள வசதி இங்கு இல்லை**

சிங்களப் பிரதேசத்தில் மண் அவர்களுக்கு இலகுவாகக் கிடைக்கின்றது. அவர்கள்ஒரேநேரத்தில்1000பொருள்களை உற்பத்தி செய்கின்றனர். இயந்திரங்களைப்பயன்படுத்தியும்பொருள்கள் உற்பத்தி செய்கின்றனர். சிங்களவர்கள் இங்கு வருவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச செயலகத்துக்கு நாங்கள் பலமுறை அறிவித்தோம். எனினும் அவர்கள் இங்குவந்துதொழில்செய்வதைதடுப்பது கடினம் என்று செயலகம் தெரிவித்துவிட்டது.

'யாழ்ப்பாண மட்பாண்ட கலைஞர்' என்ற ஒரு சங்கம் 2014ஆம் ஆண்டு காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது. அது தற்போது எந்தச் செயற்பாட்டிலும் இல்லை - என்றனர்.

**வடக் கு உற்பத்திக்கு கிராக்கி அதிகம்**

எங்களுடைய பொருளுக்கு ஏற்ற விலை கிடைக்கவில்லை. மட்பாண்டத்துக்கான மண்ணைத் தருவதால் சூழல் மாசடையப் போவதில்லை.

அதைதருவதற்கு என்ன பிரச்சினை? என்று கேள்வி எழுப்பும் குயவர்கள் தமது உற்பத்திகள் தென்பகுதிவரை விற்பனையாகின்றது என்றும் வட மாகாணத்தில் உள்ள மட்பாண்டங்களையே மக்கள் அதிகம்விரும்புகின்றனர் என்றும் தெரிவிக்கின்றனர்.

**வனைதல் தொழில் அழியும் அபாயம்**

மண்ணுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டால் பரம்பரைத் தொழில் கைவிட்டுப் போய்விடுமோ என்று அஞ்சும் அவர்கள் தமக்கான தீர்வைப் பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுக்கின்றனர்.

இது தொடர்பில் சாவகச்சேரிப் பிரதேச செயலகத்திடம்கேட்டபோதுதற்போது மண்ணை நிறுத்தி வைத்துள்ளதாக தெரிவித்தனர். (எ-113)

# வடக்கில் 229 பாலங்களை அமைப்பதற்கு நடவடிக்கை

### *மாகாண சபை முன்னெடுக்கிறது*

யாழ்ப்பாணம், மே 8

2016ஆம் ஆண்டில் வடக்கு மாகாண சபைக்கு 3 ஆண்டுத் திட்டத்தின் அடிப்படையில் அனுமதிக்கப்பட்ட 87 பாலங்களும் அமைக்கப்பட்டுள்ள நிலையில் தற்போது இனம்காணப்பட்ட மேலும் 229 பாலங்களை அமைப்பதற்கான அனுமதிகள் கோரப்பட்டுள்ளன என்று வடக்கு மாகாண தலைமைச் செயலாளர் அ.பத்திநாதன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் உள்ள உள்ளூர் கிராமிய வீதிகளில் காணப்படும் அதிக பாலங்கள் போருக்குப் பின்னர் சீரமைக்கப்படாத நிலையில் உள்ளன. உடனடியாக அமைக்கப்பட வேண்டிய, பாலங்கள் தொடர்பில் 2015ஆம் ஆண்டில் 149 பாலங்கள்தொடர்பில்மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் ஊடாகக்கோரிக்கைவிடுத்திருந்தோம்.

இவ்வாறு தேர்வு செய்யப்பட்ட பாலங்களில்மக்களின்போக்குவரத்துதூரம், மழைகாலப்பாதிப்புக்கள், உயிர் அச்சம் என்பனவே முதன்மைப்படுத்தப்பட்டன.

எம்மால் முன்வைக்கப்பட்ட 149 பாலங்களில் 87 பாலங்கள் அனுமதிக்கப்பட்டு3ஆண்டுகளுக்கும் பகிர்ந்து வழங்கப்பட்டு வந்தன. இதன் கீழ் குறித்த திட்டத்தில் இது வரை 79 பாலங்களின் பணிகள் முழுமை பெற்றுள்ளதோடு ஏனைய 8 பாலங்களினது பணிகளும் தற்போது இடம்பெறும் நிலையில் அவையும் எதிர்வரும் ஜூலை மாதத்துக்கு முன்னர் முழுமை பெறும் என நம்புகின்றோம்.

குறித்த பாலங்களில் கிளிநொச்சி மாவட்டத்தில் 33 பாலங்களும், மன்னார்மாவட்டத்தில்18பாலங்களும், வவுனியா மாவட்டத்தில் 17 பாலங்களும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 15 பாலங்களும் யாழ்ப்பாணத்தில்4பாலங்களும் என 87 பாலங்கள் அமைக்கப்பட்டன.

இவற்றில்12மீற்றர்முதல்30மீற்றர் நீளம் வரையான பாலங்களும் உள்ளடங்குகின்றன. இதே நேரம் அடுத்த 3 ஆண்டுத் திட்டத்துக்காகப் புதிதாக இனம் காணப்பட்ட பாலங்களின் விவரங்கள் தற்போதுமாவட்டரீதியில்தொகுக்கப்பட்டுமாகாணசபையில்கையளிக்கப்பட்டுள்ளன. இதில் மொத்தம் 229 பாலங்கள் அடங்குகின்றன.

2015ஆம் ஆண்டுத் திட்ட முன்மொழிவினைகையளித்தகாலத்தினை விடவும் இம்முறை முன்கூட்டியே கையளித்துள்ளமையால் அதிக பாலங்கள் கிடைப்பதற்குசந்தர்ப்பம்உள்ளதுஎனஎதிர்பார்க்கின்றோம்-என்றார். (எ-105)

# பட்டதாரிகளைக் கொண்டு வெற்றிடங்களை நிரப்புக

## எம்.எல்.ஏ.எம்.ஹில்புல்லாஹ் வலியுறுத்து

**மட்டக்களப்பு, மே9**

**மாகாண மட்டத்திலும் மத்திய அரச நிறுவனங்களிலும் உள்ள பதவி வெற்றிடங்களுக்கு, வேலையற்ற பட்டதாரிகளை உடனடியாக நியமிக்க நடவடிக்கை வேண்டும்.**



இவ்வாறு நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தொழிலாளர் தின நிகழ்வு ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலாளர் பிரிவின் மாவடிவேம்பு மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. அங்கு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

"சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தொழிலாளர் தின வேண்டுகோளாக வேலையற்ற பட்டதாரிகளின் பிரச்சினைக்குத் தீர்வு வழங்கப்பட வேண்டும். கட்சி பேதங்களுக்கு அப்பால் அவர்களது தரங்களை மட்டும் அடிப்படையாக வைத்தே நியமனங்கள் வழங்கப்பட வேண்டும்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியை விட்டும் சிறுபான்மை சமூகம் ஒதுங்கியிருந்த ஒரு காலம் இருந்தது. ஆனால், கட்சியின் தலைமைப் பொறுப்பை அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன ஏற்ற பின்னர் அந்தநிலை மாறியுள்ளது.

இந்த நாட்டில் வாழ்கின்ற சகல இன மக்களுக்குமான ஒரு கட்சியாக, அரசதலைவர் இந்தக்கட்சியை மாற்றியமைத்ததோடு மட்டுமல்லாது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த தொழிலாளர் தினத்தை இந்தமுறை மட்டக்களப்பு மாவட்டத்தில் நடத்தவும் தீர்மானித்தார். இந்த நிகழ்வில் கலந்து கொள்வதற்காக மட்டக்களப்புக்கு வந்த அமைச்சர்கள், அரசியல் பிரமுகர்கள் மற்றும் அதிகாரிகள் இந்த மாவட்டத்தின் நிலைமைகள் தொடர்பில் புரிந்து கொள்வதற்கு சிறந்த வாய்ப்பும் இதன் மூலம் ஏற்பட்டுள்ளது" - என்றார்.

(ற-ரி5)

## இருகட்சிகளுக்கிடையேமோதல் சந்தேகநபர் மன்றில் முன்னிலை

கொழும்பு, மே9

மே தினக் கூட்டத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சியினருக்கும் தொழிலாளர் தேசிய சங்க ஆதரவாளர்களுக்கும் இடையில் ஏற்பட்ட மோதல் தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் நேற்று ஹற்றன் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். நுவரெலியா மற்றும் தலவாக்கலை ஆகிய பகுதிகளில் இந்தக் கட்சிகளின் மே தினக் கூட்டங்கள் நேற்று இடம் பெற்றன. அதில் இரு கட்சிகளின் ஆதரவாளர்களுக்கும் இடையில்ஏற்பட்டவாய்த்தர்க்கம்மோதலில்முடிவடைந்தது.

இந்தச்சம்பவத்துடன்தொடர்புடையஒருவர்கைதுசெய்யப்பட்டுள்ளார். சம்பவத்துடன் தொடர்புடைய மூவர் தலைமறைவாகியுள்ளனர் என நோர்வூட் பொலிஸார் தெரிவித்தனர். அவர்களைகைதுசெய்வதற்கானநடவடிக்கைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ற-ரி5)

## பல குற்றங்கள் செய்தோரே தங்க மயில் திருடர்கள்

### ருவன் குணசேகர தெரிவிப்பு

கொழும்பு, மே9

கடந்த மாதம் 29ஆம் திகதி காலமான சிங்கள திரைப்பட இயக்குநர் லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸின் 'தங்க மயில்' விருது பதக்கத்தைதிருடியசந்தேகத்தின்பேரில்கைதுசெய்யப்பட்ட 6 சந்தேகநபர்களுள் மூவர் நாட்டில் பதிவு செய்யப்பட்ட குற்றவாளிகளென பொலிஸ் ஊடகப்பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள பொலிஸ் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறுதெரிவித்தார். இவர்கள்மூவரும்பலகுற்றச்செயல்களில் குற்றவாளிகளாக இனங்காணப்பட்டு சிறைத்தண்டனை அனுபவித்தவர்களென்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (ற-ரி5)

## வாகன விபத்தில் சிறுவன் சாவு

கொழும்பு, மே9

புத்தளம் - கொழும்பு பாலாவி தல்கஸ்கந்த பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில்சிறுவன்ஒருவன்உயிரிழந்தான்.

இந்த விபத்து நேற்று நடந்தது. பாலாவி சிங்கள வித்தியாலயத்தில்6ஆம்தரத்தில் கல்வி கற்கும் டபிள்யூ. அசித்தசஞ்சீவ (வயது-12) என்ற சிறுவனே விபத்தில் உயிரிழந்துள்ளார்.

கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்துச் சென்றுகொண்டிருந்த வாகனமே விபத்துக்குள்ளானது. எனத் தெரிவிக்கப்பட்டது. வாகனத்தைச் செலுத்திய சாரதிக்கு ஏற்பட்ட தூக்கத்தின் காரணமாகவே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. விபத்தில் படுகாயமடைந்த சிறுவன் புத்தளம் ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சைப் பயனின்றி உயிரிழந்துள்ளார்.

விபத்துடன்தொடர்புடைய வாகனசாரதி, விபத்தை ஏற்படுத்திவிட்டு அவ்விடத்தை விட்டுத் தப்பிச் செல்ல முற்பட்டுள்ள நிலையில், புத்தளம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பானமேலதிகவிசாரணைகளைப் புத்தளம் பொலிஸார்மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி5)

## வெலிக்கடைப் படுகொலை: சந்தேகநபருக்கு மறியல்

கொழும்பு, மே9

கொழும்பு வெலிக்கடை சிறைச்சாலையில் இடம்பெற்ற படுகொலை சம்பவத்துடன் தொடர்புடையதாக தெரிவித்து கைது செய்யப்பட்டு விளக்கமறியலில்வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்கள் இருவரையும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

அவர்களை நேற்றுக் கொழும்பு மேலதிக நீதிவான் முன்னிலையில் முற்படுத்திய போது எதிர்வரும் 22 ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில்வைக்குமாறுகொழும்பு மேலதிக நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 2012ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 9 ஆம் திகதி முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் ஆட்சியின் போது ஆயுதம் தாங்கிய இராணுவத்தினரால் கொழும்பு வெலிக்கடைசிறைச்சாலையில்சிறைக்கைதிகள் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதில் 27 பேர் உயிரிழந்தனர்.

உயிரிழந்தவர்கள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வந்தநிலையில்கைதிகளின்தலைப் பகுதி மற்றும் நெஞ்சுப்பகுதியில் துப்பாக்கி காயங்கள் காணப்பட்டமையால் திட்டமிடப்பட்ட செயல் என விசாரணைகளின் வாயிலாக நீதிமன்றம் கருதியது. இந்தக் காலப்பகுதியில் வெலிக்கடைச் சிறைச்சாலை ஆணையாளராக செயற்பட்டு வந்த எமில்ரஞ்சன் லமாஹேவா மற்றும் போதைப் பொருள் தடுப்புப் பிரிவின் பொலிஸ் பரிசோதகரான ரங்கஜீவ ஆகியோர் கடந்த மார்ச் மாதம் 28 ஆம் திகதி கைது செய்யப்பட்டனர்.

துப்பாக்கிப் பிரயோகத்தின் போது கைதிகளை அடையாளம் காண்பித்துஉதவியதாகலமாஹவாமீதும் படுகொலைக்கு உதவியதாக ரங்கஜீவமீதும்குற்றம்சுமத்தப்பட்டுள்ளது. இந்தக் குற்றங்களை இழைத்ததாக தெரிவித்து கைது செய்யப்பட்ட இருவருக்கு எதிராகவும் வழக்குகள் தொடரப்பட்டுள்ளது.

(ற-ரி5)

## சமுர்த்தியின் நன்மைகளை மக்கள் இழக்கும் அபாயம்

### கவலைப்படுகிறது கூட்டு எதிரணி

கொழும்பு, மே9

இலங்கை மத்திய வங்கியின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளதால் சமுர்த்தி வங்கியின் ஊடாக நன்மைகளைப் பெறும் மக்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாகலாம். இவ்வாறு ஒன்றிணைந்த எதிர்க்கட்சி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று நடத்தப்பட்ட ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது,

சமுர்த்தி வங்கி இலங்கை மத்திய வங்கியின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்படும் என்று தலைமைஅமைச்சர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார். இதை ஒருபோதும் ஏற்கமுடியாது.

ஐக்கிய தேசியக் கட்சியின் இந்தத் தீர்மானத்தின் பின்னணியில் ஏதாவது சூட்சுமத்திட்டம் இருக்கிறதோ என்ற சந்தேகம் எமக்கு எழுந்துள்ளது. இந்தத் தீர்மானத்துக்கு நாம் கடும் எதிர்ப்பை வெளியிடுவோம் என்றார்.

சில தினங்களுக்கு முன்னர் கொழும்பில் நடைபெற்ற ஐக்கிய தேசியக்கட்சியின் மேதினக் கூட்டத்தில் உரையாற்றிய தலைமைஅமைச்சர் ரணில் விக்கிரமசிங்க சமுர்த்தி வங்கி மத்திய வங்கியின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்படும் என்று தெரிவித்திருந்தார். (றரி5)

## வீடொன்றில் இருந்து இரு சடலங்கள் மீட்பு

கொழும்பு, மே9

குருநாகல் ரிதீகம பகுதியிலுள்ள வீடொன்றிலிருந்து இருவரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. இந்தசடலங்கள்நேற்றுமீட்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது.

அந்தப்பிரதேசமக்கள்வழங்கிய தகவலின் அடிப்படையிலேயே பொலிஸாரால்சடலங்கள் மீட்கப்பட்டன. 34 வயதுடைய கணவரும் 29 வயதுடைய மனைவியுமே இவ்வாறு சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவத்துக்கான காரணம் தெரியாத நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளைமேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி5)

## 19ஆவது திருத்தச் சட்ட அதிகர்ரத்தால் தலைமைஅமைச்சர் பதவியில்நீடிப்பார்

### உதய கம்மன்பில தெரிவிப்பு

காலி, மே9

அரசமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டத்தில் காணப்படும் அதிகாரங்களினாலேயே தலைமைஅமைச்சர் பதவியில் ரணில் விக்ரமசிங்க நீடிப்பார். இவ்வாறு பிவித்துறு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

காலியில்நேற்றுமுன்தினம் இடம்பெற்றமேதினக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது,

19ஆம்திருத்தச்சட்டம்காரணமாகவேஅரசதலைவரால் தலைமைஅமைச்சரை பதவி நீக்க முடியவில்லை. நாடாளுமன்றத்தையும் கலைக்க முடியாமல் உள்ளது.



ஐக்கிய தேசியக் கட்சியின் யாப்பைத் தமக்கு ஏற்ற வகையில் தலைமை அமைச்சர் ரணில் மாற்றியமைத்துக்கொண்டார். அந்தச் சட்ட திட்டங்களே நாட்டிலும் செயற்படுத்தப்படுகின்றது.

2020இல் தனியாட்சி அமைப்பதாக குறிப்பிடும் ஐக்கியதேசியக்கட்சியின்எதிர்பார்ப்புஒருபோதும் நிறைவேறாது. வெலிக்கடைச் சிறைச்சாலையிலேயே 2020இல் ஐ.தே.க. ஆட்சியமைக்கும். இன்னுமொரு தடவை தோற்பதற்காக ஆட்சியமைக்க மாட்டோம். 2050இலும் மகிந்த அணியின் ஆட்சியே தொடரும் - என்றார். (ற-ரி5)

## எரிந்த நிலையில் சடலம் மீட்பு

கொழும்பு, மே9

மாவனெல்ல நகரில் எரி காயங்களுடன் பெண்ணொருவரின் சடலம் மீட்கப் பட்டுள் ளது. நகரவாசிகள் வழங்கிய தகவலுக்கு அமைய நேற்றுமுன்தினம் இந்த சடலம் மீட்கப்பட் டது. அதே பகுதியைச் சேர்ந்த65வயதானபெண்ணொருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சம்பவம்தொடர்பில்மாவனெல்லபொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ற-ரி5)




## ரஷ்யத் தலைமை அமைச்சராக தொடர்கிறார் டிமிட்ரி மெட்வடேவ்


மொஸ்கோ, மே 9
ரஷ்யாவின் அதிபராக நேற்றுப் பொறுப்பேற்றுக்கொண்ட விளாடிமிர் புடின், நாட்டின் தலைமை அமைச்சராக டிமிட்ரி மெட்வடேவை தொடருமாறு உத்தரவிட்டார். புடின் மூன்றாவது தடவையாக அதிபராகப் பொறுப்பேற்றதும் டிமிட்ரியையே தலைமை அமைச்சர் பதவியில் நியமித்திருந்தார். 2012ஆம் ஆண்டு முதல் ரஷ்யாவின் தலைமை அமைச்சராக பதவி வகித்துவரும் டிமிட்ரி, புடினின் தீவிர விசுவாசியாவார். (ம)

## நான்காவது தடவையாகவும்

# ரஷ்ய அதிபராக விளாடிமிர் புடின்

மொஸ்கோ, மே 9
ரஷ்ய அதிபராக நான்காவது தடவையாக பொறுப்பேற்றார் விளாடிமிர் புடின். ரஷ்ய அதிபர் தேர்தல் கடந்த மார்ச் மாதம் நடந்தது.
இதில் போட்டியிட்ட ஏனைய வேட்பாளர்களை, அதிக வாக்குகள் வித்தியாசத்தில் பின்னுக்குத்தள்ளி விளாடிமிர் புடின் வெற்றி பெற்றார். சுமார் 70 சதவிகித வாக்குகளை அவர் பெற்றிருந்தார். இதையடுத்து நேற்று அவர் முறைப்படி தனது பதவியைப் பொறுப்பேற்றார். எதிர்வரும் 2024ஆம் ஆண்டு வரை அவர் அதிபராகத் தொடர்வார்.
ரஷ்ய விதிப்படி ஒருவர் நான்கு தடவைக்கு மேல் அதிபராகப் பதவியேற்க முடியாது. நேற்று நான்காவது தடவையாகவே புடின் அதிபராகப் பொறுப்பேற்றார். இதனால் எதிர்வரும் 2024ஆம் ஆண்டுடன் புடினின் சகாப்தம் முடிவுக்கு வரவுள்ளது. எனினும், சீன அதிபர் ஜின் பிங்கைப் போன்று சில திருத்தங்களைச் செய்து புடின் அந்தப் பதவியில் தொடர்வார் என்றும் கருதப்படுகிறது.
இந்தப் பதவியேற்பு நிகழ்வு ரஷ்ய அதிபரின் இல்லமான கிரெம்ளினில் ஆடம்பரம் இல்லாமல் இடம்பெற்றது என்று தெரிவிக்கப்பட்டது. (ம)





ரஷ்ய அதிபராக புடின் நேற்றுப் பொறுப்பேற்றுக் கொண்டார். அவர் பதவியேற்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ரஷ்ய எதிர்கட்சித் தலைவர் நவால்னி கிரெம்ளின் முன்பாக நேற்றுமுன்தினம் போராட்டத்தில் ஈடுபட்டார். அவருடன் சுமார் ஆயிரத்து 500 பேர் இணைந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். அனைவரும் கைது செய்யப்பட்டனர். ரஷ்ய அதிபர் தேர்தலில் போட்டியிடவும் நவால்னிக்குத் தடை விதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)



## அல் சபாப் தாக்குதலில் 9 சிப்பாய்கள் உயிரிழப்பு

சோமாலியாவின் மேற்குப் பகுதியில் அல் சபாப் ஆயுததாரிகள் நடத்திய தாக்குதலில் 12 சிப்பாய்கள் உயிரிழந்தனர்.
ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான சோமாலியாவில் மேற்கத்திய நாடுகளின் ஆதரவுடன் நடைபெற்றுவரும் ஆட்சியை எதிர்த்து ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் அல் சபாப் ஆயுததாரிகள், அங்கு பாதுகாப்பு மற்றும் அமைதியை நிலைநாட்டும் பணியில் ஈடுபட்டிருக்கும் கென்யா, ஜிபோட்டி, உகண்டா மற்றும் எத்தியோப்பியா ஆகிய நாடுகளை சேர்ந்த ஆபிரிக்க யூனியனைச்சேர்ந்த கூட்டுப் படையினரை எதிர்த்து அவ்வப்போது தாக்குதல் நடத்தி வருகின்றனர்.
சோமாலியா நாட்டின் தென் மேற்கு பகுதியில் அமைந்துள்ள டோப்லி நகரில் அல் சபாப் ஆயுததாரிகள் நடத்திய வெடிகுண்டுத் தாக்குதலில் கென்யச் சிப்பாய்கள் 12 பேர் உடல்சிதறி பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் சிலர் காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களின் சிலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது என்றும், இதனால் உயிரிழப்பு மேலும் அதிகரிக்கலாம் என்றும் அச்சம் வெளியிடப்பட்டது. (ம)

## லெபனான் தேர்தலில்

# ஹிஸ்புல்லா வெற்றிமுகம்


பெய்ரூட், மே 9
லெபனான் நாடாளுமன்றத் தேர்தலில் பதிவான வாக்குகள் எண்ணப்பட்டுவரும் நிலையில், போராளி இயக்கமான ஹெஸ்புல்லா அமல் கட்சிக் கூட்டணி வெற்றி முகத்தில் இருப்பதாக தகவல்கள் வெளியாகின.
மத்திய கிழக்கு நாடான லெபனானில் கடைசியாக கடந்த 2009ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றது. சுமார் 9 வருடங்களின் பின்னர் கடந்த 6ஆம் திகதி லெபனான் நாடாளுமன்றத்துக்குத் தேர்தல் நடைபெற்றது. 128 இடங்களுக்காக நடந்த வாக்குப்பதிவில் 49 சதவிகித வாக்குகள் பதிவாகின.
கிறிஸ்தவர்கள் மற்றும் சியா முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வசிக்கும் லெபனானில், அதிபராக கிறிஸ்தவரும், பிரதமராக சியா இஸ்லாமியரும், சபாநாயகராக சன்னி இஸ்லாமியரும் இருக்க வேண்டும் என்பது அரசியல் சட்டம்.
வாக்கு எண்ணிக்கை நிலவரங்கள் முழுவதும் வெளியாகாவிட்டாலும், போராளி இயக்கமான ஹெஸ்புல்லா அதிக இடங்களை கைப்பற்றியுள்ளதாக அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. ஹிஸ்புல்லா மற்றும் அமல் கட்சி கூட்டணி அமைத்து தேர்தலை சந்தித்தன. ஹிஸ்புல்லாவுக்கு ஈரானின் ஆதரவு உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)




## ஜெருசலேம் நகரிலுள்ள வீதிக்கு 'அமெ. தூதரக வீதி' என்று பெயரிடப்பட்டது

டெல்அவிவ், மே 9
கிழக்கு ஜெருசலேம் நகரில் அமெரிக்கத் தூதரகம் அமைக்கப்பட்டுவந்த இடத்தில் உள்ள வீதிக்கு 'அமெரிக்கத் தூதரக வீதி' என்று பெயரிட்டது இஸ்ரேல் அரசு.
அமெரிக்க அதிபர் தேர்தல் பரப்புரையில், இஸ்ரேலுக்கான அமெரிக்கத் தூதரகத்தை ஜெருசலேமில் அமைப்பேன் என்று தெரிவித்திருந்தார் ட்ரம்ப். இதன்படியே அவர் கடந்த வருடத்தின் இறுதிப் பகுதியில் ஜெருசலேமை இஸ்ரேலின் தலைநகராக அங்கீகரித்தார். இஸ்ரேலுக்கான அமெரிக்கத் தூதரகத்தை ஜெருசலேமுக்கு மாற்றும்படியும் அவர் உத்தரவிட்டார். இதையடுத்து இஸ்ரேலுக்கான அமெரிக்கத் தூதரகம் ஜெருசலேமில் மிகப்பெரிய அளவில் அமைக்கப்பட்டு வுருகிறது. தூதரகத் திறப்பு விழாவில் ட்ரம்ப் கலந்துகொள்ளவுள்ளார். பாதுகாப்புக் காரணங்களுக்காக திறப்பு விழா எப்போது என்று உறுதியாகத் தெரிவிக்கப்படவில்லை. இவ்வாறிருக்க அமெரிக்கத் தூதரகத்துக்குச் செல்லும் வீதியை 'அமெரிக்கத் தூதரகச் சாலை' என்று பெயரிட்டது இஸ்ரேல். (ம)







ஹவாய் தீவில் உள்ள சக்தி வாய்ந்த எரிமலைகளில் ஒன்றான கிலியோவா, மிகப்பெரிய அளவில் வெடிப்பை மேற்கொண்டு வருகிறது. ஹவாய் அரசு அறிவித்ததை விடவும், மேற்கொண்ட பாதுகாப்பு முன்னேற்பாடுகளை விடவும் எரிமலை வெடிப்பு சக்திமிக்கதாக உள்ளது என்று பன்னாட்டு ஊடகங்கள் குறிப்பிட்டன. வீடுகள், வீதிகள் ஆகியவற்றுக்குள்ளும் எரிமலைக் குழம்பு பரவிவரும் ஒளிப்படங்களை பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் வெளியிட்டது. (ம)

## ஏமன் நாட்டில் கொலராவை கட்டுப்படுத்த நடவடிக்கை மிகத்தீவிரம்

சனா, மே 9

ஏமனில் கொலரா நோய் மிகத்தீவிரமாக பரவியுள்ள நிலையில், நோயைக் கட்டுப்படுத்த உலக சுகாதார அமைப்பு கடும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

ஏமன் அரசுக்கும் ஹவுத்தி ஆயுதக் குழுவுக்கும் இடையில் உள்நாட்டுப்போர் நடைபெற்று வருகிறது. அது போதாதென்று கொலரா நோயின் தாக்கமும் ஏமனில் மிகையாக உள்ளது. பல்லாயிரக் கணக்கான மக்கள் இந்த நோயின் தாக்கத்தால் இறந்துள்ளனர். பெரும் தொகையானோர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சுமார் 44 லட்சம் மக்களுக்கு தடுப்பூசி தேவை என்று கோரிக்கை முன்வைக் கப்பட்டுள்ளது. முதல் கட்ட மாக 14 லட்சம் பேருக்குத் தேவையான தடுப்பூசிகள் அனுப்பி வைக் கப்பட்டுள்ளன. (ம)



# கிம் ஜோங்-ட்ரம்ப் சிங்கப்பூரில் சந்திப்பு



சிங்கப்பூர், மே 9

அமெரிக்க அதிபர்-ட்ரம்ப் வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன் இடையிலான சந்திப்பு சிங்கப்பூரில் இடம்பெறவுள்ளது என்று பன்னாட்டு ஊடகங்கள் சில செய்தி வெளியிட்டன.

கொரியத் தீபகற்பப் போரால் கொரிய நாடுகள் இரண்டாகப் பிளவடைந்தன. வடகொரியா - தென்கொரியா இடையில் கடந்த 1953ஆம் ஆண்டில் இருந்தே நேரடி மற்றும் மறைமுக மோதல்கள் இருந்து வந்தன.

ஆனால் இந்த வருடம் நடைபெற்ற குளிர்கால ஒலிம்பிக் தொடரில் வடகொரியா பங்கேற்றமையை அடுத்து நிலமை அப்படியே மாறியுள்ளது. தொடர்ந்து ஏற்பட்ட அடுத்தடுத்த மாற்றங்கள் ஆறு தசாப்த காலப் போரை அப்படியே புரட்டிப்போட்டுள்ளது. வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன்-தென்கொரிய அதிபர் மூன் ஜெ இன் இடையிலான சந்திப்பும் அண்மையில் இடம் பெற்றது. இதையடுத்து கிம் ஜோங் உன்

இந்த வருடம் நடைபெற்ற குளிர் கால ஒலிம்பிக் தொடரில் வடகொரியா பங்கேற்றமையை அடுத்து நிலமை அப்படியே மாறியுள்ளது. தொடர்ந்து ஏற்பட்ட அடுத்தடுத்த மாற்றங்கள் ஆறு தசாப்த காலப் போரை அப்படியே புரட்டிப் போட்டுள்ளது.

அமெரிக்க அதிபர் ட்ரம்ப் இடையிலான சந்திப்பும் விரைவில் இடம்பெறவுள்ளது. அடுத்த மூன்று அல்லது நான்கு வாரங்களுக்குள் இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளது என்று சொல்லப்படுகின்ற போதிலும் சந்திப்பு நடைபெறும் இடம், திகதி என்பன இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை. இவ்வாறிருக்க சிங்கப்பூரில் இந்தச் சந்திப்பு இடம்பெறலாம் என்று பன்னாட்டு ஊடகங்கள் சில குறிப்பிட்டன. (ம)

## ஈரானுடனான ஒப்பந்தம் ட்ரம்பின் முடிவு இன்று

வொஷிங்டன், மே 9

ஈரானுடனான அணுவாயுதப் பரவல் தடை ஒப்பந்தம் குறித்த தனது முடிவை இன்று அறிவிக்கவுள்ளார் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப்.

ஈரான் அணுவாயுதத் தயாரிப்பில் ஈடுபடுகிறது. தேவைக்கும் அதிகமான செறியூட்டப்பட்ட யுரேனியத்தை (அணுகுண்டு தயாரிப்பதற்கான மூலம்) கையிருப்பில் கொண்டுள்ளது என்று தெரிவித்து கடந்த 2015ஆம் ஆண்டு அமெரிக்காவின் அப்போதைய அதிபர் ஒபாமா ஈரானின் மீது ஏகப்பட்ட பொருளாதாரத் தடைகளை விதித்தார். ரஷ்யா, ஜேர்மனி, பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகளும் அமெரிக்காவுக்கு ஆதரவு தெரிவித்தன. இதையடுத்து அணுவாயுதத் திட்டங்களைக் கைவிடச் சம்மதம் தெரிவித்தது ஈரான். பதிலுக்கு தன் மீதான பொருளாதாரத் தடைகளை விலக்கிக் கொள்ள வேண்டும் என்று அது கோரியது.



இதை ஏற்றுக் கொண்ட அமெரிக்கா, ஈரானுடன் அணுவாயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தைச் செய்து கொண்டு பொருளாதாரத் தடையை விலக்கியது.

ஆனால், அமெரிக்க அதிபராகப் பொறுப்பேற்றதில் இருந்து ஈரானுக்கு எதிரான கருத்துக்களையே முன்வைத்து வருகிறார் ட்ரம்ப். ஈரான் அணுவாயுதச் சோதனையில் தற்போதும் ஈடுபடுகிறது என்று குறிப்பிடுகிறார் அவர். இஸ்ரேலும் ஈரான் அணுவாயுதத் திட்டங்களில் ஈடுபடுகிறது என்பதற்கு சாட்சியாக 54ஆயிரம் பக்கங்கள் கொண்ட ஆவணத்தை அண்மையில் வெளியிட்டது. இதனால் ஒப்பந்தத்தில் இருந்து விலகும் நிலையிலேயே அமெரிக்கா உள்ளது. இது தொடர்பான இறுதி அறிவிப்பை இன்று வெளியிடவுள்ளார் ட்ரம்ப். (ம)

# பாலியல் குற்றச்சாட்டுக்களைத் தொடர்ந்து சுவீடன் அக்கடமி உறுப்பினர்கள் விலகினர்

ஸ்டாக்கோம், மே 9

நோபல் பரிசு வழங்கும் சுவீடன் அக்கடமி உறுப்பினர்கள் மீது பாலியல் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து 4 நிரந்தர உறுப்பினர்கள் உட்பட 6 பேர் பதவி விலகினர்.

ஆண்டு தோறும் இலக்கியத்தில் சிறந்து விளக்கும் நபர்களுக்கு இலக்கியத்திற்கான நோபல் பரிசு வழங்கப்பட்டு வருகிறது. அந்த நபரை சுவீடன் நாட்டின் இலக்கிய மன்றமான சுவீடன் அக்கடமி தேர்ந்தெடுத்து வருகிறது. சுவீடன் அக்கடமிக் குழாமுக்கு எதிராக அண்மையில் பாலியல் குற்றச்சாட்டு வைக்கப்பட்டது. அத்துடன் முறையான அறிவிப்பிற்கு முன்னர் நோபல் பரிசு வெற்றியாளர்களின் பெயர் வெளியிடப்பட்டதாகவும் முறைப்பாடு தெரிவிக்கப் பட்டது. இதையடுத்து, இந்த ஆண்டு வழங்கப்பட இருந்த இலக்கியத்துக்கான நோபல் பரிசு அடுத்தாண்டு வழங்கப் படும் என சுவீடன் அக்கடமி அண்மையில் அறி




வித்திருந்தது. மக்களுக்கு சுவீடன் அக்கடமியின் மீதிருந்த நம்பிக்கை குறைந்துள்ளது என்றும் அது வருத்தம் தெரிவித்திருந்தது. இவ்வாறான பின்னணியில் அக்கடமியின் உறுப்பினர்கள் ஆறு பேர் தமது பதவிகளில் இருந்து விலகியுள்ள னர் என்று தற்போது தெரிவிக்கப்பட்டது. (ம)

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# ஏமாற்றம் தந்த கொள்கை விளக்கம்

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நேற்று தனது கொள்கை விளக்க அறிக்கையை இரண்டாவது தடவையாகநாடாளுமன்றத்தில்முன்வைத்தார். நடைபெற்று வரும் ஆட்சியின் 8ஆவது நாடாளுமன்றக்கூட்டத் தொடரின் ஆரம்பத்தில் அவர் முன்வைத்த கொள்கைவிளக்க அறிக்கைக்குப் பின்னர் இரண்டாவது தடவையாக இந்த ஆட்சியின்எஞ்சியஇரண்டுவருடகாலத்துக்கானகொள்கை விளக்க அறிக்கையை அவர் முன்வைத்தார்.

ஆட்சிக்குவரும்போதுமக்களுக்குவழங்கியவாக்குறுதியில் எதனையும்உருப்படியாகநிறைவேற்றியிருக்காதநிலையில் அவரது இந்தக் கொள்கை விளக்க உரைக்கு மிகுந்த முக்கியத்துவமும்எதிர்பார்ப்பும்இருந்தது. எஞ்சியிருக்கும்காலத்தில் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு என்ன செய்யப் போகிறார்கள், எப்படிச்செய்யப்போகிறார்கள்என்பதற்கான விளக்கவுரையாக இந்தக் கொள்கைவிளக்க உரை அமைந்திருக்கவேண்டும். ஆனால், அப்படியல்லாமல் ஏமாற்றம் தரும் விதத்திலேயே அவரது உரை அமைந்திருக்கிறது.

3வருடங்களுக்குமுன்னர்தனதுகொள்கைவிளக்கஉரையில் அவர்முன்வைத்தஅதேசவால்களைஎதிர்கொள்ளவேண்டி இருக்கிறது என்றே 3 ஆண்டுகளின்பின்னரும்அவர்தனது உரையில்கூறியிருக்கிறார். ஆனால்,தமதுநோக்கத்தைஅடைவதற்கான பாதையில் கடந்த மூன்று ஆண்டுகளில் பெரும் அடைவுகளைத் தமது அரசு கண்டிருப்பதாக அவர் கூறியிருக்கின்றார். இருந்தாலும் அதற்கு உதாரணங்களாக அவர் குறிப்பிட்டிருப்பவைஎல்லாமேநாட்டின்மிகமுக்கியபிரச்சினைகளின்பக்கவிளைவுகளோடுதொடர்புபட்டவையாக இருக்கின்றனவே தவிர முக்கிய பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காண்பதற்கானதாக இல்லை.


குறிப்பாக நாட்டின் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயம் தொடர்பில் அரச தலைவரின் கொள்கை விளக்க உரைஎந்தவிதமானகாத்திரமானகருத்தையும்முன்வைக்கவில்லை. இடைநடுவில் நின்றிருக்கும் புதிய அரசமைப்பு முயற்சிகள் எந்த வகையில் முன்னகரப்போகின்றன என்பதற்கான எந்த சமிக்ஞையும் அதில் இல்லை. "எவ்வாறான விமர்சனங்கள்எழுந்தபோதிலும்வடக்குகிழக்குமக்களின் பொறுமையிழப்பை நிரந்தரமாகச்சமரசப்படுத்த வேண்டுமாயின்மக்களின்விருப்பத்தையும்இணக்கப்பாட்டையும் பெற்ற அரசியல் வேலைத்திட்டம் ஒன்றை ஆரம்பித்தல் வேண்டும்" என்றுமட்டுமேஅவர்கூறியிருக்கிறார். அதற்கு மேல்அதனைச்சாத்தியமாக்குவதற்கானவழிவகைகுறித்து அவரது உரையில் ஏதும் இல்லை.

அதைவிட புதிய அரசமைப்பு முயற்சியில் இருந்து அரச தலைவர்முற்றிலுமாகப்பின்வாங்கிவிட்டாரோஎன்று அச்சப்படக்கூடிய வகையில் மாகாண சபைகள் குறித்த அவரது கருத்து அமைந்துள்ளது. "நிலையான நாட்டின் அடித்தளம் தேசிய நல்லிணக்கமே ஆகும். உண்மையானதேசியநல்லிணக்கத்தைஏற்படுத்தவேண்டுமாயின்சமத்துவத்தைஅடிப்படையாகக் கொண்ட அரசியல் தீர்மானங்களை இயற்றத்தக்க கட்டமைப்பை அறிமுகப்படுத்த வேண்டும். அந்த நோக்கை வெற்றி கொள்வதற்கு தற்போது செயலில் இருந்துவரும் மாகாண சபை முறைமையை மேலும் பலப்படுத்துவது காலத்தின் தேவையாகும் என்று நான் நம்புகிறேன்" என்று தெரிவித்திருக்கிறார் அவர்.

தமிழர்களின் பிரச்சினைக்குத் தற்போதைய மாகாண சபை முறைமை ஒருதீர்வாகமட்டுமல்லதீர்வுக்கானஅடிப்படையாகக்கூட அமையாது என்று தமிழ் மக்கள் முற்றிலுமாக நிராகரித்துவிட்ட நிலையில் அந்த மாகாண சபை முறைமையைமேலும்பலப்படுத்துவதுகாலத்தின்தேவை என்று அவர்கூறியிருப்பதுபுதியஅரசமைப்புமுயற்சியைக்கைவிட்டு அரசமைப்புத் திருத்தம் மூலம் மாகாண சபைகளுக்கான அதிகாரங்களைத்தமதுவசதிக்கேற்பஅதிகரிப்பதையேகுறிக்கிறதோ என்று சந்தேகிப்பதற்கு நிறையவே இடம் உண்டு.

அவர் அப்படி நடந்துகொண்டால், இந்த உரையில் அவரே குறிப்பிடும் ''தமிழ்மக்களின்சமஉரிமைகளைஅடிப்படையாகக் கொண்ட வேணவாக்களை ஏற்றுக்கொள்ளல்'' என்பதன் அடிப்படையிலான தீர்வாக நிச்சயம் இருக்காது.

அந்த வகையில் அரச தலைவரின் கொள்கை விளக்க உரை தமிழ் மக்களுக்கு ஏமாற்றம் தருவதாகவே அமைந்திருக்கிறது. யானைப் பசிக்குச்சோளப் பொரிபோன்று இருக்கிறது அவரது உரை.



# கொரிய நாடுகளின் இணக்கமும் பிணக்கமும்

பிரகாஸ்

**1953** ஆம் ஆண்டு கொரியப் போர் முடிந்த பின்னர், தென் கொரியாவுக்குள் நுழைந்த வடகொரியாவின் முதலாவது அதிபர் என்ற சிறப்பைப் பெற்றுள்ளார் வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன். ஆனால், இதற்கு ஏன் இவ்வளவு காலம் ஆனது? இரு நாடுகளுக்கு இடையிலான பிரச்சினை எப்போது ஆரம்பித்தது? 1948ஆம் ஆண்டுவரை ஒரே நாடாக இருந்த கொரியா ஏன் பிரிய நேரிட்டது? நீண்ட மற்றும் சிக்கலான இந்த வரலாறு, இரண்டாம் உலகப் போரின் முடிவில் தொடங்கியது.

**கொரியப் போரின் ஆரம்பம்?**

மேற்குலக நாடுகள் மற்றும் சோவியத் ஒன்றியம் என்பவற்றுக்கு இடையே நடந்த பனிப்போரின் நேரடி விளைவாக, 1950ஆம் ஆண்டுகளில் கொரியத் தீபகற்பத்தில் போர் வெடித்தது. ஒரே நாடாக இருந்த கொரியாவை, 1910 முதல் இரண்டாம் உலகப்போரின் முடிவு வரை ஜப்பான் ஆண்டது. போரின் முடிவில் ஜப்பான் சரணடைந்ததை சிறந்த வாய்ப்பாகப் கருதிய சோவியத் ஒன்றியம், கொரியாவுக்குள் நுழைந்தது. 1948ஆம் ஆண்டு கொரியாவைப் பிரிக்க சோவியத் ஒன்றியமும், அமெரிக்காவும் ஒப்புக்கொண்டன. சோவியத் ஒன்றியம் வட கொரியாவையும், அமெரிக்கா தென் கொரியாவையும் தமது கட்டுப்பாட்டில் எடுத்துக்கொண்டன.

வடகொரியாவில் ஒரு கம்யூனிச சர்வாதிகாரத்தை நிறுவிய சோவியத் ஒன்றியம், முன்னாள் கெரில்லா படை வீரரான கிம் இல்சூங்கிடம் (கிம்ஜோங்உன்னின் தாத்தா) அதிகாரத்தை ஒப்படைத்தது. ஜனநாயக தேர்தல் நடந்த தென்கொரியாவில், சைங் மேன் ரீ அந்த நாட்டின் முதல் அதிபராகப் பதவி ஏற்றார். சோவியத் ஒன்றியமும், அமெரிக்காவும் 1949ஆம் ஆண்டில் கொரியாவை விட்டு வெளியேறின.

ஒரு வருடம் கழித்து, எதிர்பாராத விதமாக தென் கொரியா மீது கிம் இல்சூங் தாக்குதல் நடத்தினார். ஒரு ஐக்கியப்பட்ட கம்யூனிச கொரியாவை உருவாக்க வேண்டும் என்பது அவரது குறிக்கோளாக இருந்தது. வடகொரியாவிடம் மிகப்பெரிய ராணுவம் இருந்தது. இதற்கு அவர்கள் சோவியத் ஒன்றியத்திற்கு நன்றி சொல்ல வேண்டும். தென்கொரியாவுக்கு உதவுவதற்காக அமெரிக்கப் படையும் வந்தது. ஐ.நா. பாதுகாப்புக் குழுவிடம் விடுக்கப்பட்ட வேண்டுகோளை அடுத்து, ஆஸ்திரேலியா, பிரான்ஸ் மற்றும் பிரிட்டன் உள்ளிட்ட 14 ஐ.நா உறுப்பு நாடுகளிடம் இருந்தும் தென்கொரியாவுக்கு ஆதரவாக படைகள் வந்தன.

போரை நிறுத்த அணு ஆயுதம் பயன்படுத்தப்படும் என அப்போதைய அமெரிக்க அதிபர் ட்வைட் ஐசனோவர் மிரட்டியதால், போர் நிறுத்த ஒப்பந்தம் 1953ஆம் ஆண்டில் கையெழுத்தானது. அதே ஆண்டில் சோவியத் ஒன்றியத் தலைவர் ஜோசப் ஸ்டாலினின் சாவும் போர் நிறுத்தத்துக்குப் பங்களித்தது. இறுதி அமைதி ஒப்பந்தம் ஏற்படும் வரை



வடகொரியாவில் ஒரு கம்யூனிச சர்வாதிகாரத்தை நிறுவிய சோவியத் ஒன்றியம், முன்னாள் கொரில்லா படை வீரரான கிம் இல்சூங்கிடம் (கிம் ஜாங்உன்னின் தாத்தா) அதிகாரத்தை ஒப்படைத்தது. ஜனநாயக தேர்தல் நடந்த தென்கொரியாவில், சைங்மேன் ரீ அந்த நாட்டின் முதல் அதிபராகப் பதவி ஏற்றார். சோவியத் ஒன்றியமும் அமெரிக்காவும் 1949ஆம் ஆண்டில் கொரியாவை விட்டு வெளியேறியது

யில், ஒரு தற்காலிக போர் நிறுத்தம் வேண்டும் என்பதற்காக எட்டப்பட்ட இந்த உடன்படிக்கையால், அப்போது போர் ஓய்ந்தது. ஆனால் தீர்வு இன்னும் வரவில்லை. அதனால்தான் இரண்டு கொரியத் தலைவர்களுக்கிடையிலான அண்மைய சந்திப்பு மிக முக்கியத்துவம் பெறுகிறது.

**இரண்டு நாடுகளும் எப்படி வேறுபடுகின்றன?**

தென் கொரியாவிலும் வடகொரியாவிலும் தினசரி வாழ்க்கை மிகவும் வித்தியாசமாக இருக்க முடியாது. மேற்கு நாடுகளது படைகளால் ஆக்கிரமிக்கப்பட்ட தென்கொரியா, முதலாளித்துவ தத்துவத்தை ஏற்றுக்கொண்டது. ஆசியாவின் மிகச் செல்வச் செழிப்பான நாடுகளில் ஒன்றாகத் தென்கொரியா வளர்ந்துள்ளது. 1960களில் அரசால் ஊக்குவிக்கப்பட்ட தொழிற்துறையால், சாம்சங், ஹூண்டாய் போன்ற பெரிய நிறுவனங்களும் உருவாகின. தென்கொரிய கலாசாரம் உலகம் முழுவதும் பரவியது. தென்கொரிய கலைஞர்கள் தயாரித்த நாடகங்கள் மிகவும் பிரபலமாயின. நாட்டின் 48 மில்லியன் மக்கள் தொகையில், 45 மில்லியன் மக்களுக்கு, அதிக வேகமான வயர்லெஸ் இணையம் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. அனைத்து வகையான பொருள்களும் இங்கு மக்களுக்கு தட்டுப்பாடின்றிக் கிடைக்கும்.

**வடகொரியாவைப் பற்றி தென்கொரிய மக்களிடம் என்ன கற்பிக்கப்படுகிறது?**

"வட கொரியா எமது முக்கிய எதிரி நாடு என்றும், அதே சமயம் எமது சக நாடு என்றும் எங்களுக்குக் கற்பிக்கப்படுகிறது'' என்கிறார் தென்கொரிய யு டியூப் பதிவாளர் பில்லி. வடகொரியா ஒரு கம்யூனிச நாடு. ஆனால், முதலாளித்துவம் அந்த நாட்டில் ஊடுருவி வருகிறது.

வடகொரியாவில் வாங்குவதற்குப் பொருள்கள் உள்ளன. ஆனால், அது பணம் வைத்திருப்பவர்களுக்கு மட்டுமே. பெரும்பாலான வடகொரிய மக்கள் வறுமையில் வாழ்ந்து வருகின்றனர். நாட்டின் உயர் தலைவரே எமக்கு முக்கியம் என அந்த நாட்டுக் குடிமக்களுக்குச் சிறுவயது முதலே கற்பிக்கப்படுகிறது. அத்துடன் தென்கொரியா, அமெரிக்கா போன்ற நாடுகளும் மற்றும் மேற்குலக நாடுகளும் தீயவை என மக்களுக்குக் கற்பிக்கப்படுகிறது.

**முறைகேடுகள்**

சித்திரவதை, பாலியல் துர்நடத்தை, கட்டாய கருக்கலைப்பு மற்றும் பட்டினி என மனிதக்குலத்துக்கு எதிரான குற்றங்களைச் செய்ததாக 2014ஆம் ஆண்டு வடகொரியா மீது ஐ.நா. குழு குற்றம் சாட்டியது.

இந்த நாட்டின் உயர் தலைவர்கள் மீது பன்னாட்டுக் குற்றவியல் நீதி மன்றத்தில் வழக்கு தொடர வேண்டும் எனவும் ஐ.நா பரிந்துரைத்தது.

**கிம் வம்சம்**

வடகொரியாவின் முதல் மற்றும் நீண்ட கால தலைவராக இருந்தவர் கிம் இரண்டாம் சங். 'தன்னுணர்வு' என்ற சுய நம்பிக்கைத் தத்துவத்தை அந்த நாட்டுக்கு அவர் அறிமுகப்படுத்தினார். இடைவிடாத பரப்புரைகளின் மூலம், தன்னைச் சுற்றி தனித்துவத்தை உருவாக்கிக் கொண்டதினால், எதிரிகளே இல்லாமல் 46 ஆண்டுகள் ஆட்சி செய்தார் கிம் இரண்டாம் சங். அப்படி எதிரிகள் இருந்தால், அவர்கள் வெளியேற்றப்பட்டனர். அந்தப் பாரம்பரியத்தை, தலைவர் பதவியை ஏற்றுக் கொண்டவுடன் கிம் ஜோங்உன்னும் கடைப்பிடித்தார். கிம் இரண்டாம் சங், அவரது மகனான கிம் ஜோங்இல்லை 1980களில் கொரிய தொழிலாளர்கள் கட்சி மற்றும் ராணுவத்தில் பெரிய பொறுப்புகளை அளித்து பதவி உயர்வு பெற வைத்தார். இந்த நிலையில், தலைவர் பதவியை கிம் ஜோங்இல் எடுத்து கொள்வார் என தெரிய வந்தது.

1994ஆம் ஆண்டு கிம் இரண்டாம் சங் உயிரிழந்த பிறகு, அவருக்கு 'குடியரசின் நிரந்தர அதிபர்' என்ற பெயர் சூட்டப்பட்டது. மேலும், அந்நாட்டின் கடவுள் போல அவர் கொண்டாடப்பட்டார். அவரைத் தொடர்ந்து ஆட்சியில் அமர்ந்த கிம் ஜோங்இல், உலகின் முதல் பரம்பரை கம்யூனிச நாடாக வட கொரியாவை ஆக்கினார்.

**அணு ஆயுதங்கள்**

கிம் ஜோங் இல்லின் ஆட்சியில் வடகொரியாவின் பொருளாதார நிலை மோசமடைந்து, அரசியல் எதிர்ப்பாளர்கள் அதிகரித்தனர். மேலும், அவர் நாட்டின் அணு ஆயுதங்கள் மற்றும் நீண்ட தூர ஏவுகணைகளை பெருக்கினார். அவர் 2011ஆம் ஆண்டு உயிரிழந்த பிறகு கிம் ஜோங் உன் இதனைத் தொடர்ந்தார்.

சமீப மாதங்களில் தென் கொரியாவுடன் அவர் வைத்துள்ள உறவுமுறையில் பெரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது. இதற்குக் காரணம், அமெரிக்கா மற்றும் ஐ.நா விதித்த அதிக பொருளாதார தடைகள்தான் என சிலர் குறிப்பிடுகின்றனர்.

அணு ஆயுதங்கள் வடிவமைப்பில்தான் வல்லமை பெற்றுவிட்டதாக வடகொரியா கூறுகிறது. மேலும், அணு ஆயுத சோதனைகளுக்கு தடை விதிப்பதாகவும் அறிவித்தது. இந்த அறிவிப்பானது, கிம் அமெரிக்க அதிபர் ட்ரம்பைச் சந்திக்கத் திட்டமிடப்பட்டுள்ளதை அடுத்து வெளிவந்துள்ளது. கொரிய தீபகற்பத்தை அணுசக்தியற்ற இடமாக மாற்ற தென்கொரிய அதிபர் மூன் ஜேஇன்னுடன் சேர்ந்து பணிபுரிய போவதாக வடகொரிய அதிபர் கூறுகிறார். ஆனால் இது எப்படிச் சாத்தியம் என்பது குறித்த தகவல்கள் தெளிவாக வெளியிடப்படவில்லை. இந்த நிலையில், ஆய்வாளர்கள் இது குறித்து சந்தேகிக்க இரண்டு முக்கிய காரணங்கள் உள்ளன.

அணுஆயுத சக்தி கொண்ட அமெரிக்கா, தென்கொரியாவுக்கும் ஜப்பானுக்கும் பாதுகாப்புக்கான உத்தரவாதத்தை அளித்துள்ளதை வடகொரியா முக்கிய பிரச்சனையாகக் கருதும். இரண்டாவது காரணம்: இதே போன்ற ஒப்பந்தங்கள் வட மற்றும் தென் கொரியாவிற்கு இடையே போடப்பட்டு, வடகொரியா அதனை மீறியதன் காரணமாக ஒப்பந்தம் கைவிடப்பட்டது.

**கிம்-மூன் சந்திப்பை கொரியப் மக்கள் எப்படிப் பார்க்கிறார்கள்?**

சியோலில் உள்ள யு டியூப் பதிவாளர் கொரியன் பில்லி கூறுகையில், "இருநாட்டு தலைவர்களும் அமைதி குறித்து பேசுவதைப் பார்க்கும்போது, உணர்ச்சிகரமாக இருந்தது. ஏனெனில் வட மற்றும் தென் கொரியாவுக்கு இடையே சுமுகமான உறவையே கொரியர்கள் எதிர்பார்த்தனர். எதிர்காலத்தில் நான் வட கொரியாவுக்கு பயணம் செல்ல முடியும் என்ற அளவிற்கு கற்பனை செய்ய தொடங்கி விட்டேன். வட கொரியாவிற்கு சென்று அந்த நாட்டு மக்களுடன் பேச வேண்டும் என்ற ஆசை நீண்ட நாள்களாக தென்கொரியர்களிடம் உண்டு" என்கிறார் அவர்.



## ஆசிரியருக்கான கடிதம்

# பாதிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கு நிவாரணம் பெற்றுத் தரப்படுமா?

தமிழ் மக்கள் கோரிக்கைக்கு கிடைத்த வாய்ப்பாக, மாகாண அரசு முறையை பயன்படுத்தி மக்களுக்கான வேலைத்திட்டங்களை மாகாண சபை நிர்வாகங்கள் முழுமையாக வழங்கவில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்டு வந்துள்ளன. மாகாண அமைப்புக்குள் எத்தனையோ வேறுபட்ட நிர்வாக அதிகார பீடங்கள் அமையப் பெற்றுள்ளன. கடந்த போர்க் காலத்தில் வன்னி மண்ணின் மனிதப் பேரவலத்தில் சிக்குண்டு உயிர்பிழைப்புக்காக அலைந்த என்போன்ற பலர் இன்றும் நடைப்பிணங்களாக உலவுகின்றோம்.

ஆனால் எமது நாடாளுமன்ற உறுப்பினர்களோ, மாகாணசபை உறுப்பினர்களோ, மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு உயர் அதிகாரிகளோ, எமது கோரிக்கைகளை கரிசனையுடன் அணுகி, எமக்கான உரிய தீர்வைப் பெற்றுத் தராது சாட்டுப் போக்குகளை கூறி தமக்கான பொறுப்பிலிருந்து தப்பி ஓடுவதை நினைத்து மிகுந்த மன வேதனை அடைகின்றோம்.

அசாதாரண நிலையினால் பாதிக்கப்பட்ட எம் போன்ற அரச ஊழியர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக மத்திய அரசினால் பல்வேறு கால கட்டங்களில் பல்வேறுபட்ட சுற்று நிருபங்கள் வெளியிடப்பட்டன.

மேற்படி சுற்று நிருபங்களில் தமிழ் ஆங்கில பிரதிகளின்படி "மேற்படி காரணங்களினால் பாதிக்கப்பட்ட அரச ஊழியர் ஒருவர், அதற்கான சரியான ஆதார ஆவணங்களை சமர்ப்பிக்கும் பட்சத்தில், அந்த ஊழியர் சேவையில் இருந்து இடைவிலகிய ஆண்டில் பயன்படுத்தாத அமைய, சுகவீன லீவுகள் கணக்கிடப்படுவதுடன், அவ்வாண்டிற்கு முந்திய இரண்டு ஆண்டுகளில் பயன்படுத்தாத சுகவீன லீவுகள் கணக்கிட்டு அக்காலத்துக்குரிய சம்பளம் வழங்கப்பட வேண்டும். அத்துடன் சேவைக்கு அறிக்கையிடப்படாத ஆண்டுகள் எத்தனையோ, அத்தனை ஆண்டுகளும் சேவையில் இருந்ததாகக் கருதி மீள் நியமனம் வழங்கும் நாளில், மேற்படி ஊழியர் தொடர்ந்து சேவையில் இருந்திருந்தால் எந்தச் சம்பளப் படிநிலையில் இருந்திருப்பாரோ, அதே சம்பளப் படிநிலையிலே வைத்து மீள் நியமனம் வழங்க வேண்டும். அத்துடன் இந்தச்சலுகைகள் அனைத்தும் அந்த ஊழியரது ஓய்வூதியக் கணக்கீட்டுக்கும் உரித்துடையது" என்பதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

எனவே எம் போன்றவர்களுக்கு நிவாரணம் வழங்க முன்வந்து மத்திய அரசே சுற்றுநிருபங்களை வெளியிட்டுள்ளது. மத்திய அரசின் சுற்று நிருபங்பளின்படி எமக்கான நிவாரணம் பெறுவது தொடர்பாக எமது வடமாகாண ஆளுநரை நாம் சந்தித்துப் பேசிய போது அவர் அது குறித்து நடவடிக்கை மேற்கொள்வதாக ஒப்புதல் வழங்கியுள்ளார்.

ஆனால் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின், மேல் நிலை அதிகாரிகள் எம்மை தொடர்ந்தும் வேதனைக்கு உள்ளாக்கும் விதத்தில் வேலை தந்ததே பெரிய விடயம்; இடைவிலகிய ஊழியர் பதவி உயர்வு கோரமுடியாது; உங்களை உரிய சம்பளப்படி நிலையில் வைத்தால் ஏனையோரின் சிரேஷ்ட நிலை (சீனியோரிட்டி) பாதிக்கப்படும், என்பவை போன்ற பொருத்தமற்ற காரணங்களைக் கூறி விடுகின்றனர். நடைமுறையில் உள்ள மாகாண சபை கலைக்கப்படுவதற்கு முன்னர் எமது கோரிக்கையில் உள்ள நியாயப்பாடுகளை விளங்கிக் கொண்டு என் போன்ற அரச ஊழியர்களுக்கு உரிய நியாயம் பெற்றுத்தருமாறு கோருகிறோம்.

*க.சுந்தரலிங்கம், ஆசிரியர்*
*இத்தாவில் - பளை*



# இனியொரு விதி செய்வோமா?

ஒரு அழுகையின் குரல்
தூரத்தி கொண்டிருக்கிறது
அதனோசை நாளுக்குநாள்
அதிகரித்து வருகிறது
இன்று அவனுக்கானது
நாளை எனக்கானது!

மதம் இருக்கும்
சாதி இருக்கும்
மனிதம் இருக்காது
இதுவே சமூக கட்டமைப்பு!
இதனோடு இணைந்து
வாழ பழகிக்கொள்!
எதையும்
கேள்விக்கு உட்படுத்திடாதே
எல்லாம் புனிதம்!
எதிர்க்கும் குரல்கள்
ஒடுக்கப்படும்
இல்லையேல்
நெருக்கப்படும்!

மதவெறி எனும்
கொடிய நாவுகள்
இன்னும்...
எத்தனை எத்தனை
உயிர்கள் குடிக்குமோ?

கடவுள் பேரால்
காவு கொடுத்த
கயவனே...
இன்னும் எத்தனை
உயிர்களை கொன்று
உந்தன் கடவுளை
காப்பாற்ற போகிறாய்?

சாவு கேட்குமா சாமி?
மனித மிருகமே
உயிர்களை நேசிப்பதே
மானுட அறம்!
நீ கொன்றது
மனிதனை அல்ல
மானுடத்தை!

சமூக இழிவுக்கும்
அநீதிக்கும் எதிரான
சுதந்திர சிந்தனைகளை
ஒடுக்கு முறைகளால்
ஒரு போதும்
சிறைபிடிக்க முடியாது!

மனிதம் எனும்
பேரன்பை சுமக்கும்
பேருயிர்களை
கொன்று குவிக்க
துவங்கினால்
உலகே சுடுகாடாகும்!

இரண்டு சொட்டு கண்ணீர்
நான்கு வரி கவிதையோடு
கடந்து விட போகிறோமா?
இல்லை...
இனியொரு விதி செய்வோமா?

பேஸ்புக் கவிதை



# இன்றைய நாள்

**மேடம்:** வாழ்வில் இனிய அனுபவம் கிடைக்கப் பெறுவீர்கள். சமூகத்தில் அந்தஸ்து உயரும். தொழில், வியாபாரத்தில் இருந்த போட்டி மறை யும். வருமானம் அதிகரிக்கும். பெண்கள் விருந்து விழாவில் பங்கேற்பர்.

**இடபம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். பெற்றோரின் தேவையறிந்து உதவுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியில் வருமானம் அதிகரிக்கும். பெண்களுக்கு நீண்டநாள் விருப்பம் நிறைவேறும்.

**மிதுனம்:** அவசரப்பணியால் சிரமத்திற்கு ஆளாகலாம். அறிமுகம் இல்லாதவரிடம் உதவி கேட்க வேண்டாம். தொழில் வியாபாரம் மந்த கதியில் இருக்கும். இலாபம் சுமார்.

**கடகம்:** பொது விஷயங்களில் கருத்து சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். இலாபம் பன்மடங்கு உயரும். உணவுப்பொருள் தரம் அறிந்து உண்பது நல்லது..

**சிங்கம்:** மனதில் சந்தோஷம் குடியிருக்கும். நீண்டநாள் திட்டம் செயல் வடிவம் பெறும். தொழில், வியாபாரத்தில் நிலுவைப் பணியை நிறைவேற்றுவீர்கள். வருமானம் பெருகும்.

**கன்னி:** மற்றவர் மீது அதிருப்தி கொள்ள நேரிடலாம். தொழில் வியாபாரத்தில் குளறுபடியை சரி செய்வீர்கள். செலவுக்கு தேவையான பணம் கிடைக்கும். வெளியூர் பயணத்தில் திடீர் மாறுதல் இருக்கும்.

**துலாம்:** சாதனை நிகழ்த்தும் வாய்ப்பு தேடி வரும். உற்சாகமுடன் பணிகளில் ஈடுபடுவீர்கள். தொழிலில் இலாபம் அதிகரிக்கும். நிலுவைப் பணம் வசூலாகும். நண்பருக்கு தேவையான உதவி புரிவீர்கள்.

**விருச்சிகம்:** வெளி வட்டாரத் தொடர்பால் தொந்தரவுக்கு ஆளாகலாம். தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். உடல்நலத்திற்கு ஒவ்வாத உணவுகளைத் தவிர்க்கவும்.

**தனுசு:** பெற்றோரின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள். மனைவியின் அன்பைக் கண்டு மனம் நெகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும்.

**மகரம்:** நீண்டநாள் எதிர்பார்ப்பு நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உண்டாகும். சேமிக்கும் விதத்தில் இலாபம் வரும்.

**கும்பம்:** நல்லவர்களின் அறிமுகமும், நட்பும் கிடைக்கும். தொழில், வியா பாரத்தில் லாபம் சீராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமையில் இருந்து விடுபடுவர்.

**மீனம்:** நேர்மை மிக்கவராக செயல்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இலாபம் மிதமாக இருக்கும். பணியாளர்கள் பணி விஷயமாக வெளியூர் செல்ல நேரிடும். உடல்நலனில் அக்கறை தேவை.





# 'அகோரி'யாக நடிக்கும் ஜாக்கிரொப்

சினிமா

தனுஷ்நடித்த துள்ளுவதோ இளமை, காதல்கொண்டேன், யாரடிநீமோகினி, திருவிளையாடல் ஆரம்பம், ஆகிய படங்களை தயாரித்த ஆர்.கே. புரொடக்ஷன் தற்போதுதயாரிக்கும்படத்துக்கு'பாண்டிமுனி'என்றுபெயரிட்டுள்ளனர். இந்தப் படத்தில் பிரபல ஹிந்தி நடிகர் ஜாக்கிஷெராப் முனி என்கிற அகோரி வேடத்தில் நடிக்கின்றார்

புதுமுகநடிகையானமேகாலி'பாண்டி'என்றபாத்திரத்தில் நடிக்கிறார். இந்தப் படத்தில் இன்னொருநாயகியாகநிகிஷாபட்டேல்நடிக்கிறார். பெராரே, சிவசங்கர், ஷாயாஜி ஷிண்டே, அம்பிகா, வாசுவிக்ரம் ஆகியோரும் நடிக்கிறார்கள். கஸ்தூரி ராஜா இயக்கும் இந்தப் படத்துக்கு ஸ்ரீகாந்த் தேவா இசையமைக்கிறார். இந்தப் படம் பற்றி இயக்குநர் கஸ்தூரி ராஜா தெரிவித்ததாவது,

"இதுநான்இயக்கும்வித்தியாசமானபடம். இதுவரைகிராமவாழ்வியலையும் காதலையும் குடும்ப உறவுகளையும் மட்டும் பதிவு செய்த நான் இதில் வித்தியாசமான கதையை கையிலெடுக்கிறேன். சாமிக்கும் பேய்க்கும் இடையே நடக்கும் போர் தான்'பாண்டி முனி'. அடர்ந்த காட்டுக்குள் இருக்கும் ஒரு பங்களாவுக்குள் நடக்கும் கதை இது. சுமார் 70 வருடங்களுக்கு முன்பு நடப்பது போன்ற சம்பவத்தைப் படமாக உருவாக்கி இருக்கிறேன்" என்றார்.

சக்திமான் @MUFTHIMOHAMED1



வாட்ஸப் வா வா ங்குது!
வேலை போ போ ங்குது!

நிகழ்கால பழமொழி.

முட்டாளே என்று
திட்டும்முன் யோசி
அந்த முட்டாள்
இல்லையேல் நீ
அறிவாளி என்று
நிருபித்திருக்க
முடியாது



JKK @IAMKARTHIKEYANK




## கட்டளைகள்

★ அழகிய கனவு ஒன்று வேண்டும்.

★ அதை அடைவதற்கு கடும் முயற்சி வேண்டும்

★ அவமானம் பார்க்காத குணம் வேண்டும்.

★ சிறிய வாய்ப்புக்களையும் நிராகரிக்காமலிருக்க வேண்டும்.



★ ஏமாற்றங்களை விழுங்க வேண்டும்.



★ உள்ளத்தில் ஒரு வெறி ஓயாது புயலாக வீச வேண்டும்

★ உழைப்பில் உண்மை. வேண்டும்.

★ அனைத்துக்கும் மேலாக பொறுமை வேண்டும்.

பேசும் ஓவியங்கள்...





உதயன்
புதன் பொய்கை
மே 09 2018
Uthayan Print newuthayan.com @UthayanPrint

# இராமாயணம் மகாபாரதம்

## காப்பியம் செய்யும் பெண்களின் சிறப்பும், மாண்பும்

இரா.நிசாந்தன்



இலக்கியங்கள் பல்வகைக் கூறுகளைத் தம்மகத்தே கொண்டவை. இனிமையும், இரசனையும், மிக்கவை. இத்தகு தமிழ் இலக்கியங்களின் உயர்வுக்கு என்றென்றும் காரணமாக விளங்குபவர்கள் மங்கையர்களேயாவர். ஆகவே தான் "மங்கையராய் பிறப்பதற்கே மாதவம் செய்திடல் வேண்டும்" என கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை பாடவும் செய்தார். இவ்வாறு சங்க கால இலக்கியங்கள் தொடக்கம் தற் கால நவீன இலக்கியங்கள் ஈறாக பெண்களின் சிறப்பானது பதிவாகி வருகிறது. அத்தகு பெண்மையின் உயர்வு தன்னிகரற்றது. அவர்தம் அன்பும், தியாகமும் ஈடு இணையற்றது. பெண்ணானவள் குழந்தையாக, பின் குமரியாக, பின் மனைவியாக, பின் அன்னையாக என பல் வேறு படி நிலைகளில் அமைவுறுகின்றாள். அத்தகு படிநிலைகளில் பெண் அன்பும், தியாகமும் வெளிப்படும் அர்த்தப் படிகங்களாகவும் விளங்கு கின்றாள். அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு எனும் நால் வகை குணங்களைக் கொண்டவர்களாக பெண்கள் விளங்குகின்றனர் என்பதை இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. ஆகவேதான் இலக்கியம் ஒன்று மங்கையர் மூலமே நயமுறுகின்றது. இலக்கிய வாசகர் மத்தியில் ஆர்வத்தை ஏற்படுத்தும் கதாபாத்திரமாகவும் விளங்குவது பெண்களின் பாத்திரமேயாகும்.



ஆகவே இலக்கியங்களை சமைக்கும் ஆசிரியர்களும் பெண்களை முதன்மைப் படுத்தி அவர்களை சிறப்பித்து போற்றுகின்றனர். அவ் வகையில் சாதாரண மங்கையர்களையும் உயர்வு படுத்தி போற்றிப்படும் தன்மையை தமிழ் புலவர்களும், இலக்கிய ஆசிரியர்களும் கைக் கொண்டுள்ளனர். அவ்வாறு இலக்கியங்களில் புலப்படும் மங்கையர் சிறப்புக்களைக் கண்ணுறுவோம்.

**இராமாயணத்தில் மங்கையர்**

ஆதிகாவியம் எனச் சிறக்கப்படுகின்ற கம்பராமாயணத்தில் பெண்களின் உயர்ச்சியை கம்பர் அழகுற வர்ணிக்கின்றார். சீதை, அகலிகை, தாரை, மண்டோதரி போன்ற மங்கையர் கதாபாத்திரங்கள் இந்தக் காவியத்தில் அமைவுறுகின்றன.

சீதையின் மாண்பும், உயர்வும்

இராமாயணத்தில் நாயகி எனும் நிலை ததும்பும் கதாபாத்திரம் சீதையாகும். பகவான் விஸ்ணு பூமியில் இராமனாக அவதரிக்க தேவி மகாலட்சுமி பூமியில் சீதையாக அவதரித்தாள். அழகே உருவான சீதை காண்பவர் மயங்கிடும் பேரெழில் படைத்தவளாக விளங்கினாள். உமாதேவி போன்ற சிறப்புடைய மங்கையரும் நம் தலைக்கு மேல் கை வைத்து வணங்கும் அளவிற்கு பொறுமை முதலிய நற்பண்புகளை தன்னகத்தே கொண்ட சீதையின் திருமேனி அழகைக் கண்ட மானிடர்கள் அவ்வாறான அழகைக் காண்பதற்கு நாம் இமைக்காத கண்களைப் பெறவில்லையே எனக் கூறி வருந்தினர். அது போல வானுலகத்தில் வாழும், கண்கள் இமைக்காத தன்மை பெற்ற தேவர்கள் தாம் அவளின் அழகைக் காண்பதற்கு இவ்விரு கண்களும் போதாது எனக் கூறி நிற்பார்கள்.


இவ்வாறு சிறப்புடைய சீதை, மிதிலையின் அரசன் ஜனகர் மகளாக வளர்ந்து வந்து, பின் இராமனின் கரம் பற்றி இராமனின் சீதையானாள். இராம பிரானின் மனம் கவர்ந்த இல்லாளாக, அவனது அன்புக்குப் பாத்திரமாக விளங்கிய சீதை இராமன் தன் தந்தையின் ஏவல் ஏற்று வனம் நோக்கி புறப்படவே உடன் தானும் அவனுடன் செல்லத் தலைப்பட்டாள். அப்போது இராமன் நான் செல்லும் காடு சுடுமே அதனை நீ தாங்கமாட்டாய் எனக் கூறவே, சீதை, உன் பிரிவைக் காட்டிலும் அந்தக் கானகம் என்னைச் சுடுமோ எனப் பதிலுரை கூறி இராமனுடன் வனம் சென்றாள். பின், இராவணன் கவர்ந்து சென்று இலங்கையின் அசோகவனத்தில் சிறை வைத்த காலத்திலும் இராமனையே தன் மனதில் இருத்தி இராமன் வருகைக்காக வருத்தத்துடன் காத்திருந்தவள் சீதை. இவ்வாறு இராமாயண காவியத்தில் பெண்மையின் உயர்வுக்கு எடுத்துக் காட்டாய் சீதை எனும் பாத்திரப் படிமம் அமைவுறுகின்றது.

**தாரை எனும் மாண்புமிகு கதாபாத்திரம்**

இராமாயணத்தில் மங்கையர் சிறப்புக்கு எடுத்துக் காட்டாய் அமைவுறுவது தாரை எனும் கதாபாத்திரம். வானர ராஜன் வாலியின் பத்தினியாக விளங்குபவள். வானர மகளிரில் முதன்மை பெறுபவள். துன் கணவன் வாலியின் நலனில் அக்கறை மிக்கவள். அழகு மிகப் பெற்றவள். இத்தகு தாரையின் தன்மையை கம்பர், தாரை என்று பெயர் கொண்ட அமிர்தத்தின் இடையே தோன்றியவளும், மூங்கிலை ஒத்த அழகிய தோள்களை கொண்டவளுமாகியவள் என வர்ணிக்கின்றார். இவ்வாறு சிறப்புடைய தாரை, சுக்ரீவன் இராமன் துணை கொண்டு வாலியை போருக்கு அழைத்த சமயம், தன் கணவனாகிய வாலியை போர் புரியச் செல்ல வேண்டாம் எனத் தடுத்தவள். ஆனால் அவளது வார்த்தைகளை கேள்வியுறாது சுக்ரீவனுடன் போர் புரியச் சென்ற வாலி அங்கு இராமனின் பாணம் பட்டு பூமியில் சாய்கின்றான். அந்தச் செய்தி அறிந்த தாரை உடன் வாலியின் அருகே வந்து பலவாறு புலம்பி அழுகின்றாள். பின் தன் கணவன் இறந்ததும் தானும் அவன் உடலுடன் தன் உயிரையும் மாய்த்துக் கொள்ளவும் துணிகின்றாள். ஆனால் அனுமன் முதலியோரின் வார்த்தைகளை கேள்வியுற்று தன் புதல்வன் அங்கதன் நலனுக்காக தன் முடிவை மாற்றிக் கொள்கின்றாள். அன்று முதல் வானர இனத்தவரின் இராஜ மாதாவாக இருந்து பல நல்வழிகளை எடுத்துரைத்தாள்.

**மண்டோதரியின் சிறப்பு**

இராமாயணத்தில் இராவணனின் பட்டத்து ராணி எனும் நிலையில் சிறப்புறுபவள் மண்டோதரி. மயன் என்பவனின் மகள். மிகுந்த அழகுடையுவள். நற் குணங்களின் இருப்பிடமானவள். இந்திரஜித் எனும் வீரம் மிகுந்த மகனெனப் பெற்றெடுத்தவள். மேலும், இராவணன் தீய மார்க்கம் தனில் செல்லும் போது அவன் தவறுகளை சுட்டிக் காட்டி அவனை தர்ம வழியில் நடப்பதற்கு துண்டியவள். இராவணன் ஆணவம் கொண்டு அதர்ம வழியில் சென்றாலும், பல பெண்களை தன் மனைவியராக்கிக் கொண்டாலும், மண்டோதரி அவற்றை பற்றி கவலை கொள்ளாது தன் கணவனுக்கு ஆற்றும் கடமைகளை நிறைவேற்றும் மாண்புடையவளாக விளங்கினான். இராவணன் சீதையைக் கவர்ந்து வந்து அசோகவனத்தில் சிறை வைத்த போது, எதிர் காலத்தில் நிகழ இருக்கும் விளைவுகளை எண்ணிப் பார்த்து சீதையை சிறை விடுவிக்குமாறு இராவணனிடம் வேண்டியவள். இராமனுடனான போரில் இராமனின் பாணம் பட்டு நிலத்தில் சாய்கின்





**சூதாட்டத்தில் பாண்டவர்களில் மூத்தவனாக தருமன் பாஞ்சாலியை பணயம் வைத்து தோற்று விடவே, துரியோதனனால் துகிலுரியப் பட்டு மானபங்கப் படுத்த முற்பட்ட வேளையில் கண்ணபிரான் திருவருளால் காத்தருள் செய்யப்பட்டாள். அக்கணமே மிகப் பெரும் சபதத்தினையும் செய்தாள்.**

றான் இராவணன். தன் கணவன் இறந்த செய்தி அறிந்து போர்க் களம் புகுந்து பலவாறு அழுது புலம்பி, தன் கணவன் உடலுடன் தன் உயிரையும் மாய்த்துக் கொள்கின்றாள்.

**மகாபாரதத்தில் இழையோடும் மங்கையர்**


ஐந்தாம் வேதம் எனப்படும் மகாபாரமும் மங்கையரை உயர்வாய் போற்றிப்பாடிய இலக்கியமாகும். அந்த இலக்கியத்திலும், குந்திதேவி, காந்தாரி, பாஞ்சாலி, ருக்மணி ஆகிய கதாபாத்திரங்கள் பெண்களின் சிறப்பினை எடுத்தியம்புவனவாக அமைவுறுகின்றன.

**குந்திதேவி**

பாரதத்தின் யது வம்சத்தின் மன்னர்களின் ஒருவனாகிய சூரசேனன் என்பவனின் மகளாக விளங்கியவள் பிருதை எனும் குந்தியாவாள். சூரசேனரின் நண்பரான குந்திபோஜனால் தத்தெடுத்து வளர்க்கப்பட்டமையால் குந்தி எனும் நாமகரணம் பெற்றாள். குந்திதேவி சிறுமியாக இருக்கும் போது தம் இல்லத்திற்கு வருகை தந்த துர்வாச முனிவருக்கு பல பணிவிடைகளை பொறுமையுடன் செய்து கொடுத்தாள். இது கண்டு மனம் மகிழ்ந்த துர்வாசர் ஓர் அரிய மந்திர சக்தியினை அருளிச் சென்றார். குந்தியிடம், இந்த மந்திரத்தை எந்த தேவரை நினைத்து உச்சரிக்கின்றாயோ, அந்தக் கணமே அந்தத் தேவன் உன் முன் தோன்றி நீ விரும்புவதை அளிப்பான் எனக் கூறி விடைபெற்றுச் சென்றார் முனிவர். அதன்படி குந்திதேவியும் குறும்புத் தனமாக சூரியனை நினைத்து மந்திரத்தை உச்சரித்தாள். அந்தக்கணமே சூரியன் அவள் முன் தோன்றினான். இதனை எதிர்பாரத குந்தி தேவி அச்சமடைந்தாள். ஆனால் விதிப்படி சூரியனின் அருளால் குந்தி கர்ணன் எனும் மகனைப் பெற்றெடுத்தாள். பின் பழிக்கு அஞ்சி அந்தக் குழந்தையை ஆற்றிலே விட்டுவிட்டாள். இவை நடந்த பின்பு பாண்டு என்பானை திருமணம் செய்து, அவன் விருப்பப்படி தேவர்களின் வாயிலாக ஐந்து பிள்ளைகளை பெற்றெடுத்தாள். அதன்படி யமதர்மன் வாயிலாக தருமனும், வாயுதேவன் வாயிலாக வீமனும், இந்திரன் வாயிலாக அர்ச்சுனனும், அஸ்வினி குமாரர் வாயிலாக நகுல மற்றும் சகாதேவனையும் முறையே பெற்றெடுத்தாள். இவர்கள் பஞ்ச பாண்டவர்கள் என அழைக்கப்பட்டனர். பின் பாண்டு மன்னன் இறந்து விட தன் பிள்ளைகளுக்கு துணையாக தன் வாழ்கையினை அர்ப்பணித்து வாழ்ந்தவள் குந்திதேவி. ஓர் சிறந்த தாயாக இருந்து பாண்டவர்களுக்கு அறிவுரை கூறி அவர்களை வழி நடத்தினாள்.

**காந்தாரி**

மகாபாரதத்தில் அமைவுறும் மற்றொரு பாத்திரக்கூறு காந்தாரியாகும். காந்தாரம் எனும் நாட்டின் மன்னன் சுபாலரின் மகள். குருவம்சத்தவரான திருதராட்டினன் பத்தினி. தன் கணவனுக்கு பிறவியிலேயே கண்கள் குருடாகையால் தன் கணவன் காணாத எதையும் தானும் காணமாட்டேன் எனக் கூறி தன் கண்களை துணியால் மறைத்துக் கொண்டு வாழ் நாள் முழுதும் தியாகத்தின் அர்த்தபடிகமாக வாழ்ந்தவள். அது மட்டுமன்றி கௌரவர்களின் தாயாகவும் விளங்குபவள். முகாபாரதப் போரானது நடைபெறும் சமயத்தில் தன் மகன் துரியோதனனை காப்பதற்காக தன் தவ வாழ்



வின் பயனை அதாவது தன் கண்களில் நிறைந்துள்ள சக்தியினை துரியோதனனுக்கு அளிக்கின்றாள். அது மட்டுமன்றி பாரதப் போரில் தன் பிள்ளைகள் அனைவரும் இறந்தமையால் மிகுந்த துன்பம் அடைந்து தாங்க முடியாத வேதனையில், கண்ணபிரானுக்கு சாபம் அளிக்கின்றாள். ஏனெனில், கண்ணனே நிகழ்ந்த போருக்கு காரணமாக இருந்தான் என்பதனால், கண்ணனை நோக்கி, எவ்வாறு குருவம்சம் அழிந்து போனதோ, அது போல உன் யது வம்சமும் அழிந்து போகும் என பெரும் சாபம் அளித்தாள். அதன்படியே இறுதியில் யது வம்சத்தின் அழிவும் நடந்தேறியது. இவ்வாறு பெண்மையின் சிறப்பாய், தியாகத்தின் திருவுருவமாய் விளங்கியவள் காந்தாரி.

**பாஞ்சாலி (திரௌபதி)**

மகாபாரத கதையோட்டத்தின் உயிரோட்டமான ஒரு பாத்திரம் திரௌபதியினுடையதாகும். துருபதன் செய்த யாகத்தின் பயனாக, அக்னியில் இருந்து தோன்றியவள் இந்தத் திரௌபதி. அழகே உருவான திரௌபதி விதிவசத்தால் பஞ்சபாண்டவர் ஐவரின் மனைவியாகி விடுகின்றாள். அதற்கு அவள் முற்பிறப்பில் எம் பெருமானிடம் பெற்ற வரம் அவள் விருப்பத்தை நிறைவேற்ற கைலயம் பெருமான அளித்த வாக்கும் ஒரு சேர காரணமாக அமைந்து விடுகின்றது. இருப்பினும், அவள் தன் புனிதத் தன்மையில் இருந்து என்றும் குறைவு பட்டவள் அல்லள். ஆஸ்தினாபுர அரண்மனையில், சூதாட்டத்தில் பாண்டவர்களில் மூத்தவனாக தருமன் பாஞ்சாலியை பணயம் வைத்து தோற்று விடவே, துரியோதனனால் துகிலுரியப் பட்டு மானபங்கப் படுத்த முற்பட்ட வேளையில் கண்ணபிரான் திருவருளால் காத்தருள் செய்யப்பட்டாள். அக்கணமே மிகப் பெரும் சபதத்தினையும் செய்தாள். பாஞ்சாலியின் அந்தச் சபதமே மகாபாரதப் போரானது ஏற்படுவதற்கு ஒரு மிகப் பெரும் காரணியாகவும் அமைந்தது.

இவ்வாறாக இராமாயணம் மற்றும் மகாபாரமம் ஆகிய இரு வேறு காப்பியங்களில் அமைவுறும் பெண்களின் உயர்வினையும், சிறப்பினையும், மாண்பினையும் அழகுற கண்ணுற முடியும். பெண்களின் தனித்துவம் மற்றும் இல்லறப்பாங்கு, தியாகம், விட்டுக்கொடுப்பு, அன்பு, வீரம் முதலிய பண்புகள் அனைத்தும் இங்கு வெளிப்படும் தன்மை

## வரலாற்றில் இன்றைய தினம் 09.05.2018



1877-தென்னமரிக்க நாடான பெருவில் 8.8.ரிச்டர் அளவில் ஏற்பட்ட நில நடுக்கத்தில் சுமார் 2ஆயிரத்து 500பேர் சாவு.

1671- பிரிட்டன் முடிக்குரிய ஆபரணங்கள் கொள்ளையிட முயற்சிப்பு. தோமஸ் பிளட் என்பவர் கைது.

1901-ஆஸ்திரேலிய நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வு இடம்பெற்றது.

1955-மேற்கு ஜேர்மனி நேட்டோவில் இணைந்தது.

1970-வியட்நாம் போரை கண்டித்து அமெரிக்க அதிபரின் இல்லமான வெள்ளை மாளிகைக்கு முன்பாக சுமார் ஒரு லட்சம் பேர் ஆர்ப்பாட்டம்.

1979-யூத வர்த்தகர் ஒருவர் ஈரானில் வைத்துக் கொல்லப்பட்டார்.

2001-கானா நாட்டில் கால்பந்தாட்டத்தைப் பார்க்கச் சென்ற ரசிகர்களிடையே ஏற்பட்ட நெரிசலில் 129 பேர்உயிரிழந்தனர்.

2015-70 ஆவது வெற்றிநாளை கொண்டாடும் முகமாக ரஷ்யாவில் இமாலய ராணுவ அணிவகுப்பு.

# தலகமில்லா உலகையாள கவிதையொன்றே போதும்

கே.எஸ்.சிவஞானராஜா



இன மத மொழி நில, அந்தஸ்து நிலைகளுக்கப்பால் தலைநகர் கொழும்பில் சகோதர சகவாழ்வுக்கான ஒரு அடிநாதமாக, ஆதார சுருதியாக, அற்புத வரப்பிரசாதமாக வலம்புரி கவிதா வட்டம் (வகவம்) உயிர்ப்போடு இயங்குகிறது. ஒவ்வொரு பௌர்ணமியும் வகவக் குயில்களின் கவி ஓசை, ஓங்கி ஒலிக்கும் வகையில், தலைநகர் கொழும்பும் வகவத்தைத் தாங்கிநிற்கிறது. அண்மையில் இந்த கவிதா வட்டத்தின் 47ஆவது கவியரங்கு கொழும்பு அல் ஹிக்மா கல்லூரியில், என்.நஜ்முல் ஹுசைன் தலைமையில் மிகவும் சிறப்பாகஅரங்கேறியது. யாழ்ப்பாணத்திலிருந்து ஒருவராக யானும் கலந்து இந்த நிகழ்வினைப் பார்த்து இரசித்தேன். யான் சிறப்பான முறையில் அவர்களால் கவனிக்கப்பட்டேன், அதனால் அந்த நிகழ்வின் பெறுமதியான ஒருவராக மதிப்பளித்துப் பேசப்பட்டேன். காரணம் யாழ்ப்பாணம் என்ற மண்ணுக்குக் கொழும்பிலும் சரி, உலகிலும் சரி ஓர் உன்னதமான நம்பிக்கையொன்றினைப் போற்றி வளர்ப்பது இறைவன் தந்த பெரும் வரப்பிரசாதமாகும். அதை நாம் பேணிப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எமக்கு நிரம்பவே உண்டு. அதை யாழ்மண் செய்து வருகிறது. நாம் இன்னும் செய்யவேண்டியது எராளம் உள்ளது.

**பௌர்ணமி**

'பூரணை' என்பது வாழ்வுக்கு முழுமை தரக் கூடிய ஒரு நாளாகும். பெரும்பாலான விழாக்கள் இந்த முழுநிலாக் காலத்திலேயே நடைபெற இறைவனும் ஆசிர்வதிக்கின்றான். வலம்புரி கவிதா வட்டத்தினரும் பௌர்ணமி நாளில் கவியரங்கினை நடத்துவதும் வெற்றிகாண்பதுவும் நல்லதோர் சகுனமாகும். உலக கவிதை தினத்தினைக் கொழும்பில் ஒரு பௌர்ணமி தினத்திலன்று நடத்தியிருப்பது மிகவும் பொருத்தமானதே.

**சிறப்பு**

உலகம் சமத்துவமாகவும், சகோதரத்துவமாகவும், நேர்த்தியாகவும், நிம்மதியாகவும், போரில்லாதவாறு அமைதியாகவும், புரிந்துணர்வோடும் வாழ்வதற்கு இலக்கியம் பெருந்துணை புரிகிறது. கம்பராமாயணம் மகாபாரதம், திருக்ககுறள், சிலப்பதிகாரம், நாலடியார் இந்து கிறிஸ்தவ, இஸ்லாமிய, பௌத்த இலக்கியங்கள் வாயிலாக வாழ்க்கை நெறிகள், கற்பிக்கப்படுகின்றன. அது மாத்திரமல்ல ஓர் அரசு எப்படி அரசாளவேண்டும், தர்மம் எங்கெல்லாம்நிலைநாட்டப்படவேண்டும், எதேச்சாதிகாரம் கூடவே கூடாது போன்ற சகல அறவாழ்வு சம்பிரதாயக் கட்டுப்பாடுகள் எல்லாம் கவிதை இலக்கியங்ள் வாயிலாக முன்வைக்கப்படுகின்றன. பாரதி, பாரதிதாசன் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், மருதகாசி, கண்ணதாசன், வாலி, வைரமுத்து போன்றோரின் கவிதைகள் இன்றும் நின்று நீதி சொல்வனவாய் உயிரோடு வாழ்கின்றன. அவற்றுள் சில!

> உலகம் சமத்துவமாகவும்,
> சகோதரத்துவமாகவும்,
> நேர்த்தியாகவும், நிம்மதியாகவும்,
> போரில்லாதவாறு
> அமைதியாகவும்,
> புரிந்துணர்வோடும் வாழ்வதற்கு
> இலக்கியம் பெருந்துணை
> புரிகிறது. கம்பராமாயணம்,
> மகாபாரதம், திருக்குறள்,
> சிலப்பதிகாரம், நாலடியார் இந்து
> கிறிஸ்தவ, இஸ்லாமிய, பௌத்த
> இலக்கியங்கள் வாயிலாக
> வாழ்க்கை நெறிகள்,
> கற்பிக்கப்படுகின்றன. அது
> மாத்திரமல்ல ஓர் அரசு எப்படி
> அரசாளவேண்டும், தர்மம்
> எங்கெல்லாம்
> நிலைநாட்டப்படவேண்டும்,
> எதேச்சாதிகாரம் கூடவே கூடாது
> போன்ற சகல அறவாழ்வு
> சம்பிரதாயக் கட்டுப்பாடுகள்
> எல்லாம் கவிதை இலக்கியங்ள்
> வாயிலாக
> முன்வைக்கப்படுகின்றன. பாரதி,
> பாரதிதாசன் பட்டுக்கோட்டை
> கல்யாணசுந்தரம், மருதகாசி,
> கண்ணதாசன், வாலி, வைரமுத்து
> போன்றோரின் கவிதைகள்
> இன்றும் நின்று நீதி சொல்
> வனவாய் உயிரோடு வாழ்கின்றன.

*1. "மாடி வீட்டு யன்னல் எல்லாம் சட்டைகள்*
*என் வீட்டுச் சட்டையெல்லாம் யன்னல்கள்"*

*2. அழகாகத் தோன்றும் கருநாகம் கண்டேன்*
*அநியாயம் செய்பவர்க்கு மரியாதை கண்டேன்*
*சதிகார வட்டம் ஒன்று சபையேறக்கண்டேன்*
*தவறென்று என்னைச் சொல்லும் பரிதாபக் கண்டேன்*

*3. காலா! உனைநான் சிறுபுல்லென மதிக்கிறேன்- என்றான்*
*காலருகே வாடா! சற்றேயுனை மிதிக்கிறேன்.*

*4. செத்த பிறகு சிவலோகம் வைகுந்தம்*
*சேர்ந்திடலாமென்றே எண்ணியிருப்பார்*
*பித்த மனிதர் அவர் சொலும் சாத்திரம்*
*பேயுரையாமென்று இங்கு ஊதேபா சங்கம்*

*5 நிற்பதுவே நடப்பதுவே பறப்பதுவே நீங்களெல்லாம்*
*சொற்பனந் தானோ? பல தோற்ற மயக்கங்களே!*

*6 இச்சகத்துளோரெலாம்*
*எதிர்த்து நின்றபோதிலும்*
*அச்சமில்லை! அச்சமில்லை!!*
*அச்சமில்லையே!*

*7 காக்கைக் குருவி எங்கள் ஜாதி*
*நீள் கடலும் மலையும் எங்கள் கூட்டம்*
*நோக்குந் திசையெல்லாம்*
*நாமன்றி வேறில்லை*

*8 நோக்க நோக்கக் களியாட்டம்*
*பயமெனும் பேய்தனை யடித்தோம்*
*பொய்ம்மைப் பாம்பைப் பிளந்து*
*உயிரைக் குடித்தோம்*
*கல்லாதவராயினும் தவமில்லாதவராயினும்*
*நல்லாருரை நீதியின்படி நில்லாதவராயினும்*
*எல்லாரும் வந்தேத்து மளவில்*
*யமபயம் கெடச் செய்பவன் அல்ல!*

*9. எங்கள் கைகளில் நிலங்கள் இருந்தன*
*அவர்கள் கைகளில் புத்தகங்கள் இருந்தன.*

*கண்ணை மூடித் திறந்தோம் அவ்வளவுதான்*
*எங்கள் கைகளில் புத்தகங்கள் இருந்தன*
*அவர்கள் கைகளில் நிலங்கள் இருந்தன.*

*10. முன்னொரு காலத்தில் நெஞ்சமே சிரித்தது.*
*இப்போது பற்களே சிரிக்கின்றன.*
*முன்னொரு காலத்தில் வானுயர வளர்ந்தன மரங்கள்.*
*இப்போது வானுயர வளர்கின்றன மாடங்கள்.*
*முன்னொரு காலத்தில் தெய்வங்களே மனிதர்களாக வாழ்ந்தன.*
*இப்போது மனிதர்களோ தெய்வங்களாக மாறிவிட்டனர்.*
*முன்னொரு காலத்தில் மிருகங்களும் மனிதர்களாகி வாழ்ந்தன.*
*இப்பொழுது மனிதர்களோ மிருகங்களாகி விட்டனர்.*

**கவிஞர்கள்**

வகவக் கவிஞர்களின் கவிதை மழையினைப் பார்த்து யான் ஆச்சிரியமானேன். இருபதுக்கும் மேற்பட்ட கவிஞர்கள் கவிதைகளை மழையெனச் சொரிந்தனர். தமிழன்னையும் கவியின்பத்தில் மூழ்கித் திளைத்தாள். எல்லாவற்றிற்கும் மேலாக, கவியரங்கினைப் பொறுப்புடன் ஆளுமையோடு நடத்திச் சென்ற கவிதாயினி சுபாஷினி, எதுகை மோனைச் சுவைத்தும்ப, அரங்கிற்குக் கொலு சமைத்து, தமிழன்னைக்கு அட்டியலிட்டு, வாசிப்போர்க்கு கவித்துவ மணிமாலை சூட்டி சபையோர்க்குக் கரகோசத்தைச் சொந்தமாக்கினார்.

வதிரி.சி.ரவீந்திரன், எஸ். தனபாலன், எம். பிரேம்ராஜ், கிண்ணியா அமீர் அலி, எம்.எஸ். தாஜ்மகான், மஸீதா அன்சார், எம். பாலகிருஷ்ணன், கவிக் கமல் ரஸீம், சுலேச்சனா சண்முகநாதன், தேஜஸ்வினி பிரணவன், கம்மல் துறை இக்பால், பேருவளை இம்லாஸ் முஹம்மத், அப்துல் லத்தீப், வெலிமடை ஜஹாங்கீர், உடுகொடை யஹ்யா அய்யாஸ், ஆயிசா சித்திக்கா, பாணந்துறை நிஸ்வான், பேருவளை பரீஹா பாரூக், ராஹலா ஹலாம், வெலிப்பன்னை அத்தாஸ் ஆகியோர் கவிதைச் சரங்களினால் வந்திருந்த அனைவரையும் ஒன்று கூட்டி மாலையிட்டு அழகு பார்த்தரோ என்னவோ, ஒரு உற்சாகமான கொழும்பு சமூகத்தை வகவக் கலைஞர்கள் சொந்தமாக்கி விட்டனர்.

காலப்போக்கில் ஒன்பது மாகாணங்களையும் வசமாக்கும் ஒரு நல்லுறவுச் சின்னமாக 'வகவம்' மிளிரட்டும். அதன் பேறாக முரண்பாட்டுலகத்தை வென்றெடுக்க அத்திபாரம் நிலைக்கட்டும். கவிதை நெஞ்சையள்ளும் ஒரு ஊடகம்

இவ்வாறொரு கூட்டுறவை இலங்கையில் வளர்த்திருப்பது ஒரு சாதனையாகும். சிங்கள மொழிக் கலைஞர்களையும் கவிதைச்சங்க மத்தியில் இணைப்பது பற்றி 'வகவம்' சிந்திக்க முடியும். வடகொரியா-தென்கொரியா சிரியா ஆகிய நாடுகளின் அமைதிக்காகவும் 'வகவம்' பிரார்த்திக்கட்டும். ஐம்பதாவது கவியரங்கு பொன்விழாக்காணும் வரமாக அமைய 'வகவம்' தன்னை அர்ப்பணிக்கட்டும்.

**பொன்விழா**

தலைநகர் கொழும்பில் வகவத்தின் பொன்விழா அவரவர் கலாச்சார மகிமைப்படி அரங்கேறட்டும். 50 கவிஞர்களுக்கு வகவச் சின்னங்களை ஞாபகார்த்தமாக வழங்குங்கள். அல்லது சான்றிதழ் ஏதாவது ஒன்றாகவும் இருக்கலாம். ஞாபகர்த்தமாக நூல் ஒன்றினையும் வழங்க முடியும். பொன்விழாப் பிரகடனமாக, அடுத்த ஆண்டுக்கான ஒரு செய்தி வெளியிடமுடியும். மேடையமைந்தஒருமண்டபம்உங்கள்விழாவை வெற்றிகொள்ளச் செய்யும். பொன் விழாவினை ஒட்டி, மாணவர்களிடையே, சமூக விழுமியம் கருதிய ஒரு போட்டியொன்றினை உயர்தர மாணவமணிகளிடையே நடாத்தி, வகவத்திற்கு வரம் சேர்க்கவும் முடியும். பொருத்தமாயின் ஏற்றருள்க.

# ‘திருநாவுக்கரசு நாயனார்’

## பக்தி எனும் திருத்தொண்டாற்றி முக்தி அடைந்த சிவ பக்தன்

கந்தையா கனகசபை

சைவசமயத்தை அழியவிடாது கட்டிக் காத்தவர்களுள் சமயகுரவர்கள் முதன்மையானவர்கள். அவர்களுள் ஒருவரான திருநாவுக்கரசு நாயனாரின் குருபூசைத்தினம் இன்றைய தினம் நாடெங்கிலும் சிறப்பாக கொண்டாடப்படுகின்றது.

**சிறப்பு**

இவர் சிவத்திருத்தலங்கள் தோறும் சென்று இறைவனை உள்ளன்போடு வணங்கி அருளின் திருப்பாசுரங்கள் தனை பாடினார். பக்தியின் வழி சைவசமயத்தின் உண்மையை நிலை நாட்டினார். இறைவன் மேல் கொண்ட தீராத அன்பால் வாழ்நாள் முழுவதும் சிவத்திருத்தலங்களை நாடி பயணம் மேற்கொண்டார். அங்கெல்லாம் திருப்பதிகங்கள் பாடினார். உழவாரத் தொண்டாற்றினார். இறைவனின் அருள் பொலிவு கண்டு பூவுலகில் பல அற்புதங்களை நிகழ்த்தினார். இறைவனிடத்தே சரணாகதி அடைந்து முக்தி நிலை அடைந்தார்.

**பிறப்பு**

திருமுனைப்பாடி நாட்டிலே திருவாமூர் என்ற ஊரிலே இவர் பிறந்தார். தந்தையார் பெயர் புகழனார். தாயார் பெயர் மாதினியார். இவருக்கு பெற்றோர் இட்ட இயற்பெயர் மருணீக்கியார். இவருடை தமக்கையார் பெயர் திலகவதியார்.

**இறைவனின் அருள்பார்வை**

திருநாவுக்கரசு சுவாமிகள் சிலகாலம் சைவசமயத்தை விட்டு நீங்கி சமண சயத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். இந்தசந்தர்ப்பத்திலே திலகவதியார் பெருங் கவலையுற்றார். திருநாவுக்கரசரை மீண்டும் சைவசமயத்துக்கு மீட்டு வரும்படி சிவபெருமானிடம் முறையிட்டார். அவருடைய வேண்டுகோளை எம்பெருமானும் ஏற்றுக்கொண்டார். திருநாவுக்கரசருக்கு சூலை நோய் ஏற்பட்டது. சமணர்கள் செய்த மருத்துவம் எந்தவித பலனையும் தரவில்லை. சூலைநோயின் தாக்கம் கூடியது. தாங்கொண துயர்கொண்ட திருநாவுக்கரசர் நோயின் தன்மையால் துடிதுடித்து மிகவும் மனம் வருந்தினார்.


சமணர்களிடம் இருந்து மீண்டு யாருக்கும் தெரியாமல் திலகவதியார் இருப்பிடம் நோக்கி வந்து சேர்ந்தார். தனது உடன் பிறந்த சகோதரனுக்கு ஏற்பட்ட நிலைகண்டு மிகவும் மனம் வருந்தினார் திலகவதியார். அவரை எம்பெருமான் சிவப் பரம்பொருள் எழுந்தருளியுள்ள வீரட்டானேசுவரர் ஆலயத்துக்கு அழைத்துச் சென்றார். அங்கு, வீபூதியை உடம்பு முழுவதும் பூசி இறைவனை உள்ளன்போடு வணங்கும்படி கூறினார். திருநாவுக்கரசரும் இறைவனை மனமுருகி உள்ளன்போடு வணங்கினார். சூலைநோய் நீங்கியது. இறைவன் அருளால் பாடும்திறனைப் பெற்றுக்கொண்டார். “கூற்றா யினவாறு விலக்ககலீர்” எனும் பதிகத்தைப் பாடினார். அன்றுதொட்டு சிவனடியாராக தன்னை பூரணத்துவம் செய்துகொண்டார். 'நாவுக்கரசர்' என்ற நாமகரணம் கொண்டு இறைவனால் அழைக்கப் பெற்றார்.

**அற்புதங்கள்**

அவருடைய சிவப் பணி தொடர்ந்தது. வாழ்நாள் முழுவதும் திருத்தலங்களுக்கு பயணம் மேற்கொண்டு உழவாரத் தொண்டாற்றினார். இறைவனின் அருள்கடாட்சத்தோடு பல அற்புதங்களை நிகழ்த்தினார். குறிப்பாக, திருப்பைஞ்சிலி செல்லும் வழியில் இறைவனிடம் இருந்து பொதிச்சோறு பெற்றமை, திருவையாற்றில் கைலைக் காட்சியை கண்டமை, திருவிழிமிழலையில் இறைவனிடம் படிக்காசு பெற்று பஞ்சம் போக்கியமை, திங்களூரில் பாம்பு தீண்டி இறந்த அப்பூதியடிகளின் மகனை உயிர்பெற்றெழச் செய்தமை, திருமறைக் காட்டிலே மூடப்பட்டிருந்த ஆலயக் கதவு திறக்கப்பாடியமை, சமணர்கள் கல்லோடு கட்டிக் கடலில் விட்டபோதும் கல் தெப்பமாக மாறி மிதந்து கரையேறியமை." போன்ற திருவருள் நிலைகள் நோக்கத்தக்கவை.

**நாமகரணம்**

திருநாவுக்கரசு நாயனாரை ‘அப்பர், வாகிசர், நாவுக்கரசர், உழவாரப்படையாளி, தாண்டக வேந்தர்' போன்ற நாமகரணங்கள் கொண்டும் அழைப்பர். இவர் பாடியருளிய தேவார திருப்பதிகங்கள் நான்காம், ஐந்தாம், மற்றும் ஆறாம் திருமுறைகளாக தொகுக்கப்பட்டுள்ளன.



### இன்று திருநாவுக்கரசு நாயனார் குருபூசை தினம்

**இறைவனை உள்ளன்போடு வழிபாடு இயற்றுவோம்**

சைவசமயிகளாக நாமும் திருநாவுக்கரசர் காட்டிய வழியில் பயணிப்போம். சைவ சமயத்தைஅழியவிடாது பேணிப் பாதுகாத்து திருத்தலங்கள் தோறும் சென்று இறைவனை உள்ளன்போடு வழிபாடு இயற்றுவோம். இந்த மண்ணிலே பிறந்த அனைவரும் நல்ல வண்ணம் வாழவும், மனிதப்பிறவி எடுத்ததன் பயனை சிறப்புற அனுபவிக்கவும் எல்லாம் வல்ல இறைவனின் திருவருளை நாடி இருப்போமாக.

---

# தமிழ் இலக்கியங்களும் அவை தரும் அறிவியல் பொதுமையும்

வினோத்

தமிழ் இலக்கியங்கள் ஐவகை நிலங்கள் பற்றி சிறப்பித்து கூறுகின்றன. அதாவது குறிஞ்சி, முல்லை,நெய்தல்,மருதம் பாலை என்ற நிலவுடமைச் சமூகங்கள் தொடர்பில் தமிழ்மொழி இலக்கியங்கள் தனித்தன்மையோடு கருத்துநிலை பகர்கின்றன. அங்கு வாழ்ந்த மக்களின் வாழ்வியல் குறித்து மட்டுமன்றி அங்குள்ள ஏனைய ஜீவராசிகள் பற்றியதான தகவல்களையும் எடுத்துரைக்கின்றன. குறிப்பாக விலங்குகள், அவை கொண்டுள்ள வாழ்வியல் முறை, மக்கள் கொண்டிருந்த வாழ்வியல் செழுமை, போர் மற்றும் திருமண முறை கள் தொடர்பான ஆய்வு இலக்கியமாகவே சங்கத் தமிழ் இலக்கிங்கள் திகழ்கின்றன.

**சங்க இலக்கியங்கள்**

இவற்றை நாம் பொதுவாக அகம் , புறம் பற்றிக் கூறும் இலக்கியம் என்றே சுட்டுவதும் உண்டு. சங்க நூல்களை எடுத்துக்கொண்டால், அவை எமது முன்னோர்கள் கைக்கொண்ட கட்டிக்காத்து வந்த பண்பாட்டுப் பாரம்பரியங்கள் தொடர்பில் கூறும் செய்யுள் வடிவங்களாகவே அமைந்துள்ளன.

அந்தவகையிலே உலகில் எந்தச் சமூகமும் மொழியறிவு, இலக்கிய மற்றும் இலக்கண அறிவு தனைப் பெற்றிருக்க சாத்தியமில்லாத காலத்தின் பயணத்தில், இலக்கியம் என்ற பொருளுறு பொருண்மையை கண்டு கொள்ள இலக்கணம் அமைத்தவர்களாக எமது முன்னோர்கள் விளங்குகின்றனர். இவர்களின் அறிவு ஈடு இணையற்றது.

**சங்கப் புலவர்கள் தரும் அறிவியல் வெளி**

சூரிய மண்டலம் பற்றியும், அதன் செயலுறு நிலமைகள் பற்றியும் சங்க காலத்துப் பாடல்கள் எடுத்துரைக்கின்றன. உலகம் விஞ்ஞானம், வானவியல் என்ற வார்த்தைகளை அறிந்துகொள்ளாத காலத்தில் சூரியக் குடும்பம் தொடர்பிலும், அதன் சுற்றுச் சூழல் தொடர்பிலும் புறநானூற்றுப் பாடல்கள் கருத்துரைத்துள்ள உறையூர் முதுகன் என்ற சங்க காலப் புலவர் புறநானூற்றுப் பாடல் ஒன்றில் குறிப்பிடும் போது, “சென் ஞாயிற்று செலவும் அன் ஞாயிற்று பரிப்பும் பரிப்பு சூழ்ந்த மண்டிலமும் வழிதிரி தரும் திசையும் வருது நிலை ஆகாயமும் என்று இவை சென்று அளந்து அறிந்தார் போல என்றும் இணைத்து என்போரும் உளரே” என்கிறார்.

அதாவது, “சூரியன் செல்லும் பாதை மாறாது இருக்கும். சூரியன் பயணிக்கும் பாதையில் காற்றின் திசை, அண்ட வெளியின் ஈர்ப்பு விசை, காற்று மண்டலம், காற்று இல்லாத வெளி என்பன உள்ளது. இதை நேரில் சென்று ஆராய்ந்து வந்தவர்களும் நம்மிடையே உள்ளனர்." என்ற செய்தியை இந்தச் சங்க பாடலின் ஊடே எடுத்துக்கூறியுள்ளார். சூரியனை ஆராயக் கூடிய சக்தி மிக்க அறிஞர்கள் எம்மிடையே இருந்துள்ளமையையும், விண்வெளிக்கு பயணம் மேற்கொண்டு அவர்கள் ஆராய்ச்சியில் ஈடுபட்ட தன்மையையும் இப்பாடலின் ஊடே எடுத்துக் கூறியுள்ளமை தமிழ் இலக்கியம் கண்டுகொண்ட விஞ்ஞானப் பெருமையே.



இங்கு அவர்கள் எதில் பயணம் மேற்கொண்டு விண்வெளியையும், சூரியனையும் ஆராய்ந்தார்கள் என்ற கேள்வி எழுகின்றது.

ஆனாலும் அதற்கான பதிலையும் சங்கப் பாடல்கள் அருமையான விளக்கவுரையாக தந்துநிற்கின்றன. குறிப்பாக, “புலவன் பாடும் புகழுடை யோன் விசும்பில் வளவன் ஏவ வானவூர்தி எய்துவ” என்ற புறநானூற்றுப் பாடல் தற்போதைய விண்ணோடங்கள் பற்றிய விஞ்ஞானக் கருத்தை திறம்பட முன் வைக்கின்றது.

**இலக்கியங்கள் பேசும் விசையும் அசைவுறு விமானங்களும்**

‘வானத்தில் விமானி ஏவாத வானூர்தி மூலம் சென்றார்கள்' என்னும் கருத்து நிலை இதனுடே வெளிப்படுத்தப்படுகின்றது. விமானம் குறித்த அறிவு இல்லாத காலத்திலே இப்படிப் பட்ட ஒரு நிகழ்வு நடந்துள்ளது என்பதும், அது பற்றி பாடப்பட்டுள்ளது என்பதும் ஆச்சரியம் தருகிறது. தமிழரின் அறிவியல் ஆளுமை பற்றியும், புரிதல் பற்றியும் எடுத்தியம்பி நிற்கின்றன.

இராமாயண காவியத்தை எடுத்து நோக்கின், அங்கு இராவணன் வைத்ததிருந்த விமானம் பற்றிய கதைகளை நாம் அறிந்து கொண்டுள்ளோம். விமானம் எவ்வாறு வானத்தில் பறக்க வேண்டும் என்பதை விமானம் சென்ற வழித்தடத்தை கம்பர் கூறும் பாங்கின் ஊடாக நாம் கண்டுகொள்ளலாம். ‘சீதையை இராவணன் விமானத்தில் பலவந்தமாக ஏற்றிக் சென்று விடுகிறான். இந்த சந்தர்ப்பத்திலே இராமனும் இலக்குவனனும் சீதையை தேடிப் புறப்படுகின்றனர். செல்லும் வழியில் தேர்த் தடத்தை கண்ணுற்றனர். அந்த தேர்த் தடம் சிறிதளவு தூரம் தெளிவாகத் தெரிகின்றது. பின்னர் தெளிவற்றுத் தெரிகின்றது. அதன் பின்பான பகுதியில் தேர்த்தடம் தெரியவில்லை.' இத்தகு கதை சொல்லும் பாங்கின் வழியே கம்பர் விமானம் தரையில் ஓடி வேகமெடுத்து பின் புவியீர்ப்பு விசையை விஞ்சி வானத்தில் பறந்துள்ளது என்பதை எடுத்துக் காட்டி நிற்கின்றார். அதாவது ஒரு விமானம் வானில் பறக்க என்ன செய்ய வேண்டும் என்கிற அறிவியல் உண்மையை இதனூடே கம்பர் வெளிக்காட்டி நிற்கிறார்.

**இலக்கியங்களை பயன்கொள்வோம்**

ஆக, எந்த விடயங்களை எடுத்து நோக்கும் போதும் மேலைத்தேய உதாரணங்களை ஆதாரமாக சுட்டி நிற்பதை நாம் தவிர்த்திருக்க வேண்டும். தமிழ் இலக்கியத்தை விஞ்ஞான ஆய்வு நோக்கத்தின் புரிதல் கொண்டு பார்க்க வேண்டும். அதில் பொதிந்துள்ள அறிவியல் சார் எடுத்துக்காட்டுகளை புரிந்து கொள்ள தலைப்பட வேண்டும். விஞ்ஞானம் என்கிற அறிவியல் பொதுமையின் புதுமைக்குள் நுழைய முற்படும் போது, அதன் பல்வேறு படிமானங்களில் தமிழனே முன்னோடியாக இருந்துள்ளான் என்பதை தமிழ் இலக்கிய இலக்கண நெறிமுறைக் கோட்பாடுகள் தரும் ஆதார மையங்கள் ஊடே தெரிந்துகொள்ள வேண்டும். அவற்றை ஆய்வு நிலையில் இன்னமும் பயன்கொள்ள முற்சிக்க வேண்டும்.

# பொருளாதார சவால்களை முறியடிக்க சகலரும் ஒன்றிணைய வேண்டும்

## அரச தலைவர் மைத்திரி கொள்கை விளக்க உரையில் அறைகூவல்

எட்டாவது நாடாளுமன்றத்தின் இரண்டாவது அமர்வை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நேற்று உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து கொள்கை விளக்க உரையாற்றினார். அவரது உரை முழுமையாக வருமாறு:

2015 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 1 ஆம் திகதி, எட்டாவது நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வை ஆரம்பித்து வைத்து என்னால் முன்வைக்கப்பட்ட கொள்கை அறிக்கையின் தொடர்ச்சியாகவே இன்றைய இந்த அறிக்கையையும் முன்வைக்கின்றேன்.

தற்போதைய அரசுக்கு ஆணையைப் பெற்றுக் கொடுத்த மக்களின் முக்கிய வேண்டுகோளாக இருந்த, இலங்கை சமூகத்தை மீண்டும் ஜனநாயக மயப்படுத்தி மனித நேயமும் பொறுப்பும் மிக்க ஒரு சமூகமாக உருவாக்க வேண்டும் என்ற விடயத்தை கடந்த மூன்று ஆண்டுகளுக்குள் சிறந்த முறையில் அல்லது நேர்த்தியாக நிறைவேற்றப்பட்டிருக்கின்றது என்பதை விமர்சனங்களுக்கு மத்தியிலும் நீங்கள் அனைவரும் ஏற்றுக் கொள்வீர்கள் என்று நான் நம்புகிறேன்.

### 7ஆவது நாடாளுமன்றம்

2015ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதி எனது தலைமைத்துவத்தின் கீழ் உருவாக்கப்பட்ட அரசின் ஆட்சிக் காலத்தினுள் செயற்பட்ட 7ஆவது நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சில மக்கள் நேய சட்ட திட்டங்கள் இருக்கின்றன.

2015ஆம் ஆண்டு மார்ச் மாதம் நிறைவேற்றப்பட்ட புகையிலை மற்றும் போதைப்பொருள் தேசிய அதிகார சபையினை நிறுவுவதற்கான மாற்றம் செய்யப்பட்ட சட்டதிருத்தம்

2015ஆம் ஆண்டு மார்ச் மாதம் நிறைவேற்றப்பட்ட தேசிய ஔடத சட்டம்

2015ஆம் ஆண்டு மே மாதம் நிறைவேற்றப்பட்ட அரசமைப்பின் 19 ஆவது சீர்திருத்தம் ஆகியன இங்கு குறிப்பிடத் தக்கவையாகும்.

இங்கே குறிப்பிடப்பட்ட சட்ட திட்டங்கள் நிறைவேற்றப்பட்டமை நாடாளுமன்ற வரலாற்றில் மிக முக்கிய நிகழ்வுகளாகும். அதற்கு அடித்தளமாக அமைந்த இரண்டு முக்கிய விடயங்கள் மீது இங்கே எனது கவனத்தைச் செலுத்த விரும்புகிறேன்.

நாட்டினதும் நாட்டு மக்களினதும் அபிவிருத்திக்காக நாடாளுமன்றத்தின் அனைத்துக் கட்சிகளும் எவ்வித தடங்கல்களும் இன்றி தேசிய இணக்கப்பாட்டுக்காக ஒன்றுகூடியமை குறிப்பிடத்தக்க விடயமாகும். 2015ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஜூன் மாதம் வரையில் செயற்பட்ட 7 ஆவது நாடாளுமன்றத்தின் அமைவு பற்றி நோக்கும்போது சிறிலங்கா சுதந்திரக் கட்சி உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு 142 ஆசனங்கள் இருந்த அதேவேளை நாடாளுமன்றத்தின் தலைமை அமைச்சரைப் பிரதிநிதித்துவப்படுத்திய ஐக்கிய தேசியக் கட்சிக்கு 47 ஆசனங்களே இருந்தன. எவ்வாறாயினும் காலம் காலமாக நாடாளுமன்றத்தில் காணப்படுகின்ற பகைமை அரசியலை ஒருபுறம் வைத்துவிட்டு தேசிய தேவைகளை நிறைவேற்றும் வகையில் எமது நாட்டின் அரசியல் கட்சிகளுக்கு ஒன்றுபட்டு செயற்பட முடியும் என்பது நிரூபிக்கப்பட்டது. இலங்கை சுதந்திரம் அடைந்ததன் பின்னர் நாட்டினுள் குவிந்து கிடக்கின்ற தீராத தேசிய மட்டத்திலான பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளும் வாய்ப்பு கலந்துரையாடல் மற்றும் இணக்கப்பாட்டினுள் காணப்படுகின்றது என்பது இதன் மூலம் நிரூபிக்கப்பட்டது.

அதற்கமைய,

1. மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக யதார்த்தமாக்கிக் கொள்ள முடியாதிருந்த சேனக்க பிபிலே அவர்களின் ஔடதக் கொள்கை இன்று யதார்த்தமாகி இருக்கின்றது.
2. சிகரெட்டின் தாக்கம் பற்றிய 80 சதவீதம் படங்களிலான எச்சரிக்கை, புதிய புகையிலை மற்றும் போதைப்பொருள் சட்டத்தின் மூலம் செயற்படுத்தப்பட்டிருக்கின்றது.
3. இலங்கையின் அண்மைக்கால வரலாற்றில் ஓர் அரசியல் விடயத்துக்காக ஒன்று திரட்டப்பட்ட அதிகபட்ச எதிர்ப்பு நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரச தலைவர் பதவிக்கு எதிராகவே எழுந்தது. ஆயினும் அன்றுமுதல் இன்றுவரை நிறைவேற்று அதிகாரத்தை எதிர்த்த எவருமே அதன் அதிகாரங்களைக் குறைக்க முன்வரவில்லை. மாறாக அதன் அதிகாரங்களை தான்தோன்றித்தனமாக அதிகரித்துக் கொள்வதே வழக்கமாக இருந்தது. 2015 மே மாதம் 15 ஆம் திகதி உயர் நீதிமன்றத்தின் பரிந்துரைக்கு அமைய பொது வாக்கெடுப்புக்கு உட்படுத்தாது குறைக்கக்கூடிய ஆகக்கூடிய அதிகாரங்களை குறைக்க, அகற்ற முடிந்தமை இந்த இணக்கப்பாட்டு அரசியலின் உண்மையான பலமாகும்.

### பொருளாதாரம் சார்ந்த நடவடிக்கை

ஜனவரி 8 ஆம் திகதி ஆரம்பமான அரசியல் மாற்றத்தை மேலும் யதார்த்தமாக்கும் வகையில் 2015 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் நடத்தப்பட்ட நாடாளுமன்றத்தேர்தலின் பின்னர் 8 ஆவது நாடாளுமன்றத்துக்கு தெரிவான பெரும்பான்மையான நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடந்த மூன்று ஆண்டுகளாக செயற்பட்டிருக்கின்றார்கள் என்பதையிட்டு அவர்கள் மீதான மதிப்புக் கலந்த நன்றியுடன் தெரிவிக்கிறேன்.

அந்தக் காலப்பகுதியில் உங்களால் நிறைவேற்றப்பட்ட சட்ட திட்டங்களில் பெரும்பாலானவை நாட்டின் பொருளாதாரத்தை முகாமைத்துவம் செய்பவையாகவே அமைந்தன. கடந்த மூன்று ஆண்டுகளில் முன்வைக்கப்பட்ட இரண்டு ஒதுக்கீட்டுச் சட்டங்களுக்கு மேலதிகமாக பொருளாதார துறையைச் சார்ந்த 18 சட்டங்கள் உங்களால் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. அந்த அனைத்து சட்டதிட்டங்களும் எம்முன் இருக்கின்ற 10.3 ரில்லியன் (பத்து லட்சம் கோடி ரூபாவுக்கும் அதிகமான) மாபெரும் கடன் சுமையை முகாமைத்துவம் செய்யும் நோக்கிலேயே ஆகும். அத்தோடு நாட்டின் வருமானத்தை அதிகரிப்பதற்கு தேவையான இன்னும் பல சட்டதிட்டங்கள் அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. பேச்சுச் சுதந்திரத்தை பலப்படுத்தும் வகையில் 2016 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதத்தில் விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்ட தகவல் அறியும் சட்டம் இன்று குடிமக்களுக்கு கிடைத்திருக்கின்ற ஆசியாவிலேயே பலம்மிக்க சட்டமாக கருதப்படுகின்றது.



நாடாளுமன்றத்தில் அக்கிராசனத்தில் அமர்ந்து கொள்கை விளக்கவுரை நிகழ்த்தும் மைத்திரிபால சிறிசேன

பொது வாக்குரிமையை யதார்த்தமாக்கும் வகையில் 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நாம் எமது உள்ளூராட்சி தேர்தலுக்கான திருத்தச் சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறோம்.

அத்தோடு பேண்தகு அபிவிருத்தியை யதார்த்தமாக்கிக் கொள்ளும் வகையில் 2017 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் பேண்தகு அபிவிருத்திச் சட்டத்தை நிறைவேற்றிக்கொள்ள முடிந்தது. இடைக்கால நீதி மற்றும் சகவாழ்வை ஏற்படுத்தும் நோக்கில் காணாமற்போனோர் பற்றி கண்டறியும் அலுவலகம் பற்றிய சட்டம் மற்றும் பாதிக்கப்பட்ட மற்றும் குற்றவியல் வழக்கு சாட்சியாளர்களை பாதுகாக்கும் நோக்கில் அறிமுகப்படுத்தி வைக்கப்பட்ட சட்டம் ஆகியவற்றை இங்கு குறிப்பிட்டே ஆகவேண்டும்.

### அரசின் வெற்றி

அரசு தமது ஆட்சிக் காலத்தினுள் மக்களுக்காகப் பெற்றுக் கொடுத்திருக்கும் பல வெற்றிகளைப் பற்றி இங்கு கவனத்தில் கொண்டுவர வேண்டுமென நான் நம்புகிறேன்.

2010ஆம் ஆண்டு முதல் நாடு இழந்திருந்த ஜிஎஸ்பி வரிச்சலுகையை எம்மால் பெற்றுக்கொள்ள முடிந்தது. 6 ஆயிலரத்து 600 பொருள்கள் தொடர்பில் நாட்டுக்கு நன்மை பயக்க முடிந்திருப்பதுடன் மொத்த வருமானத்தை அதிகரித்துக்கொள்ள முடிந்திருக்கின்றது. ஆடை மற்றும் மீன் ஏற்றுமதி இவற்றுள் முதலிடம் வகிக்கின்றன.

பெருநகர அபிவிருத்தி மற்றும் துறைமுக அபிவிருத்தி திட்டம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது. நீதித்துறையின் சுயாதீனத் தன்மை உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது. சட்டமும் உத்தரவுகளும் எவ்வித தாக்கமும் இன்றி நாட்டினுள் செயற்பட்டு வருகின்றன. நாட்டில் நீதியின் அதிகாரம் நிலையாக்கப்பட்டி ருக்கின்றது. சட்டத்துக்கு முரணான கைதுகளுக்கான எந்த வாய்ப்பும் இல்லாமல் ஆக்கப்பட்டிருக்கின்றது.

### குற்றச் செயல்கள் குறைவு

சட்டம் மற்றும் ஒழுங்கு பற்றி கவனம் செலுத்தும்போது 2014 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதியில் பாரதூரமான குற்றச் செயல்களை 30 சதவீதத்தால் குறைத்துக்கொள்ள முடிந்துள்ளது.

இலங்கை துறைமுக அதிகாரசபை 2017 ஆம் ஆண்டில் 13 ஆயிரத்து 200 மில்லியன் ரூபா தேறிய இலாபத்தை ஈட்டியிருக்கின்றது. 2016 ஆம் ஆண்டின் தேறிய இலாபமான ஆயிரத்து 100 மில்லியன் ரூபாவுடன் ஒப்பிடும்போது இது நூற்றுக்கு நூறு சதவீதமான வளர்ச்சியாகும். துறைமுக துறையில் பொருளாதார மற்றும் அபிவிருத்தி ரீதியிலான பல வெற்றிகளை எம்மால் ஈட்ட முடிந்துள்ளது. 2017 ஆம் ஆண்டில் நாம் பெற்ற 15.1 பில்லியன் அமெரிக்கன் டொலர் வருமானமே அண்மித்த காலத்தில் நாம் பெற்ற உயரிய ஏற்றுமதி வருமானமாகும்.

புதிய தொழில்நுட்பத்தை ஊக்குவிப்பதற்காக பாடசாலைத் துறையிலும் அரச துறையிலும் அனேகமான செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. வெளிநாட்டுத் தொழில், நாடு கடந்த உழைப்பாளிகள் ஆகிய துறைகளுக்காகவும்; நாம் மிக முக்கியமான பல வசதிகளைச் செய்து கொடுத்திருக்கின்றோம்.

### கல்வித்துறை

2015 ஆம் ஆண்டின் பின் கல்வித்துறை அபிவிருத்தியில் 'அண்மித்த பாடசாலை சிறந்த பாடசாலை' செயற்றிட்டம் மாணவர் நலன்புரித் திட்டமான 'சுரக்ஷ' மாணவக் காப்புறுதி, கல்வி மறுசீரமைப்பு, அனைத்துப் பிள்ளைகளுக்கும் முதலாம் ஆண்டு முதல் 13 ஆம் ஆண்டு வரையிலான கட்டாய தொடர் கல்வியை பெற்றுக் கொடுக்கும் வேலைத்திட்டம், தேசிய கல்வி நிறுவனத்தை மறுசீரமைத்தல், மும்மொழிக் கல்வியை ஊக்குவித்தல் ஆகியன கல்வித்துறையில் வளர்ச்சியை காட்டியிருக்கும் துறைகளாகும்.

'பிள்ளைகளை பாதுகாப்போம்' தேசிய வேலைத்திட்டம், முன்பள்ளி மற்றும் பகல் நேரத்தில் குழந்தைகள் பராமரிக்கும் நிலையங்களின் மனித வள மற்றும் அடிப்படை வசதிகள் ஆகியவற்றை அபிவிருத்தி செய்தல், நிறை குறைந்த பிள்ளைப் பேறு எண்ணிக்கையைக் குறைத்தல் மற்றும் தாய்மாரின் போசாக்குத் தன்மையை உயர்த்துதல், வறிய பிரதேசங்களில் போசாக்கின்மையை குறைக்கும் வகையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதேசங்களில் பிள்ளைகளுக்கு போசாக்கு மிக்க ஒருவேளை உணவை பெற்றுக்கொடுக்கும் திட்டத்தையும் நாம் ஆரம்பித்துள்ளோம்.

பால்நிலை வன்முறையைக் குறைப்பதற்கான தேசிய செயற்றிட்டம் தற்போது மிக நேர்த்தியாகச் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. கிராமிய பொருளாதார அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு செயற்படும் செயற்றிட்டங்களில் 25 சதவீதமான முதலீடு பெண்களுக்காகவே ஒதுக்கப்படுகின்றது.

### பேண்தகு அபிவிருத்தி

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் முறையான வீடமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை எமது அரசு மிக வேகமாக அதேவேளை பெரிய வளர்ச்சியையும் ஈட்டியிருக்கின்றது. 2015 ஆம் ஆண்டு முதல் இதுவரை சுமார் 3 இலட்சம் குடும்பங்களுக்கு வீடுகளைப் பெற்றுக்கொடுக்க முடிந்திருக்கின்றது. அதிக பொருளாதார நெருக்கடியை கொண்டுள்ள குடும்பங்களுக்காக எமது அரசின் வீட்டுத்திட்டம் மிகுந்த பலனை அளித்திருக்கின்றது.

பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை அடையும் பயணத்தில் 2030 ஆம் ஆண்டளவில் வறுமையற்ற அதேவேளை வயோதிப மற்றும் சிறப்புத் தேவை உடையோரின் உரிமைகளைப் பாதுகாக்கும் நாட்டைக் கட்டியெழுப்பும் பணியில் 2015 - 2017 ஆம் கால எல்லைக்கான சேவை வழங்கும் இலக்கு குழுக்களாக 9 வீதமாகவுள்ள ஊனமுற்றோர், 12.5 வீதமான 60 வயதுக்கும் கூடியோர், மொத்த சனத்தொகையில் 12 வீதமாகவுள்ள தனிப் பெற்றோரைக் கொண்ட குடும்பங்கள் மற்றும் மொத்த சனத்தொகையில் 25 வீதமாகவுள்ள சமுர்த்தி உதவிபெறுவோர் ஆகியோர் கணிப்பிடப்பட்டுள்ளனர்.

### மின்சக்தி

மின்சக்தித் துறையில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தியில் சூரிய சக்தி செயற்றிட்டம் மூலம் 150 மெகாவோட்ஸ் மின்சக்தியை புதிதாக தேசிய மின்சக்தி கட்டமைப்புக்குள் கொண்டு வர முடிந்துள்ளது. எதிர்காலத்தில் மின்சாரத்துறை சார்ந்த பிரச்சினைகளுக்குத் தீர்வாக கலப்பு மின் உற்பத்தி திட்டமொன்றை நாம் முன்வைத்துள்ளோம்.

அதேபோல் இதுவரை எந்த அரசினா

தொடர்ச்சி பக். 22

லும் கண்டுகொள்ளப்படாத சுமார் 2 லட்சத்து 75 ஆயிரம் குடும்பங்களின் குப்பி லாம்பு வெளிச்சத்தில் கல்வி கற்றுவந்த யுகத்தை நாம் முடிவுக்கு கொண்டுவந்தோம். அவர்களின் இல்லங்களுக்கு அரசின் செலவில் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

### வறட்சி

புதுப்பிக்கத்தக்க வலுச்சக்தி அபிவிருத்திக்காக முக்கியத்துவம் வழங்குவது விசேட அம்சமாகும். ஏனைய நாடுகள் முகங்கொடுக்கும் கடும் காலநிலை மாற்றங்களுக்கு நாமும் முகம் கொடுத்துள்ளோம். கடந்த பல ஆண்டுகளாக நிலவிய வறட்சியால் விவசாய உற்பத்தி வீழ்ச்சியை சந்தித்துள்ளதுடன் முன்னிருந்த அரசுகளைப் போலேவே எமக்கும் வெளிநாட்டிலிருந்து அரசியை இறக்குமதி செய்ய நேர்ந்தது. மழை வீழ்ச்சி குறைந்து காணப்படுவதால் விவசாயத்துறையின் உற்பத்தி மற்றும் வருமானம் நூற்றுக்கு முப்பது வீதம் வீழ்ச்சியை சந்தித்துள்ளதுடன் நீர் மின் உற்பத்திக்கும் அது பெரியளவு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. விவசாயிகள் இரசாயன உரங்களை தவிர்த்துவிட்டு இயற்கை விவசாயத்தில் ஈடுபடுவதை ஊக்குவிக்கும் பல தேசிய திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. லக் சதொச விற்பனை மையங்கள் 300 இலிருந்து 400 வரை உயர்த்தப்பட்டிருப்பதுடன் அவற்றினூடாக குறைந்த விலையில் பொருள்கள் விற்பனை செய்யப்படுகின்றன. நுகர்வோர் பாதுகாப்பை உறுதிசெய்யும் விதமாக நுகர்வோர் சங்கங்கள் புதிய தோற்றத்துடன் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

### சுகாதார சேவை

சுகாதாரத் துறைக்குள் இலவச சுகாதார சேவையை வலுப்படுத்தும் விதமாக வரலாற்றுச் சிறப்புமிக்க செயலை நாம் புரிந்துள்ளோம். பல்வேறு தடைகளை சந்தித்தவாறு 50 ஆண்டுகளுக்கு மேலாக மக்களின் எதிர்பார்ப்பாக இருந்த புதிய ஔடதக் கொள்கையை நாம் நிறைவேற்றினோம். அதனூடாக 48 அத்தியாவசிய மருந்து வகைகளின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன. ஒரு புற்று நோயாளியின் வாழ்நாள் முழுவதும் ஏற்படும் மொத்த மருத்துவ செலவையும் அரசு ஏற்கும் கொள்கையை முன்வைத்துள்ளது.

இருதய நோயாளிகளின் சத்திர சிகிச்சை செலவுகள் அனைத்தும் அரசு ஏற்றுக்கொள்ளும் புதிய திட்டம் முதன்முறையாக எம்மால் நிறைவேற்றப்பட்டதுடன் இருதய நோயாளிகளுக்கான ஸ்டென்ட் பொருத்துவதனை இலவசமாக வழங்கும் திட்டமும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. எமது வைத்திய மற்றும் தாதிச்சேவையை முதன்மையாகக் கொண்ட சுகாதார துறையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி தொடர்பாக உலக சுகாதார அமைப்பின் பாராட்டை நாம் பெற்றுள்ளோம்.

எமது அரசு நிறைவேற்றிய தேசிய மதுக் கொள்கை தொடர்பாக மகிழ்ச்சியடைய முடியும். இனங்காணப்படாத சிறுநீரக நோய்கள் தொடர்பாக முக்கிய அவதானத்தைச் செலுத்துவதுடன், உதவி தடுப்பு மற்றும் மருத்துவத் துறைகள் விரிந்த தேசிய திட்டமாக செயற்படுத்தினோம்.

3 ஆயிரத்து 600 மில்லியன் ரூபா செலவில் சிறுநீரக நோயை இனங்காணுவதற்கான நீர் பரிசோதனை மையங்களை உருவாக்கியதுடன், அந்தத் திட்டம் தற்போது பேராதனை பல்கலைக்கழக வளாகத்தினுள் இயங்கிவருகிறது. தொழில் மற்றும் தொழில்நுட்பத் துறையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கான அனைத்துப் பாடநெறிகளையும் இலவசமாக கற்பதற்கு 2017ஆம் ஆண்டு முதல் நாம் வாய்ப்பை வழங்கியுள்ளோம்.

தொழில்நுட்ப மற்றும் தொழில்சார் கல்வியை மேம்படுத்துவதனூடாக புதிய பொருளாதாரத்தை உருவாக்கும் பணிக்கான மனிதவள மேம்படுத்தலுக்கான முக்கியத்துவத்தை வழங்கியுள்ளோம்.

### வறுமை ஒழிப்பு

வறுமையை இல்லாதொழிப்பதற்காக சமுர்த்தி பெறுபவர்களின் கொடுப்பனவுகள் இரண்டு மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளன. கிராம சக்தி மக்கள் செயற்றிட்டதினூடாக இந்த ஆண்டு மட்டும் 2 ஆயிரம் கிராமங்களை முன்னேற்றுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. முதியோர் கொடுப்பனவை அதிகரிப்பது மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு வழங்கப்படும் போசாக்குப் பொதிக்கான கொடுப்பனவு ரூபா 500 இலிருந்து 2 ஆயிரம் ரூபா வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

10 ஆண்டுகளுக்கு பின்னர் அரச உத்தியோகத்தர்களின் அடிப்படை சம்பளம் 10 ஆயிரம் ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. நீதிமன்றத் துறையில் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் சிறப்பு அடிப்படையில் அதிகரிக்கப்பட்டுள்ளன. மஹாபொல புலமைப்பரிசில் தொகை 2 ஆயிரத்து 500 ரூபாவிலிருந்து 5 ஆயிரம் வரை அதிகரிக்கப்பட்டுள்ளது. சிறுநீரக நோயாளிகளுக்கு வழங்கப்பட்ட 3 ஆயிரம் ரூபா 5 ஆயிரம் ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது.

கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தின் ஓடுபாதை மிகக்குறுகிய காலத்தில் புதுப்பிக்கப்பட்டதுடன் உலகிலுள்ள மிகப்பெரிய வானூர்திகளைத் தரையிறக்கும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. சுற்றுலாத்துறை இலங்கைக்கான அந்நிய செலாவணியை பெற்றுத்தரும் மூன்றாவது துறையாக விளங்குகிறது. ஒட்டுமொத்த அந்நிய செலாவணி வருமானத்தின் 15 சதவீதம் சுற்றுலாத்துறை மூலமாக இன்று கிடைக்கப்பெறுகிறது.

### பாதுகாப்புத்துறை

இராணுவத்தினருக்கான 'சத்விரு, சங்ஹிந்த' இராணுவ வீடமைப்புத் திட்டம் 2017இல் ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன் இன்று அதில் 90 சதவீத பௌதீக வளர்ச்சியைக் காணமுடிகிறது. உபாயமார்க்க தேசிய பாதுகாப்பு தொடர்பாடல் திட்டம் 2015 இல் ஆரம்பித்ததுடன் அதன் வளர்ச்சி தொடர்பாக மகிழ்ச்சியடைய முடிகிறது.

அங்கவீனமுற்ற இராணுவத்தினருக்கான சிறப்பு சம்பளம் மற்றும் கொடுப்பனவு எம்மால் வழங்கப்பட்டுள்ளதுடன், அங்கவீனமுற்ற முப்படை வீரர்கள் மற்றும் விதவைகளுக்கான 'ரணவிரு பாதுகாப்பு' கொடுப்பனவின் கீழ் அங்கவீனமுற்ற இராணுவத்தினர் மற்றும் அவர்களின் மனைவியருக்கும், காலமான இராணுவத்தினரின் மனைவியருக்கும் அவர்களின் வாழ்நாள் வரை கொடுப்பனவுகள் வழங்கும் திட்டம், ஓய்வூதிய திணைக்களத்தினால் நிறைவேற்றப்படுகிறது.

ஓய்வூதிய நிலுவைகளை முறையாக செலுத்தும் செயற்பாடுகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

### வடக்கு - கிழக்கு காணி விடுவிப்பு

அதேபோல் 2015ஆம் ஆண்டு முதல் 2018ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் 40 ஆயிரத்து 475 ஏக்கர் அரச மற்றும் தனியார் காணிகள் முப்படையினரின் பயன்பாட்டிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளன. வடக்கு கிழக்கு மாகாணங்களில் மக்களுக்கு கிடைக்காமல் போரின் போது இராணுவத்தினர் பயன்பாட்டுக்காக பயன்படுத்திய காணிகளில் 85 சதவீத காணிகள் தற்போது விடுவிக்கப்பட்டுள்ளன. மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் துறையின் கீழ் 10 ஆயிரம் காணி உறுதிப் பத்திரங்கள் வழங்கும் திட்டம் 90 சதவீதம் நிறைவடைந்துள்ளது. .

பல தடைகளுக்கு மத்தியில் ஆரம்பிக்கப்பட்டு, பெரிய தடைகளுடன் மிக மெதுவாகவே செயற்படுத்தப்பட்ட மொரகஹகந்த களுகங்கை நீர்ப்பாசன திட்டத்தில் பெரிய முன்னேற்றத்தை எம்மால் அடைய முடிந்துள்ளது.

2015 முதல் புதிய துரிதப்படுத்தும் கட்டிட கட்டுமானத்திட்டமொன்றை அறிமுகப்படுத்துவதற்கும் தகுந்த செயற்குழுவை நியமிப்பதனூடாக பராக்கிரம சமுத்திரம் போல் 6 மடங்கு பெரியதான மொரகஹகந்த நீர்த்தேக்கத்தின் கட்டுமானப் பணிகளை நிறைவேற்றி, விவசாயிகளுக்கு நீர் விநியோகம் செய்வதுடன் களுகங்கை செயற்றிட்டத்தின் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.



நாடாளுமன்றுக்கு வருகை தந்த அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவையும் அவரது பாரியாரையும் சபாநாயகர் கருஜெயசூரிய வரவேற்கிறார்.

### குளங்கள் மறுசீரமைப்பு

காலநிலை மாற்றத்தால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளுக்கு முகங்கொடுக்கும் விதமாக வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக தேசிய விவசாய பொருளாதாரத்தை வலுப்படுத்தும் நோக்கத்துடன், வட மத்திய மாகாணத்தின் கால்வாய்களை மேம்படுத்தியதுடன் 800 சிறிய குளங்களையும் வடக்கு மாகாணத்தில் ஆயிரத்து 400 சிறிய குளங்களையும் ஊவா மாகாணத்தில் 350 சிறிய குளங்களையும் மறுசீரமைக்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 2 ஆயிரத்து 500 க்கும் மேற்பட்ட சிறிய குளங்களை ஒரே நேரத்தில் மறுசீரமைக்கும் மிகப்பெரிய திட்டமானது சுதந்திரத்துக்குப் பின் அரசால் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது பெரிய நீர்ப்பாசனத் திட்டமாகும்.

வடமேல் மற்றும் உலர்வலய பகுதிகளில் நீர்சார்ந்த பிரச்சினைகளுக்கு நிரந்தர முடிவை வழங்குவதற்காக வடமேல் பெரிய கால்வாய், வடமத்திய பெரிய கால்வாய், மினிப்பே பெரிய கால்வாய் என்று இலங்கை மக்களின் எதிர்கால பயன்பாட்டுக்காக பிரமாண்ட நீர்ப்பாசனத் திட்டங்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

### சுற்றாடல்

சுற்றாடல் பாதுகாப்பின் கீழ் பொலித்தீன், பிளாஸ்டிக் தொடர்பில் கடும் சட்டங்களை நிறைவேற்றியதுடன், ஐக்கிய நாடுகள் 'தூய்மையான சமுத்திரம்' திட்டத்தின் கீழ் தெற்காசிய பிராந்தியம் மற்றும் பொதுநலவாய நாடுகள் மத்தியில் கண்டல் தாவர பாதுகாப்புக்கான முதன்மை நாடாக எமது நாடு விளங்குகிறது.

சுற்றுச் சூழல் பாதுகாப்பு தேசிய வேலைத்திட்டம் போதைப் பொருள் ஒழிப்பு தேசிய நிகழ்ச்சித்திட்டம் சிறுநீரக நோய் ஒழிப்பு தேசிய நிகழ்ச்சித் திட்டம், பிள்ளைகளைப் பாதுகாப்போம் தேசிய நிகழ்ச்சித்திட்டம், பேண்தகு பாடசாலை திட்டம் ஆகியவை 90 சதவீத வளர்ச்சியைக் காட்டுகிறது. சுற்றாடல் மாசு கட்டுப்பாடு, கழிவு முகாமைத்துவம், வன பாதுகாப்பு, பேண்தகு காணி முகாமைத்துவம், சுற்றுச் சூழல் விழிப்புணர்வு ஆகிய மேம்படுத்தும் விடயங்களுக்கு நாம் முக்கியத்துவம் அளித்துள்ளோம். மக்களின் கடும் விமர்சனங்களுக்கு உள்ளாகியிருந்த கழிவு முகாமைத்துவத்துக்கு நிரந்தர செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

### தடைகள் விலகவில்லை

நான் இதுவரை குறிப்பிட்டது உங்களின் தலைமைக்கு கீழ் 8 ஆவது நாடாளுமன்ற, முதலாவது சபை அமர்வில் தற்போதைய அரசால் பெற்றுக்கொண்டுள்ள நாட்டின் அரசியல், பொருளாதார, சமூக மற்றும் கலாசார அபிவிருத்திக்கும் குடிமக்களின் உரிமைகளை உறுதிப்படுத்துவதற்காக மக்களுக்கு வழங்கப்பட்ட சட்ட ரீதியான மற்றும் வளர்ச்சி ரீதியான வெற்றிகளாகும்.

இந்த வெற்றிகள் மூலமாக இந்த நாடு ஜனநாயக மற்றும் மனித நேய நாட்டு மக்களுக்கு பொறுப்புக் கூறும் அரச முறையொன்று மற்றும் மக்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக தேவையான நிரந்தர அடித்தளமொன்றை உருவாக்கியுள்ளோம் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. ஆனால் நாம் எதிர்கொள்ள வேண்டிய தடைகள் விலகிச் சென்றதாகக் கருத முடியாது.

அரசின் புதிய பயணப் பாதைக்குத் தேவைப்படும் விடயங்கள் தொடர்பில் கவனத்தைச் செலுத்தி நாடு முகம்கொடுத்திருக்கும் 10 இலட்சம் கோடி ரூபாவுக்கும் அதிகமான கடனை மக்கள் மீது சுமத்தாமல் முகாமைத்துவம் செய்வது கட்டாயமாகவுள்ளது. வறுமையில் வாடும் மக்களை வறுமையிலிருந்து மீட்டெடுப்பது, அரச சேவையை முறைமைப்படுத்துவது மற்றும் வினைத் திறனானதாகவும் மாற்றுவதுடன், நெகிழ்வுத் தன்மையுடன் மக்களுக்குச் சேவையை வழங்குவதற்கான பணிகளை வலுப்படுத்துவதற்குத் தேவைப்படும் கொள்கைகளை உருவாக்குவதும், செயல் உபாயங்களை கண்டறிந்து முகாமைத்துவ முடிவுகளை எடுப்பதும் இங்கு முதன்மையா கும்.

### முதலாவது கொள்கை

படித்த இளம் சமூகத்தினர் மற்றும் மக்கள் விரும்பும் துரித வளர்ச்சிக்காக நாம் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டியதோடு அதை எதிர்காலத்துக்காகத் தள்ளிவைக்க முடியாது. சிங்கள, தமிழ், முஸ்லிம், மலே மற்றும் பறங்கிய இனத்தவர் மற்றும் ஆதிவாசி மக்களுக்கு தங்களின் நியாயமான வேண்டுகோள்களை நிறைவேற்றிக்கொள்ளும் வாய்ப்புகளை நாம் உறுதி செய்ய வேண்டும். அது இலங்கையர் என்ற முறையிலேயாகும்.

துரித பொருளாதார வளர்ச்சிக்காக அரச மற்றும் தனியார் துறையின் செயற்பங்களிப்பைப் பெற்றுக்கொள்ளல், உற்பத்திப் பெருக்கத்தையும் போட்டித் தன்மையையும் அதிகரித்தல், நேரடி வெளிநாட்டு முதலீடுகள் மற்றும் ஏற்றுமதி பொருளாதார வளர்ச்சியை நோக்காக கொண்ட வள முகாமைத்துவம் அரச நிதி உறுதிப்பாட்டை ஏற்படுத்துதல் அவற்றுள் முதன்மையாகும்.

மேற்குறிப்பிட்ட அனைத்து சவால்களையும் வெற்றிகொள்ள செயற்படுவது என்பதன் அர்த்தம் இலங்கையை அனைத்து துறைகளிலும் வளர்ச்சி பெறும் நாடாக உருவாக்கும் எமது முதல் கொள்கையை நிறைவேற்றிக்கொள்வதேயாகும்.

### இரண்டாவது கொள்கை

எமது இரண்டாவது கொள்கை அரசியல் உறுதிப்பாட்டுக்காக தேசிய மற்றும் மத நல்லிணக்கத்தை பெற்றுக் கொள்வதாகும். ஊழல் மற்றும் மோசடிகளற்ற செயல்வினைமிக்க அரச தந்திரத்தை உருவாக்குவது மூன்றாவது குறிக்கோளாகும். எனது ஆட்சிக்காலத்துக்குள் மேற்குறிப்பிட்ட வெற்றிகளைப் பெறுவதே எனது ஒரே எண்ணமாகும்.

என்னால் 2015ஆம் ஆண்டு செப்ரெம்பர் முதலாம் திகதி உங்கள் முன் ஆற்றப்பட்ட தலைமை உரையின் சாரம் இதுவாகும். அன்று நாம் கூறியது நீங்கள் இதுவரை எந்தவித நாடாளுமன்ற உறுப்பினரும் முகம்கொடுக்காத மாற்றத்துக்கான யுகத்தின் படைப்பாளிகள் என்றாகும். மாற்றத்துக்கான யுகம் எப்போதும் கடுமையான மற்றும் விரும்பத்தகாத காலகட்டமாகவே உலக வரலாறு எடுத்துக் காட்டுகிறது.

### புதிய தலைமுறைக்கான இலக்கு

இன்று சகல இலங்கை மக்களும் சௌபாக்கியத்தின் சுதந்திரத்தைப் பெற்றுக்கொள்ளவே எதிர்பார்க்கின்றனர். இலஞ்சம், ஊழல், மோசடி, வீண்விரயம் என்பவற்றுக்கு எதிராக செயற்படுதல் தேசத்தின் எதிர்காலத்துக்கான தற்பாதுகாப்பாகும். இன்று ஆரம்பமாகும் இந்தப் புதிய அமர்வை அந்த எதிர்பார்ப்புக்களை அடைவதற்கு கிடைத்துள்ள ஒரு சந்தர்ப்பமாகவே கருதவேண்டும்.

இலங்கையில் ஆண்டுதோறும் பிறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை சுமார் 3 லட்சத்து 31 ஆயிரம் ஆகும். ஆண்டுதோறும் ஏற்படும் இறப்புகளின் எண்ணிக்கை ஒரு இலட்சத்து 31 ஆயிரம் ஆகும். அதற்கேற்ப எமது நாட்டின் மொத்த சனத்தொகையில் ஆண்டுதோறும் சுமார் 2 லட்சம் அளவில் அதிகரிப்பு ஏற்படுகின்றது. எமது புதிய தலைமுறையினருக்கு இலக்குகள் காணப்படு

தொடர்ச்சி பக். 23

கின்றன. கல்விமான்களுக்கும் புத்திஜீவிகளுக்கும் இலக்குகள் காணப்படுகின்றன. அதேபோல் நாட்டுக்கும் இலக்குகள் காணப்படுகின்றன. அன்று நான் அரசிலிருந்து விலகி மக்களின் ஆசீர்வாதங்களுடன் தற்போதைய அரசை உருவாக்கியமைக்கு தேசத்தின் எதிர்காலமும் எமது தாய் நாட்டின் உன்னதமான குறிக்கோள்களை அடிப்படையாகக் கொண்ட தீர்க்கமான உறுதியான இலக்குகளை நிறைவேற்றக்கொள்ள வேண்டும் என்ற உறுதிப்பாடுமே காரணமாக அமைந்தது.

### அதிகார மோதல்கள்


தற்போது எமது நாடு பல்வேறு கட்சிகளினதும் குழுக்களினதும் அரசியல் பலத்தை உரசிப் பார்ப்பதற்கு பொருத்தமானவொரு சூழ்நிலையில் காணப்படவில்லை. நாட்டின் முன் காணப்படும் சவால்களை ஒன்றிணைந்து வெற்றிகொள்ள வேண்டிய நிலையிலேயே காணப்படுகின்றது என்பதை நான் வலியுறுத்த விரும்புகின்றேன்.

அந்த முன்னுரிமைகளை யதார்த்தமாக்கிக் கொள்வதற்கு முதலில் கூட்டு அரசில் அங்கம் வகிக்கும் கட்சிகளுக்கிடையே காணப்படும் அதிகார மோதல்களையும் இரண்டாவதாக அரசுக்கும் எதிர்க்கட்சிக்கும் இடையே காணப்படும் அதிகாரப் போராட்டங்களையும் சமனிலைப்படுத்த வேண்டும். தற்போது காணப்படும் சகலவித அதிகார மோதல்களினாலும் மக்களின் எதிர்பார்ப்புக்களே பாதிப்புக்கு உள்ளாகின்றன.

### மக்கள் எதிர்பார்ப்பு

மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றும். உண்மையான மக்கள் நேய செயற்றிட்டங்களின் நிபந்தனைகளாக பின்வரும் 15 விடயங்கள் இனங்காணப்பட்டுள்ளன.

1. மக்களின் பொருளாதார சுபீட்சத்தை உறுதிப்படுத்தல்.
2. வறுமையை இல்லாதொழித்தல்.
3. இளைஞர்களுக்கு புதிய தொழில்வாய்ப்புக்களை ஏற்படுத்தல்.
4. அரச பணியாளர்களுக்கு திருப்திகரமான சூழலை ஏற்படுத்தல்.
5. பொலிஸ் மற்றும் முப்படையினரின் தன்னம்பிக்கையையும் உயர் குறிக்கோள்களையும் உறுதிப்படுத்தல்.
6. சட்டம், அதிகாரம், ஜனநாயகம், மனித உரிமைகள் மற்றும் பேச்சு சுதந்திரத்தை சமூகத்தில் உறுதி செய்தல்.
7. தமிழ் மக்களின் சம உரிமைகளை அடிப்படையாகக் கொண்ட வேணவாக்களை ஏற்றுக்கொள்ளல்.
8. முஸ்லிம் மக்களின் நலன் மற்றும் சமூக, கலாசார தேவைகளை உறுதிசெய்தல்.
9. மலையக தமிழ் மக்களின் பொருளாதார, சமூக நிலையை மேம்படுத்தல்.
10. நாட்டின் பெரும்பான்மை சமூகமான சிங்கள மக்களின் கலாசார உரிமைகளை பலப்படுத்தி, உறுதி செய்து தேசத்தின் அடையாளத்தை வலுப்படுத்தல்.
11. பெண்களைப் பலப்படுத்துதலும் அவர்களது நேரடி பங்களிப்பும்



12. சமூகத்திலுள்ள சிறப்புத் தேவைகளை உடைய குடிமக்கள் தொடர்பாக உணர்வுபூர்வமாக செயற்படல்.
13. நாட்டின் இயற்கைச் சூழலைப் பாதுகாக்கும், தேசிய வளங்களை எதிர்கால சந்ததியினருக்கும் பெற்றுத்தரக்கூடிய பேண்தகு அபிவிருத்தியை உறுதிசெய்தல்.
14. சமய நம்பிக்கைகள் எமது மரபுரிமைகள் பாதுகாக்கப்படும் வகையில் சகல சமயப் பெரியார்களையும் மத குருமார்களையும் மகா சங்கத்தினரையும் பேண்தகு முறையில் போசித்தல்.
15. அரசியல் பலப் பரீட்சைக்கு அப்பால் சென்று நாட்டை அபிவிருத்தி செய்வதற்காக சகல இன, மத, அரசியல், கட்சிகளை ஒன்றிணைத்து கட்டியெழுப்பப்படும் தேசிய பேண்தகு அபிவிருத்தி இலக்கை உருவாக்குதல்.

மேற்கூறப்பட்ட நிபந்தனைகளின் கீழ் செயற்படும்போது முழுமை மற்றும் நுண் அபிவிருத்தி உபாய மார்க்கங்களினூடாக செயற்பட வேண்டியதுடன், அவற்றின் வெற்றிக்காக கட்டமைக்கப்பட்ட மாற்றங்களும் அத்தியாவசியமாகும் என குறிப்பிட வேண்டும்.

அதற்கமைய மக்களின் பிரதிநிதிகளான நீங்கள் ஒன்றிணைந்து மேற்கூறப்பட்ட நிகழ்ச்சி நிரலை நடைமுறைப்படுத்துபவர்களாகவோ அல்லது அதன் மேற்பார்வையாளர்களாகவோ அல்லது ஆலோசகர்களாகவோ நியமிக்கப்படலாம். இந்த ஒட்டுமொத்த செயற்பாட்டை மேற்பார்வை செய்கையில் அபிவிருத்திப் பெறுபேறுகளின் அடிப்படையில் அமைந்த அபிவிருத்தி தொடராய்வு செயற்றிட்டம் ஒன்றை அறிமுகப்படுத்த என்னால் நடவடிக்கை எடுக்கக்கூடியதாக அமையும்.

### குற்றச்சாட்டுக்கள்

இந்த அரசு தொடர்பாக பல்வேறு தரப்பினர்கள் பல்வேறு விமர்சனங்களினால் குற்றச்சாட்டுக்களையும் முன்வைக்கின்றனர். அவ்வனைத்து விமர்சனங்கள் மற்றும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக அரசு என்ற வகையில் நாம் மிகுந்த நேர்மையோடு அவை தொடர்பில் கவனம் செலுத்துவதுடன், அது தொடர்பாக நாம் சுய விமர்சனத்திலும் ஈடுபட்டுள்ளோம் என்பதைத் தெரிவிக்க வேண்டும். சட்டத்தை நடைமுறைப்படுத்தும் நிறுவனங்களின் சுயாதீனத்தன்மையை ஏற்கனவே நாம் உறுதி செய்துள்ளோம். ஆயினும் இன்னும் சுதந்திரமாக உள்ள பெரியளவிலான மோசடியாளர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாமை தொடர்பாக விமர்சனங்கள் காணப்படுகின்றன.

ஊழலை முற்றாக இல்லாதொழித்து சகல ஊழல்வாதிகளுக்கு எதிராகவும் சட்டத்தை நடைமுறைப்படுத்துதலே எமது ஏகோபித்த எதிர்பார்ப்பாகும். அதுவே ஒட்டுமொத்த மக்களின் பிரார்த்தனையுமாகும்.

### இறுதி வாய்ப்பு இதுவே

நாட்டின் இரண்டு பிரதான கட்சிகளும் ஒன்றிணைந்து கூட்டு அரசை ஏற்படுத்தியுள்ளமை தொடர்பான குற்றச்சாட்டே எம் மீது சுமத்தப்படும் மற்றுமொரு குற்றச்சாட்டு ஆகும். நாட்டுக்கு எதிராக உள்ள சவால்களை கருத்திற்கொள்ளும்போது சகல கட்சிகளும் ஒன்றிணைந்து நாட்டுக்காக முன்னோக்கிப் பயணிக்க வேண்டும். பெரியதொரு கடன் சுமை எம் முன்னே உள்ளது. பயனற்ற வீண்விரயங்கள் செய்யப்பட்ட யுகத்தின் இழப்புகளையும் நாம் நீக்க வேண்டியுள்ளது. அந்த வகையில் நாடு மீண்டும் முன்னேற்றமடைவதற்குள்ள இறுதி சந்தர்ப்பம் இதுவே என்பதை கருத்திற்கொண்டு சகலரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

வைராக்கியம், குரோதம் நிறைந்த நாட்டில் ஆட்சி மாற்றங்களின்போது இடம்பெறும் பெரியளவிலான அரசியல் பழிவாங்கல்கள் இல்லாத, தோல்வியடைந்தவரும் வெற்றியாளரும் அபிமானத்தோடு வாழக்கூடிய சூழலை உருவாக்க வேண்டியதும் இன்றைய அரசியல் கடமையாகுமென நான் கருதுகின்றேன்.

எமது உன்னதமான தாய்நாட்டுக்கு நேர்மையாக சேவையாற்றினேன் என்ற உணர்வு எமது மனசாட்சியாக நாம் மறையும் வரை எம் மனதில் எதிரொலிக்க கூடிய வகையில் செயலாற்ற வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாக அமைய வேண்டும். அதற்கான எமது எதிர்காலத்துக்காக நாம் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்.

இந்த அரசை அமைக்கும்போது எமக்கு எதிராக பல சவால்கள் காணப்பட்டன. ஜனநாயகத்தையும் சட்டத்தின் ஆதிக்கத்தையும் மீண்டும் நிலைநாட்டுவதே அவற்றுள் முதலாவதாகும். இனங்களுக்கிடையே நம்பிக்கையையும் ஒற்றுமையையும் உறுதி செய்தல் இரண்டாவதாகும். பெரிய கடன் சுமையில் சிக்கியிருந்த நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்புதல், நாம் இழந்திருந்த பன்னாட்டுச் சமூகத்தின் நன்மதிப்பை பெற்றுக்கொள்ளல் என்பனவும் அவற்றுள் உள்ளடங்குகின்றன. எவ்வாறான குற்றச்சாட்டுக்கள், விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டபோதிலும் இவ் அனைத்து துறைகளிலும் வெற்றிகரமான பெறுபேறுகளை பெற்றுக்கொள்ள கடந்த மூன்று ஆண்டு காலத்துக்குள் எமது அரசால் முடிந்துள்ளது. அதேபோன்று இவ்வனைத்துத் துறைகளிலும் மேலும் நிறைவேற்றப்பட வேண்டிய பல விடயங்களும் காணப்படுகின்றன.

### வெற்றிகரமான பொருளாதாரம்

பலமான, நவீன இலங்கையை கட்டியெழுப்புவதற்கு அத்தியாவசியமான முயற்சியாண்மை முகாமைத்துவத்தில் நாட்டை ஈடுபடுத்தலும் தேசிய வர்த்தக சமூகத்துக்கும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு கவர்ச்சிகரமான கொள்கைகளை உருவாக்குதலும் அவசியமாகும். எமக்கு பழக்கப்பட்ட மோசடி அரசியலை தோற்கடித்து சமூகத்துக்கு நன்மை பயக்கும் மக்கள் நேய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்காக பாடுபட வேண்டியுள்ளது. அனைத்து குடிமகனுக்கும் வெற்றிபெறக்கூடிய பொருளாதாரமே தேவைப்படுகின்றது.

எமது நாட்டின் விவசாய மக்களைப் பற்றிக் குறிப்பிட வேண்டும். மூன்று ஆண்டுகளாக தகுந்த மழையின்மையால் நாட்டின் மொத்த தேசிய உற்பத்திக்கான விவசாயத் துறையின் பங்களிப்பும் வீழ்ச்சி கண்டுள்ளது. அதிக மழை மற்றும் நீண்டகால வறட்சி ஆகியன பூகோள ரீதியில் பாதிப்பை ஏற்படுத்தும் காலநிலை மாற்றங்களின் விளைவாகவே இருக்கின்றன. வறட்சி நிலவிய காலத்தில் அந்தப் பிரதேச மக்களுக்கு உணவை பெற்றுத்தரும் உதவித்திட்டங்கள் உள்ளிட்ட உதவித் திட்டங்களை செயற்படுத்துவதற்காக 38 ஆயிரம் மில்லியன் ரூபா செலவிடப்பட்டிருக்கின்றது.

இயற்கையின் பாதகமான தாக்கங்களிலிருந்து மீண்டு உரிய முறையில் வெற்றிகரமாக விவசாயத்துறையில் ஈடுபடுவதற்குத் தேவையான வழியை நிர்மாணித்தல் அவசியமாகும். விவசாயத்துறைக்கு புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதற்கு இன்னும் நாம் போதுமான அளவு வெற்றி பெற்றிருக்கிறோம் என்று மகிழ்ச்சி கொள்ள முடியாது. விவசாய உற்பத்தியை ஒழுங்குபடுத்துதல், பகிர்ந்தளித்தல் ஆகிய துறைகளை நவீனப்படுத்த வேண்டியிருக்கிறது.

அத்தோடு நடுத்தர வருமானத்தைப் பெறும் ஒரு நாடு என்ற வகையில் புதிய தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்துறை மீது கவனம் செலுத்த வேண்டிய காலம் வந்திருக்கின்றது.

### மாகாணசபை முறைமையை பலப்படுத்தல்

நிலையான நாட்டின் அடித்தளம் தேசிய நல்லிணக்கமே ஆகும். உண்மையான தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டுமாயின் சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட அரசியல் தீர்மானங்களை இயற்றத்தக்க கட்டமைப்பை அறிமுகப்படுத்த வேண்டும். அந்த நோக்கை வெற்றி கொள்வதற்கு தற்போது செயலில் இருந்துவரும் மாகாண சபை முறைமையை மேலும் பலப்படுத்துவது காலத்தின் தேவையாகும் என்று நான் நம்புகிறேன்.

எவ்வாறான விமர்சனங்கள் எழுந்த போதிலும் வடக்கு கிழக்கு மக்களின் பொறுமையிழப்பை நிரந்தரமாக சமரசப்படுத்த வேண்டுமாயின் மக்களின் விருப்பத்தையும் இணக்கப்பாட்டையும் பெற்ற அரசியல் வேலைத்திட்டமொன்றை ஆரம்பித்தல் வேண்டும். பௌதீக ரீதியில் நாம் பயங்கரவாதிகளை தோற்கடித்த போதிலும் அவர்களின் கொள்கையை முழுமையாக தோல்வியுறச் செய்வதற்கு இன்னும் முடியாது போயிருக்கின்றது. கடந்த மூன்றரை ஆண்டுகளாக பன்னாட்டு ரீதியிலான ஒத்துழைப்பைப் பெற்று அந்தக் கொள்கையை தோல்வியுறச் செய்வதற்கே நான் முயற்சித்து வந்தேன்.

### சகவாழ்வு

போரின் பின்னரான நிலமைகளை கையாள்வதென்பது மிகுந்த சவாலாகும் என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். நாம் அரசைப் பொறுப்பேற்ற சமயம் அந்தச் சவாலுக்கான விடைதேடும் காரியம் ஏழு ஆண்டுகளால் தாமதமாகி இருந்ததனால் அந்தச் சவால் மேலும் இக்கட்டான சூழ்நிலைக்கு உள்ளாகியிருந்தது. மூன்று தசாப்தங்களாக சமூகத்தில் வேரூன்றியிருந்த போர் மனநிலையை அகற்றி சகவாழ்வை ஏற்படுத்துவதற்கு இன்னும் எம்மால் பெரிய வேலைகளைச் செய்யவேண்டி இருக்கின்றது. அரசினால் மாத்திரம் அதனைச் செய்வது கடினமாகும். அதற்கு சமூகத்தின் அனைத்துத் தரப்புகளினதும் நேரடிப் பங்களிப்பு கட்டாயமாகத் தேவைப்படுகின்றது. அந்த நோக்கை அடைவதற்காக நாம் அனைவரும் ஒன்றுபட்டு செயற்படுவோமென அனைத்து தரப்புகளுக்கும் அழைப்பு விடுக்கின்றேன்.

### பாதுகாப்பு

தேசிய பாதுகாப்பு மீதான எமது கவனமும் இங்கு முக்கியத்துவம் பெறுகின்றது. எமது பூமியின் பாதுகாப்பு மனிதர்களின் பாதுகாப்பு, சைபர் பாதுகாப்பு ஆகியன இங்கு முக்கிய துறைகளாக அமைகின்றன. பூமியின் பாதுகாப்பின் கீழ் கடல் பரப்பு மீதும், மனிதப் பாதுகாப்பின் கீழ் உணவு மற்றும் நீர்ப் பாதுகாப்பு ஆகியனவும் முக்கியத்துவம் பெறுகின்றது. இந்து சமுத்திரத்தின் கேந்திர இடத்தில் இலங்கை அமைந்திருப்பதால் எமக்கு மிகுந்த முக்கியத்துவம் கிடைக்கப் பெற்றிருக்கின்றது. அதேபோல் நாம் எதிர்கால நோக்குடன் மிக நுட்பமாக கவனத்திற் கொள்ள வேண்டிய பாதுகாப்புத் துறை சவால்களும் இருக்கவே செய்கின்றன என்பதை நாம் எமது கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். பன்னாட்டு உறவுகளை பேணுவதில் நடுநிலையான, நட்பு ரீதியிலான கொள்கையின் முக்கியத்துவத்தை இங்கு வலியுறுத்த விரும்புகிறேன். எமது நட்பு ரீதியிலான வெளிநாட்டுக் கொள்கையே எமக்கு மிகுந்த பலனைப் பெற்றுத் தந்திருக்கின்றது. உலகில் அனைத்து நாடுகளைப் போன்றே ஐக்கிய நாடுகள் சபை முதலான பன்னாட்டு அமைப்புகளுடன் நாம் மிகுந்த நட்பையும் தோழமையையும் உருவாக்கிக்கொள்வதற்கு வேறொரு சந்தர்ப்பம் இல்லை என்றே கூறலாம்.

### முதிர்ச்சி இல்லை

2015ஆம் ஆண்டு: நான் தலைமையேற்ற யுக மாற்றம் இன்னும் நிறைவடையவில்லை. அன்று அது இலங்கைக்கு புதியதோர் அனுபவமாக அமைந்திருந்தது. 2015ஆம் ஆண்டு ஒகஸ்ட மாதம் முதல் கூட்டு அரசை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தாலும் அதற்கான அரசியல் மற்றும் சமூக முதிர்ச்சியை ஏற்படுத்திக்கொள்ளவில்லை என்பது கடந்த மூன்றாண்டுக்குள் ஏற்பட்ட சம்பவங்கள் ஊடாக மீண்டும் மீண்டும் நினைவுபடுத்தப்பட்டு கொண்டிருக்கின்றது. ஒப்பந்த ஜனநாயகம் மற்றும் உரையாடல் ஜனநாயகம் ஆகியவற்றை இன்று பல நாடுகள் தனது ஆட்சியின் அடிப்படையாக கொண்டு செயற்பட்டாலும் எமக்கு அவ்வகையான எண்ணக்கருக்கள் புதியதாகவே உள்ளன.

நிகழ்கால அரசியலைப் பார்வையிடும்போது எதிர்க்கட்சியின் செயற்பாடு வேறொரு வழியில் செல்ல வேண்டியுள்ளதுடன், கூட்டு அரசுக்குள் சகோதர கட்சிகளின் நடவடிக்கைகளில் மாற்றம் தேவைப்பட்டுள்ளது. தேசிய ஆட்சி ஒன்றுக்கொன்று வித்தியாசமான கோணங்களைக் கொண்ட கட்சிகளின் இணைப்பால் உருவாகியுள்ளது. அந்த கட்சிகள் அனைத்தும் புத்த பகவான் காட்டிய வழியில் செல்லவேண்டியதுடன் வஜ்ஜீன் சமூகத்தினரைப் போல ஒற்றுமை மற்றும் பேச்சு முதன்மையாக வைத்து அவர்கள் பின்பற்றிய வழிகளை நாமும் பின்பற்றுவோம். அரச தலைவர் என்ற வகையில் கடந்த மூன்றாண்டுகளாக நான் இவ்வாறே செயற்பட்டேன். அது நாட்டின் ஒட்டுமொத்த மக்களின் வெற்றிக்குக் காரணமாக அமையும் என்பதை நான் உறுதியாக நம்புகிறேன்.

இறுதியாக நாம் அரசாக எழுந்து நிற்பதுடன், பொருளாதார அபிவிருத்தியை பெற்றுக்கொள்கையில், எமது உரிமைகள் போலவே, தேசியத்தன்மை, கலாசாரம், எமது விதிமுறைகள் ஆகியவற்றை வலுவான அரசியல் சிந்தனையுடன் செயலாற்ற வேண்டுமென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். பொதுமக்களின் அரசியல் இதயத் துடிப்பை உணர்ந்து செயற்படுவதை நாம் நோக்காகக்கொண்டு இலங்கையை வெற்றி பெற்ற அரசாக கட்டியெழுப்புவதற்கு வருமாறு அழைப்பு விடுவதுடன் நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் வெற்றி கிடைக்கவேண்டுமென்று பிரார்த்தனை செய்கிறேன் - என்றார். (5)

சிவமயம்



திருநெல்வேலி

# திருவருள்மிகு ஸ்ரீ நீலாயதாக்ஷி அம்பிகா ஸமேத ஸ்ரீ காயாரோஹண சுவாமி தேவஸ்தானம்

## 2018 விளம்பி வருஷ கைலாசவாகனத் திருவிழா - 10.05.2018



*அண்ணலே எனை ஆண்டு கொண்டு அருளிய அமுதே*
*விண்ணிலே மறைந்தருள்புரி வேத நாயகனே*
*கண்ணினால் திருக்கைலையில் இருந்த நின் கோலம்*
*நண்ணி நான் தொழ நயந்து அருள்புரி எனப் பணிந்தார்.* (பெரியபுராணம்)

திருநெல்வேலியிலுள்ள திருவின் பொருத்தப்பாட்டை அழுத்தும் விதத்தில் அமைந்திருக்கின்றதும் செல்லப்பா சுவாமிகள் அவரது சீடர் யோகர் சுவாமிகள் இருவரும் ஏக காலத்தில் தரிசித்து வந்ததும் யாழ்ப்பாணத்திலுள்ள மிகப் பெரிய சிவ ஆலயங்களில் ஒன்றாக கணிக் கப்படுவதுமான ஸ்ரீ நீலாயதாக்ஷி அம்பிகா சமேத ஸ்ரீ காயா ரோஹண சுவாமி கோயில் கைலாசவாகனத்திருவிழா நிகழும் விளம்பி வருஷம் சித்திரை மாதம் 27 ஆம் திகதி (10.05.2018) வியாழக்கிழமை மாலை அபிசேக ஆராதனைகளுடன் வசந்த மண்டப பூசையைத் தொடர்ந்து விசேஷ மேளவாத்தியங்களுடன் உள் வீதி உலா வந்து மின்சார தீபங்களால் அலங்கரிக்கப்பட்ட கைலாசவாகனத்தில் பரிவார மூர்த்திகளுடன் எம்பெருமான் அனைத்து அடியார்களிற்கும் கைலைக் காட்சியை கொடுக்கும் பொருட்டு வெளிவீதி உலா வருவார். அடியார்கள் அனைவரும் வருகை தந்து பெருமானின் கைலைக் காட்சியைக் கண்டு தரிசித்து திருவருள் பெற்றுய்யுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**ச.சிவகுமாரக்குருக்கள்**
**ஸ்ரீகாயா ரோகண சுவாமி தேவஸ்தானம்**
**திருநெல்வேலி.**

**உபயகாரர்**
**கைலாச வாகன திருவிழா**

(CS 16359) (04.17)



யாழ் மாநகரில்...

வெளிநாட்டு

# மருத்துவப் பட்டப்படிப்பிற்கான

கல்வி வழிகாட்டல் கருத்தரங்கு

12th May 2018 10.00 am

இடம் ஞானம் ஹோட்டல்

அனுமதி இலவசம்

**BCAS CAMPUS**
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

தகவல்களுக்கு : 0777 444 407



# 16ஆம் நாள் பாஷாண உத்வாசன சபிண்டீகரண அழைப்பு



கடந்த 24.04.2018 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

## அமரர் பொன்னுத்துரை சிவசிதம்பரம் (சிவம்)

[சரவணாஸ் சவுண்ட் உரிமையாளர்]



அவர்களின் பாஷாண உத்வாசனம் (கல் எடுப்பு) இன்று (09.05.2018) புதன்கிழமை காலை 5 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் சபிண்டீகரண நிகழ்வு நாளை (10.05.2018) வியாழக் கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

**சிவன் வீதி,**
**ஆவரங்கால் புத்தூர்.**

(IN/6691)(11.17)

**குடும்பத்தினர்.**
**077 446 9327**

# தொழுகைக்கான திசை

மொகமட் அமீர்

"கிழக்குத் திசையும். மேற்குத் திசையும் அல்லாஹ்வுக்கே உரியன. ஆதலால் நீங்கள் எந்தத் திசையை நோக்கினும் அங்கு அல்லாஹ்வின் முகம் இருக்கிறது. நிச்சயமாக அல்லாஹ் விசாலமானவன்" (திருக்குர்ஆன் 2:115)

அண்ணல் எம்பெருமானார் (ஸல்) நபித்துவம் கொடுக்கப்பட்டு அல்லாஹ்வின் தூதராய் அவர்கள் அங்கீகரிக்கப்பட்டார்கள். அல்லாஹ்விடம் இருந்து 'வஹி' எனப்படும் இறைச் செய்திகள் அவ்வப்போது நபிகளுக்கு வந்தன. அந்த இறைவசனங்களை மக்களிடம் அவர்கள் எடுத்துக் கூறினார்கள்.

அந்த இறைவசனங்களில் இருந்த உண்மை மக்களை இஸ்லாத்தின் பக்கம் ஈர்த்தது. கொஞ்சம் கொஞ்சமாக மக்கள் நபிகளாரின் போதனைகளை ஏற்றுக் கொண்டு அல்லாஹ்வின் நல்லடியார்கள் கூட்டத்தில் தங்களை இணைத்துக்கொண்டனர்.

இவ்வாறு இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டவர்கள். ஏக இறைவனான தன்னை வணங்குவதற்கான ஒரு வழிபாட்டு முறையை ஏற்படுத்திக் கொடுக்க அல்லாஹ் விரும்பினான். தொழுகைக்காக எழுந்து நிற்பவர் பாலஸ்தீனில் உள்ள "பைத்துல் முகத்தஸ்" என்ற இறை இல்லத்தை நோக்கி தொழ வேண்டும் என்று கட்டளை பிறப்பித்தார்.

அண்ணலார் மக்காவில் வாழ்ந்த காலத்தில் 'பைத்துல் முகத்தஸ்' என்ற பள்ளிவாசல் இருந்த திசையை நோக்கியே அனைவரும் தொழுது வந்தனர். நபிபெருமான் (ஸல்) மக்காவை விட்டு 'ஹிஜ்ரத்' செய்து மதினாவை வந்தடைந்த பிறகு 'கஅபா' ஆலயத்தின் மீதான அன்பு அவருக்கு மனதில் அதிகரிக்க ஆரம்பித்தது. இதுகுறித்து அவர் இறைவனிடம் பிரார்த்தனையும் செய்தார்.


இதை அறிந்த அல்லாஹ் நபிகளாருக்கு ஆறுதல் அளிக்கும் வகையில் கீழ்க்கண்ட இந்த வசனத்தை இறக்கினான்:

"நபியே உமது முகம் பிரார்த்தனை செய்து அடிக்கடி வானத்தை நோக்குவதை நாம் காணுகிறோம். ஆகவே நீர் விரும்பும் கிப்லாவாகிய மக்காவின் பக்கமே நாம் உம்மை நிச்சயமாக திருப்புகிறோம். எனவே நீர் தொழும் போது மக்காவிலுள்ள கஅபத்துல்லாவின் பக்கமே உமது முகத்தை திருப்பு வீராக. நம்பிக்கையாளர்களே! நீங்களும் எங்கிருந்த போதிலும் தொழுகையில் அதன் பக்கமே உங்கள் முகங்களைத் திருப்புங்கள்" (திருக்குர்ஆன் 2:144).

நபி மனம் மகிழ்ந்தவர்களாக தான் தொழுது கொண்டிருந்த இரண்டாவது ரக்காத்திலேயே அப்படியே நேர் எதிர் திசையான கஅபத்துல்லாவை நோக்கி திரும்பினார்கள். அவர்களைப் பின் தொடர்ந்து தொழுது கொண்டிருந்த சஹாபா பெருமக்களும் அப்படியே நபிகளைப் பின்பற்றி தங்கள் திசையை மாற்றிக் கொண்டார்கள்.

அன்றிலிருந்து இன்று வரை இஸ்லாமியர்கள் அனைவரும் கஅபத்துல்லாவை முன்னோக்கியே தொழுது வருகிறார்கள். எந்த மஸ்ஜித்தில் நபிபெருமானார் (ஸல்) தொழுதாரோ அந்த பள்ளிவாசல் இன்று வரை பாதுகாக்கப்பட்டு வருகிறது. அங்கு இமாம் நின்று தொழும் இடம் (மிக்ராப்) எதிரும் புதிருமாக இரண்டு இருப்பதை இன்று கூட அங்கு செல்லும் அனைவராலும் காணமுடியும். அந்தப் பள்ளிவாசல் ''மஸ்ஜித் கிப்லதைன்'' (இரண்டு மிக்ராப்கள் கொண்ட மஸ்ஜித்) என்ற அடை மொழியோடு அழைக்கப்பட்டு வருகிறது.

பெரும்பாலான முஸ்லிம்கள் அனைவரும் மேற்குத் திசையை நோக்கித் தொழுகிறார்கள் என்றே நினைத்துக் கொண்டிருக்கின்றனர். ஆனால் உண்மையில் அல்லாஹ்வின் கட்டளை கஅபத்துல்லாவை நோக்கி தொழ வேண்டும் என்பதே. நாம் எங்கிருந்த போதிலும் நம் முகத்தை காஅபா நோக்கியே திருப்பு வோம், தொழுவோம், நன்மை அனைத்தையும் பெற்று கொள்வோம்.





# ஓராண்டு நினைவஞ்சலி

## அமரர் சிவநேசன் சசிக்குமார்



பிறப்பு 19 . 10 . 1998

இறப்பு 09 . 05 . 2017



சாகாமல் இருப்பதென்பது சாத்தியமில்லைத்தான்
ஆனால் நீ வாழாமல் போனாயே.....
நெருப்பாய் எரிகிறது எங்கள் இதயம்.....
பட்டம் பல பெற்று வருவாய் என்றிருக்க
ஒற்றை மலர் மாலையோடு விடை
பெற்றுப் போனாயோ - நீ
நினைவாகிப் போனாலும்
வரலாறு என்றோ ஓர் நாள்
உன் கல்லறைக்கு மலர் தூவும்.

துயர் பகிர்வோர்:
அம்மா, அப்பா, சகோதர, சகோதரிகள், நண்பர்கள்.

(CS 16355)(14.17)

## தொழிற்பயிற்சி வளவாளர்களுக்கான விண்ணப்பம் கோரல்

## நன்னடத்தை பாதுகாவல் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம் - வடமாகாணம்

எமது திணைக்களத்தின் கீழ் இயங்கி வருகின்ற அச்சுவேலியிலுள்ள சான்று பெற்ற பாடசாலையின் தொழிற்பயிற்சி நிறுவனத்தில் மாணவர்களுக்கான தொழிற்பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. அதற்காகப் பின்வரும் பயிற்சி நெறிகளுக்குரிய வளவாளர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பயிற்சி நெறிகள்**

01. வீட்டு மின்னிணைப்பு
02. தச்சுவேலை
03 நீர்க்குழாய் பொருத்துதல்
04. மேசன் வேலை
05. மோட்டார் சைக்கிள் திருத்துதல்.

**பயிற்சிக்காலம் - மூன்று மாதங்கள்**

**தகைமைகள்**

01. அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்/ தொழில்நுட்ப நிறுவனம் ஒன்றில் NVQ Level 4 அல்லது அதற்கு மேற்பட்ட தகைமையை உறுதிப்படுத்தும் சான்றிதழ் ஒன்றினைக் கொண்டிருத்தல்.
02. சமூக சேவையில் ஆர்வமும் ஊக்கமும் உள்ளவராயும் குறைந்தது 02 வருட அனுபவத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்.

- குறித்த பயிற்சி நெறிகளுக்கு வளவாளராகக் கடமையாற்ற விரும்புவோர் விண்ணப்பப் படிவங்களை எமது அலுவலகத்தில் பெற்று 23.05.2018 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கீழ்க்குறிப்பிட்டுள்ள அலுவலக முகவரிக்குத் தபால் மூலமாகவோ, நேரடியாகவோ அனுப்பி வைக்கவும்.
- சம்பளம் - முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிலையத்தின் சுற்றுநிருபத்தின் பிரகாரம் வழங்கப்படும்.
- நேர்முகத் தேர்வின் மூலம் பொருத்தமான வளவாளர்கள் தெரிவு செய்யப்படுவர்.

(IN/6690)(11,17)

**நன்னடத்தை பாதுகாவல் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம் வடமாகாணம்,**
**மீனாட்சி அம்மன் வீதி, பண்ணை, யாழ்ப்பாணம்.**
**தொ.பே - 021 222 4782**
**மின்னஞ்சல் - pccsnp@gmail.com**

# UNIVERSITY OF JAFFNA
## INVITATION FOR BID

1. **The Chairman, Procurement Committee of University of Jaffna** now invites sealed bids from eligible and qualified biddersfor the following works.

| No | Bid ID | Description of Work | Estimated Cost ( Rs. In million) without VAT | Contract Period (No of Calendar Days) | Minimum Required ICTAD Grade | Required Bid Security Amount |
|---|---|---|---|---|---|---|
| 1 | YA/CWP/RE / 2018-04 | Supply and Fixing of Laboratory Furnitures for Natural Science Block, University of Jaffna | 14.1 | 180 | C6 or above | Rs. 140,000.00 |
| 2 | YA/CWP/RE / 2018-05 | Balance Work for the Improvement of Library Auditorium at University of Jaffna | 2.9 | 150 | C8 or above | Rs. 30,000.00 |
| 3 | YA/CWP/RE / 2018-06 | Associated Works for 4 Nos Staff Quarters at Kilinochchi Premises, University of Jaffna, AriviyalnagarKilinochchi | 6.3 | 75 | C7 or above | Rs. 60,000.00 |
| 4 | YA/CWP/RE / 2018-07 | Associated Works for 2 Nos Hostels at Kilinochchi Premises, University of Jaffna, AriviyalnagarKilinochchi | 10.0 | 75 | C7 or above | Rs. 100,000.00 |

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction with the Institute for Construction Industry Development Authority (CIDA) as indicated in the above table.
4. Interested bidders may obtain further information from **Deputy Registrar, Capital Works & Planning Unit, University of Jaffna**and inspect the bidding documents at the same address on any working day from **9:00hrs to 16:00hrs.** Contact numbers are: Phone: 021 2219201 Fax: 021 221 9201.
5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on submission of a written application to the **Deputy Registrar, Capital Works & Planning Unit, University of Jaffna, Thirunelvely, Jaffna**from**9th May 2018** until**24th May 2018** from**9:00 hrs to 15:00hrs**and upon payment of a non-refundable fee of **Rupees three thousand five hundred (Rs.3,500/-) for each bids No 1 & 4 and Rupees two thousand (Rs.2,000/-) for each bids No 2 & 3 .**
6. Sealed Bids shall be delivered or sent by registered post to the **Deputy Registrar, Capital Works & Planning, University of Jaffna, Thirunelvely, Jaffna P.O Box 57 or be deposited in the tender box kept in the Registrar's office** to reachon or before **14.00 hrs on 25th May 2018.** Bids will be opened soon after closing, at **14.00 hrs on 25thMay 2018** at the Board Room of the University in the presence of the bidders' representatives who choose to attend.
7. Bids shall be valid at least for a period of **90 Days** from the date fixed for receiving of Bids or any extended date.
8. All Bids shall be accompanied by a Bid Security which shall be;
   - In the form included in the Section 09 in the Bidding document.
   - In favour of ***"Vice Chancellor, University of Jaffna."***
   - For the amount indicated in the above table against each work.
   - Issued by one of the agencies indicat[illegible] the clause 16.0 of the Schedule.9
9. Pre Bid meeting will be held at Ca[illegible] Works & Planning, University of Jaffna at 10.00 hrs on the 17thMay, 2018 for works No. 1 &2 andat 10.00 hrs on 16th May, 2018 at the Maintenance Branch, Ariviyal Nagar, Kilinochchi for the works No. 3 & 4.

**Chairman,**
**Department Procurement Committee,**
**University of Jaffna,**
**08/05/2018**

(IN 6692)(10)

### வீடு, காணி விற்பனைக்கு

சுதுமலை தெற்கு, மாவத்தை லேனில் நிலப்பரப்பு 03 குளி, 8.57 வீட்டுடன் கூடிய காணியும், சுன்னாகம் மின்சார நிலைய வீதியில் சந்தனை வயிரவர் கோயிலடியில் நிலப்பரப்பு 33 குளி 11.12 மேட்டுக்காணியும் விற்பனைக்குண்டு.

**தொடர்பு - 076 8616 997**

## ஆதார வைத்தியசாலை - தெல்லிப்பழை நோயாளர் நலன்புரி சங்கம்

## பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும்

**நாள்** :- 13.05.2018 ஞாயிற்றுக்கிழமை
**நேரம்** :- பிற்பகல் 3.30 மணி
**தலைவர்** :- Dr.யோ.திவாகர் (வைத்திய அத்தியட்சகர்)
**இடம்** :- வைத்தியசாலை மாநாட்டு மண்டபம்
**குறிப்பு** :- சங்கத்தின் ஆயுட்கால உறுப்பினர்கள் மற்றும் வைத்தியசாலை அபிவிருத்தியில் அக்கறையுள்ள புதிதாக இணைய விரும்புபவர்கள் அனைவரும் கலந்து தங்களின் மேலான ஆலோசனைகளைத் தெரிவிக்குமாறு வேண்டுகின்றோம்.

**லயன் சி.ஹரிகரன் - செயலாளர்.**

CS/16452)(11,17)

ஓம் விராட் விஷ்வப்பிரம்மனே நமஹ

## மரணஅறிவித்தல்

## பொன்னுத்துரை திலகநாதன் (ராசா)



**பிறப்பு 04.04.1960 இறப்பு 07.05.2018**

மூத்தநயினார் கோயிலடி, ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் புங்குடுதீவு 4ஆம் வட்டாரத்தினை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை திலகநாதன் 07.05.2018 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - தங்கம்மா தம்பதிகளின் இளைய மகனும் காலஞ்சென்றவர்களான கந்தப்பு - கனகம்மா தம்பதிகளின் மருமகனும் வனிதா(ரதனி)வின் அன்புத் துணைவரும் திவேஜன் (கண்ணா), லக் ஷனா, கோசிகா, கஜானன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சண்முகநாதன், பத்மநாதன், காலஞ்சென்ற இராமநாதன் மற்றும் ஜெகநாதன் ஆகியோரின் உடன்பிறப்பும் க.ராசம்மா, க.பேரின்பதாஸ், க.ஜெயக்குமார், க.யோகநாதன், சு.வதனி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.05.2018) புதன்கிழமை மு.ப 10.00 மணியளவில் புங்குடுதீவிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக புங்குடுதீவு முனையப்புலம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புங்குடுதீவு, 4ஆம் வட்டாரம்.

(CS 16448) (14,17)

தகவல்: குடும்பத்தினர்.

# வேலைவாய்ப்பு

வவுனியா, கிளிநொச்சியில் இயங்கும் பிரபல வெதுப்பக உற்பத்தி நிறுவனத்தில் பின்வரும் வெற்றிடங்களுக்கு ஆள்கள் தேவை.

- ★ CAKE Icing பிரிவு - ஆண்/ பெண் (ஒரு வருட அனுபவம்)
- ★ பிரதான வெதுப்பக உற்பத்தியாளர் (பாஸ்) (3 வருட அனுபவம்)
- ★ உதவி வெதுப்பக உற்பத்தியாளர்
- ★ கிளை முகாமையாளர் விற்பனைப் பிரிவு (ஒரு வருட அனுபவம்)
- ★ உதவி கிளை விற்பனையாளர்

உணவு தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்படும். உங்களது விண்ணப்பப்படிவங்களை பின்வரும் முகவரிக்கு அல்லது தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

(00330)(10)

**சின்பொன்**
கைத்தொழில் பேட்டை,
பூந்தோட்டம், வவுனியா.
076 5415 253/
024 222 6797

**வைற் ஸ்ரோன்ஸ்**
இல.28,
உதயநகர் மேற்கு,
கிளிநொச்சி.
077 313 6262

## வீடு விற்பனைக்கு

நந்தாவில் லேனில் அமைந்துள்ள 4½ பரப்புக் காணியில் உள்ள மாடிவீடு விற்பனைக்குண்டு. (7 அறைகளுடன் பெரிய வீடு)

**077 187 7754** (CS15715)(11,17)

## தேவை

ஊர்ச்சேவல் 1kg 700/=
முழு நிறையுடன் கொள்வனவு செய்யப்படும்.

**தாசன் பாம்**
**158/2, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.**
**077 312 7498**

(CS 16446)(14,07)

## பெயர் மாற்ற அறிவித்தல்

சரவணை மேற்கு, வேலணையில் வசிக்கும் வேலுப்பிள்ளை ஜெகதீஸ்வரன் ஆகிய நான் எனது பெயரை இன்று முதல் வேலுப்பிள்ளை கேதீஸ்வரன் என பெயர் மாற்றம் செய்ய உள்ளதை இத்தால் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருவதுடன். இன்றிலிருந்து சகல ஆவணங்களிலும் வேலுப்பிள்ளை கேதீஸ்வரன் என கையொப்பம் இடுவேன் என்பதை அறியத்தருகின்றேன்.

(CS 16444)(10)


# Lanka Mass Media Institute

வழங்கும்

## வெகுசன ஊடக (Mass Media) ஒருநாள் செயலமர்வு....



- ஒலிபரப்பாளராக (RJ) வேண்டுமா?
- நிகழ்ச்சி தொகுப்பாளராக வேண்டுமா?
- செய்தி வாசிப்பாளராக வேண்டுமா?
- திரைப்பட இயக்குனராக வேண்டுமா?
- ஒளி,ஒலிப்பதிவாளராக வேண்டுமா?
- ஊடகவியலாளராக வேண்டுமா?
- சோசல் மீடியாவில் சாதிக்க வேண்டுமா?

உங்களுக்குள் இருக்கும் திறமையை நாங்கள் வெளிக்கொண்டு வருகின்றோம்.

ஊடகங்களில் வேலைவாய்ப்பிற்கு வழிகாட்டுகின்றோம்.

அனுமதிக்கு முந்துங்கள். மட்டுப்படுத்தப்பட்டவர்களுக்கே அனுமதி

இடம் :
TCT Hall (நாவலர் மண்டபம் முன்பாக)
இல.527, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
காலம் :
12.05.2018 (காலை 9.30 - 2.30)

அனுமதிக் கட்டணம் 500/=

077 488 92 28
jaffnamediastudies27@gmail.com

வளவாளர்கள் :
பிரபல அறிவிப்பாளர் லங்கேஸ்
ஊடகவியலாளர் ஜெயச்சந்திரன்

Lanka Mass Media Institute
No. 27, station road , kokuvil, Jaffna.


## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நன்றி நவிலலும்

சண்டிலிப்பாய் மத்தியைப் பிறப்பிடமாகவும், சாவகச்சேரி, மட்டுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட



**விஜயானந்தன் சசிகலா (பாமினி)**

அவர்கள் 26.03.2018 அன்று விபத்தில் இறைவனடி சேர்ந்தார். அவ்வேளை நேரடியாகவும், தொலைத்தொடர்பு சாதனங்களூடாகவும் எம் சோகத்தில் பங்கெடுத்ததோடு, தேவையறிந்து உதவிகள் நல்கிய அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது நன்றியை உரித்தாக்குகின்றோம். இன்று (09.05.2018) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் 45 ஆம் நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் பங்கு கொண்டு மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்பாக அழைக் கின்றோம்.

**இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

**மட்டுவில் கிழக்கு,**
**சாவகச்சேரி.**

(cs.16442) (13.17)

**சோகத்தில் தவிக்கும்**
**கணவர், பிள்ளைகள்**
**மற்றும் உறவினர்கள்.**

## கண்ணீர் அஞ்சலி

காரைநகர் பிரதேச சபையில்
செயலாளராக கடமையாற்றும்
**திருமதி**
**சாரதா உருத்திரசம்பவன்**
அவர்களின்
அன்புத்தாயார்

**திருமதி**
**மங்கையற்கரசி**
**சிவபாதசுந்தரம்**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**தவிசாளர், உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், காரைநகர் பிரதேச சபை, காரைநகர்.**


**பழமை வாய்ந்த ஏழு தலைமுறைகளாக செய்து வரும்**
## ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்



01. ஆண்/பெண் வசியம்
02. பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும்படி செய்யமுடியும்.
03. வியாபார முன்னேற்றம்.
04. வீட்டில் ஒற்றுமை உண்டாக
05. போலியானவர்களிடம் ஏமாந்து விட்டீர்களா ?

ரகசியம் பேணப்படும்


ஒருமுறை எம்மை வந்து சந்தித்துப் பாருங்கள் !!

Note: (உங்களால் நேரில் வரமுடியாவிட்டால் பதிவு தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

**ரெங்கசாமி காளியம்மா**
**மாத்தளை - கண்டி வீதி, அம்பத்தன்ன.**
**077 327 2302/ 076 466 4153**

(CS16480)(10)


# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 10 . 12 . 1985 | 30 . 04 . 2018 |

## செல்வன் லோகேஸ்வரன் கார்த்தீபன்

*(உத்தியோகத்தர் - பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகம், திட்டமிடல் வடமாகாணம்)*

தும்பளை, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வன் லோகேஸ்வரன் கார்த்தீபன் 30.04.2018 திங்கட்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் லோகேஸ்வரன் - நிர்மலாதேவி தம்பதிகளின் அன்புப் புதல்வனும் காலஞ் சென்றவர்களான பொன்னுத்துரை நாகேஸ்வரி, கனகலிங்கம் மற்றும் இராசமணி ஆகியோரின் அன்புப் பேரனும் றாஜிதா(பிரான்ஸ்), பாஸ்கரன் (ரூபி நகை மாளிகை), பிரியா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் கோகுலன் (பிரான்ஸ்), காலஞ் சென்ற றஜீந்திரன் மற்றும் மகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஜீவன், பவன், பவளம், புஸ்பமலர் ஆகியோரின் அன்பு மருமகனும் லக்ஷனா, தர்ஷிகா, கஜானன், கஜன், பவித்திரன், இத்தியா ஆகியோரின் அன்பு மச்சானும் நிருஜன், விதுஷன், யதுஷன், நிதுஷன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ரூபி, லக்ஷி, கரிசங்கர் ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.05.2018) புதன்கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோரியடி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தங்காலய வீதி,**
**தும்பளை, பருத்தித்துறை.**

(CS 00465) (14,17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 15 . 09 . 1936 | 12 . 05 . 2015 |

## அமரர் திருமதி சேனாதிராசா மனோன்மணி

**(வேலணை கிழக்கு 1ஆம் வட்டாரம்)**

**திதி : 09.05.2018**

அமைதியின் உருவமாகவும் அடக்கத்தின் இருப்பிடமாகவும்
பண்பில் பெருந்தகையாகவும் பாசத்தின் உறைவிடமாகவும்
எம்மத்தியில் அன்பு ஒளியாக வாழ்ந்த அம்மாவே உங்கள்
பிரிவுதனை நம்பவே முடியவில்லை

நிழலில் இசைந்தாடி நினைவில் இழைந்தோடி
நெஞ்சில் உயிர் வாழும் அம்மாவே
உதிர்ந்தது நீங்கள் மட்டுமில்லை
உடைந்தது எங்கள் இதயமும் அம்மா

பற்றோடு பாசமதை நட்போடு பகிர்ந்தளித்து
மெய்யான அன்புதனை எல்லோர்க்கும் இரங்கி நின்றாய், அம்மா!
உங்கள் பரிவான பாசமதை நாம் மறப்போமா இவ்வுலகில்

பத்து மாதம் சுமந்து எம்மை பெற்றெடுத்த தாயே
பாரினிலே உம் மடியில் தவழவைத்த அம்மாவே
உங்கள் நினைவுகள் என்றும் எம் இதயத்தில் அணையாத தீபமம்மா
கண்ணீர் நிறைந்த வலியோடும் கனத்த மனதோடும் தாயே
உங்களுக்கு நாம் அஞ்சலி செலுத்துகிறோம்.

(CS1286)(10)

**இல.20, கந்தர்மடம்,**
**யாழ்ப்பாணம்.**

உங்கள் பிரிவால் துயருறும்
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

ராசி அதிர்ஷ்டம்
திகதி 08.05.2018 | வெற்றி வாரம் 2291 | வர்ணம் நீலம்
மிதுனம்
வெற்றி இலக்கங்கள் 16 24 29 47
புதன் கிழமை வெற்றிப் பொதி ரூ- 3,684,716/=
2018.05.09ம் திகதி புதன் கிழமை பச்சை நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4834824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919



SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 800
சீட்டிழுப்பு திகதி 2018.05.07 திங்கட்கிழமை
N 20 62 69 71
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ- 62,777,656/-
பச்சை நிற டிக்கட்டுகள் 2018.05.10ம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ.பே: 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்



செவ்வாய்க்கிழமை நியத ஜய NIYATHA JAYA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் : 665 வர்ணம் : மஞ்சள்
திகதி : 2018.05.08
வெற்றி இலக்கங்கள் 62 11 09 57 ஆங்கில எழுத்து F
அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 14,557,424/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>NJ என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778



கோடிபதி சனிதா KOTIPATHI SHANIDA
சீட்டிழுப்பு வாரம்: 286
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2018.05.08
அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 79,483,103/-
R 34 41 46 48
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>KS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778



அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 244
வர்ணம் : நீலம்
சீட்டிழுப்பு திகதி 2018.05.08
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 63,240,750/-
வெற்றி இலக்கங்கள் 08 25 33 63 ஆங்கில எழுத்து G
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>AK என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778


## ஏமாற்றம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சரணை வழங்கி நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் நடைமுறைப்படுத்தல் தொடர்பாகவும் மைத்திரிபால சிறிசேன வாய் திறக்கவில்லை.

தேக்கமடைந்துள்ள புதிய அரசமைப்பு முயற்சிகள் மீள ஆரம்பிப்பது தொடர்பிலோ, அரசியல் தீர்வு தொடர்பாகவோ அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தனது கொள்கை விளக்க உரையில் குறிப்பிடுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அந்த விடயங்களைத் தொட்டுக்கூடப் பார்க்காத அரச தலைவர் மைத்திரிபால, பொருளாதார நலன் குறித்தே அதிகம் உரையாற்றினார்.

அரசு இதுவரை நிறைவேற்றிய முக்கிய சட்டங்கள், சாதனைகள் என்பவற்றை அரச தலைவர் தனது உரையில் பட்டியலிட்டார். அதில் நாடாளுமன்று அரசமைப்பு நிர்ணய சபையாக மாற்றப்பட்டமை தொடர்பில் மைத்திரி தனது கொள்கைப் பேச்சில் எதனையும் குறிப்பிடவில்லை. எதிர்காலத்தில் முன்னெடுக்கவுள்ள விடயப் பரப்புக்குள்ளும், அரசியல் தீர்வு தொடர்பாக அவர் கருத்து எதனையும் கூறவில்லை.

அரச தலைவர் தனது உரையில், மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றும், உண்மையான மக்கள் நேய செயற்றிட்டங்களின் நிபந்தனைகளாக 15 விடயங்களைக் குறிப்பிட்டிருந்தார். அதில், தமிழ் மக்களின் சம உரிமைகளை அடிப்படையாகக் கொண்ட வேணவாக்களை ஏற்றுக் கொள்ளல், முஸ்லிம் மக்களின் நலன் மற்றும் சமூக, கலாசார தேவைகளை உறுதிசெய்தல், மலையக தமிழ் மக்களின் பொருளாதார, சமூக நிலையை மேம்படுத்தல், நாட்டின் பெரும்பான்மை சமூகமான சிங்கள மக்களின் கலாசார உரிமைகளை பலப்படுத்தி, உறுதி செய்து தேசத்தின் அடையாளத்தை வலுப்படுத்தல் என்ற விடயங்களைக் குறிப்பிட்டுள்ளார்.

அவற்றுக்கு மேலதிகமாக, 'நிலையான நாட்டின் அடித்தளம் தேசிய நல்லிணக்கமே ஆகும். உண்மையான தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டுமாயின் சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட அரசியல் தீர்மானங்களை இயற்றத்தக்க கட்டமைப்பை அறிமுகப்படுத்த வேண்டும்.

அந்த நோக்கை வெற்றி கொள்வதற்கு தற்போது செயலில் இருந்துவரும் மாகாண சபை முறைமையை மேலும் பலப்படுத்துவது காலத்தின் தேவையாகும் என்று நான் நம்புகிறேன்.

எவ்வாறான விமர்சனங்கள் எழுந்த போதிலும் வடக்கு கிழக்கு மக்களின் பொறுமையிழப்பை நிரந்தரமாக சமரசப்படுத்த வேண்டுமாயின் மக்களின் விருப்பத்தையும் இணக்கப்பாட்டையும் பெற்ற அரசியல் வேலைத்திட்டமொன்றை ஆரம்பித்தல் வேண்டும்.

பௌதீக ரீதியில் நாம் பயங்கரவாதிகளை தோற்கடித்த போதிலும் அவர்களின் கொள்கையை முழுமையாக தோல்வியுறச் செய்வதற்கு இன்னும் முடியாது போயிருக்கின்றது. கடந்த மூன்றரை ஆண்டுகளாக பன்னாட்டு ரீதியிலான ஒத்துழைப்பைப் பெற்று அந்தக் கொள்கையை தோல்வியுறச் செய்வதற்கே நான் முயற்சித்து வந்தேன் என்றும் அரச தலைவர் குறிப்பிட்டார். (ற-5)


**விற்பனைக்கு**

ஒரு நாளிலிருந்து 07 நாள்கள் வரையான ஊர்க் கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. (CS 16455/15) - 072 546 3398


# இதய அஞ்சலி

## பாலகுமார் ஸ்ரீசத்யா

(க.பொ.த (உ/த) - 2019 கணிதப்பிரிவு மாணவன்)



மண்ணில்: 2000.04.05 விண்ணில்: 2018.05.07


இடியொன்று வீழ்ந்து இதயத்தைக் கிழித்தது போல்
நொடி ஒன்றில் உம் ஆவி எம்மை விட்டு பிரிந்ததேனோ
கலைகளின் காப்பகமே கண்ணியத்தின் குல விளக்கே
நிலையான உம் உருவம் ஒரு கணத்தில் மறைந்தது தான் மாயம்
**ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

பிரிவின் துயரில்

New Science World சமூகம்

# மரண அறிவித்தல்

தாய் மகிழ்ந்தது 02 . 09 . 1975



உறவுகள் அழுதது 07 . 05 . 2018

## அன்ரனி சுதாகரன் (யூட்)

மாகியப்பிட்டி, சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அன்ரனி சுதாகரன் (யூட்) கடந்த (07.05.2018) திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் கிரிஜாவின் (ஆசிரியை - ஏஞ்சல் இன்ரநெஷனல் பாடசாலை) பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான அன்ரனி மேரி ரோஸ் தம்பதிகளின் அன்பு மகனும் டிமெல்சன், அட்ஷயா ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற விஜயரட்ணம் மற்றும் மேரி திரேசா தம்பதிகளின் மருமகனும் இயூயின் மேரி, மேரி ஸ்ரெலா, லியோநியூட்டன் (கனடா), நிரோஜிகன், மேரி நிரோஜினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (10.05.2018) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு மாகியப்பிட்டி புனித செபஸ்தியார் ஆலயத்தில் இரங்கல்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித செபஸ்தியார் ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மனைவி, குடும்பத்தினர்.

(CS 1287/15/17)

# மரண அறிவித்தல்

பிறப்பு 04 . 06 . 1935



இறப்பு 08 . 05 . 2018

## சின்னையா இராசரத்தினம்

யாழ். மயிலிட்டி காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும், வங்கலலேன் மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா இராசரத்தினம் நேற்று (08.05.2018) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா சின்னம்மா தம்பதியரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்றவர்களான சோதிப்பிள்ளை, தம்பிராசா, பரமானந்தம், பூமணி மற்றும் பரமேஸ்வரி, பாக்கியம் ஆகியோரின் அன்புச்சகோதரரும் இராசமணியின் அன்புக்கணவரும் பத்மவதி, கோபாலசுந்தரம் (சுதா பேக்கரி, உரிமையாளர்), ஜெயபாலசிங்கம் (அன்பு, ஈழமக்கள் ஜனநாயக்கட்சி வலிகாமம் அமைப்பாளர், தெல்லிப்பழை பிரதேசசபை உறுப்பினர்), குணபால், தனபாலசிங்கம் (சின்ராஸ், சவுதி), மகேஸ்வரி (பனை அபிவிருத்தி சபை), இராஜேஸ்வரி, நாகேஸ்வரி (கௌரி), சூரியகுமார் (ஜீவன்) ஆகியோரின் அன்புத்தந்தையும் இராசதுரை (மாநகரசபை), செல்வநாயகம், மனோகரன், சிவதாசன், சாந்தா, ஜெயராணி, பவானி, பிறேமறஜனி (ஆசிரியை, யா/ புங்குடுதீவு கமலாம்பிகை கனிஷ்ட மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்புமாமனும் கோபியசோ, சிறி (டுபாய்), தர்சி, கரன் (யாழ். பல்கலைக்கழகம்), கஜேந்தினி, கவிதாஸ், கமல்ராஜ், மதுராஜ், மயூரன், நிஷாந்தினி, பகிரதன், மதிஅழகன், மயூரி, சஞ்சீவ், சந்தோஷ், கௌதினி, கௌசி, நிவேதி ஆகியோரின் அன்புப்பேரனும் சங்கீர்த்தனன், டிலக்சன், வினோத், கீர்த்தனா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று புதன்கிழமை (09.05.2018) நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வங்கல லேன், மல்லாகம்.
077 0489 592

தகவல்:
குடும்பத்தினர்.

# நானும் என் முயற்சியும்



மனிதர்களாகிய எமக்கு வசதி வாய்ப்புக்களோடு வாழவேண்டும் என்ற ஆசைகள் நிறையவேதான் இருக்கின்றன.

இந்த ஆசைகளை எப்படி நாம் நிறைவேற்றிக் கொள்வது என்ற இடத்தில்தான் நாங்கள் சிந்திக்கத் தவறுகின்றோம். எல்லாம் எமக்கு நிறையவே கிடைக்க வேண்டும். குறையின்றி வாழவேண்டும். என்ற ஆசைகள் நியாயமானவைதான். ஆனால் நாம் அதனை நிறைவேற்றிக் கொள்ள முயற்சிக்காமல் அடுத்தவரிடம் எதிர்பார்த்து இருப்பதுதான் பெரிய தவறு.

**முயற்சிகள் தொடரட்டும்**

"முயற்சிகள் தவறலாம் முயற்சிக்கத் தவறாதே" என்பதனை யாரும் விளங்கிக் கொள்வதாக இல்லை. எதையும் நாங்கள் தன்நம்பிக்கை கொண்டு முடியும் என்று முயற்சிப்போமானால் எம்மால் நிறையவே சாதிக்க முடியும். எம்மால் எந்த முயற்சியும் செய்ய முடியாது என்றால் கையில் பணம் எப்படி வரும். சும்மா ஆசைப்பட்டுக் கொண்டு இருக்க கையில் பணம் வந்து விழுமா? நாங்கள் என்ன மந்திர தந்திர வாழ்க்கையா வாழ்கின்றோம். இது தொடர்பாக நாங்கள் நிறையவே சிந்திக்க வேண்டும்.

இன்று எந்தக் கிராமத்துக்குச் சென்று பார்த்தாலும் வீட்டில் சாப்பாட்டுக்கு பணம் இருக்கிறதோ? இல்லையோ தமது ஆடம்பரமான செலவுகள் தொடர்ந்து கொண்டுதான் உள்ளன. ஓடித் திரிந்து பக்கத்துவீடு, நண்பர்களிடம் என்று கடன் வேண்டுவார்கள். நாளைக்கு எப்படி கொடுப்பது என்பதற்கு எந்த முயற்சியும் இல்லை. உழைப்பு இல்லை எப்படி கொடுப்பது. இது கட்டாயம் தேவையா? யோசிப்பதற்கு புத்தி இல்லை. எடுத்துச் சொல்லவும் எவரும் இல்லை.

உண்மையில எம்முடன் எமது முயற்சிகள் உயருமானால் நாங்கள் ஆசைப்படுகின்ற அவசியமான தேவைகளை என்றாலும் நிறைவேற்றிக் கொள்ள முடியுமல்லவா? நாங்கள் சுயமாக எதைச் செய்கின்றோம் அதிலும் வீட்டிலுள்ள குடும்பப் பெண்கள் எந்த நேரமும் தொலைக்காட்சியுடன் கழிக்கும் பொழுதுகளை தமக்கு தெரிந்த தொழிலுடன் இணைத்துக் கொண்டால் அது பணமாக எமக்கு வரும். எமக்குள் நிறையவே வல்லமைகள் குவிந்து கிடக்கின்றன. அதனை சோம்பலும், இயலாமையும் மூடிக்கிடக்கின்றது. அவற்றில் இருந்து மெல்ல விழித்துக்கொண்டால் எம்மைவிட சாதனையாளர்கள் எங்கும் இல்லை.

**சுயதொழில்கள் அவசியம்**

இன்று வீட்டில் யார் சுயதொழில் புரிகின்றனர்? கோழி வளர்ப்பவர் யார்? ஆடு, மாடுகள் வளர்ப்பவர் யார்? யாரைக் கேட்டாலும் வீட்டில் இடமில்லை, உதுகளோட யார் மினக்கிட முடியும். எல்லாம் அரியண்டம் என்று சினுங்கும் மங்கையர்களாகத்தான் இருக்கிறார்கள். வீட்டில மிஞ்சும் கழிவுகளை காசாக்க அரியண்டம், கடன்பட்டு தங்கள் தேவைகளை பூர்த்தி செய்துவிட்டு கடன்காரர் வந்து காசு கேட்டால் ஒழிப்பது அரியண்டம் இல்லையா?. எமக்குக் கிடைக்கும் நேரம் பொன்னானது என்பதை ஏன் எங்கட பெண்மணிகள் சிந்திப்பது இல்லை. எத்தனையோ வாய்ப்புக்கள் எம்மைச் சுற்றியுள்ளன. பயன்படுத்தினால் பயன்பெறலாம்.

## வேலைதேடும்...

கொழும்பு, மே 9

வேலை தேடும் பட்டதாரிகளால் நேற்று கொழும்பில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. "தொழில் உரிமையாகும்" என்ற கருப் பொருளில் வேலைதேடும் பட்டாரிகள் ஒரே தடவையில் அரச சேவைக்குள் இணைக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியே ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

கொழும்பு கோட்டை தொடருந்து நிலையத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்திய வேலைதேடும் பட்டதாரிகள் அரச தலைவர் செயலகத்தை நோக்கி ஊர்வலமாகச் சென்றனர். நாடு முழுவதிலும் இருந்து சென்றிருந்த பட்டதாரிகள் அதில் கலந்து கொண்டனர். அரச தலைவர் செயலகத்துக்குள் செல்ல விடாது பொலிஸார் அவர்களை வழிமறித்தனர்.

ஆர்ப்பாட்டத்தைக் கலைப்பதற்காகப் பொலிஸார் நீர்த் தாரைத் தாக்குதல் நடத்தினர். அதனால் அந்தப் பகுதியில் பதற்றம் ஏற்பட்டது.

ஆர்ப்பாட்டம் மேற்கொண்டவர்கள் லோட்டஸ் சுற்றுவட்டத்தில் கூடி ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

ஆர்ப்பாட்டம் நடத்தியவர்களில் இருவர் அரச தலைவரின் செயலாளரைச் சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. அவருடனாக சந்திப்பின்போது அனைவருக்கும் நியமனம் வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளித்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவைச் சந்திப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு தர வேண்டும் என்றும் ஆர்ப்பாட்டம் மேற்கொண்டவர்கள் அவரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நேற்று நாடாளுமன்றத்துக்கு முன்பாகவும் வேலை தேடும் பட்டதாரிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (ந-109)

## ஆர்னோல்ட்டுக்கு...

னோல்ட் எழுந்து நின்று உரையாற்றுங்கள் என்று பல முறை அறிவுறுத்தினார். அதைக் காதில் வாங்காத ப.யோகேஸ்வரி எழுந்து நின்று பேச மாட்டேன் என்று அடம்பிடித்தார். அதனால் சபையில் கடும் சர்ச்சை ஏற்பட்டது.

அமர்வு சபை மண்டபத்தில் நேற்று முதல்வர் இ.ஆர்னோல்ட் தலைமையில் நடைபெற்றது. அமர்வின் ஆரம்பத்தில் மேயரால் சென்ற கூட்ட அறிக்கையின் தொகுப்பு வழங்கப்பட்டது. அதை ஏற்றுக் கொள்ள சபையின் அனுமதி கோரப்பட்டது. அப்போது ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் உறுப்பினர் யோகேஸ்வரி பற்குணராசா இருக்கையில் அமர்ந்திருந்து பேச முயற்சித்தார்.

அப்போது சபை முதல்வர் குறுக்கிட்டார். சபையின் மாண்பு கருதி எழுந்து நின்று பேசுமாறு கூறினார். தனக்குக் காலில் நோய், எழுந்து நின்று பேச முடியாது என்றார் ப.யோகேஸ்வரி. அவ்வாறு இருந்தால் மருத்துவ அறிக்கை முன்னரே சபைக்கு வழங்கப்பட்டு அனுமதி பெற்றிருக்க வேண்டும். நாடாளுமன்றில் கூட எழுந்து நின்றே பேச வேண்டும் என்று சுட்டிக்காட்டினார் முதல்வர்.

சபையில் எழுந்து நின்று பேசுவது அவசியமில்லை. சபையை ஒழுங்காக நடத்துவதே தேவை என்று கூறினார் ப.யோகேஸ்வரி. நாடாளுமன்றில் எழுந்து நிற்கத் தேவையில்லை. அவ்வாறு சட்டமிருந்தால் காண்பியுங்கள் என்றும் வாதம் செய்தார்.

பின்னர் சபை நடவடிக்கைகள் நடைபெற்றன. பிறிதொரு சந்தர்ப்பத்திலும் ப.யோகேஸ்வரி அமர்ந்திருந்து கருத்துச் சொல்ல முற்பட்டார். மருத்துவ அறிக்கை சபைக்குச் சமர்ப்பித்து அனுமதி பெறும்வரை அமர்ந்திருந்து பேச முடியாது. அவ்வாறு பேசினால் சபை அங்கத்தவர்களின் அனுமதி கோரவேண்டி வரும் என்று முதல்வர் கூறினார்.

அதன்பின்னர் தேநீர் இடைவேளை வழங்கப்பட்டது. அதன்பின்னர் சபை கூடியபோதும் ப.யோகேஸ்வரி அமர்ந்திருந்தே பேசினார். முதல்வர் அது தொடர்பில் ஏதும் கூறவில்லை. முன்னாள் மேயர் யோகேஸ்வரி பற்குணராசா சபை நடவடிக்கையின்போது இயல்பாக நடந்து வந்திருந்தார். தேநீர் இடைவேளையின்போது அவர் நடந்து சென்றபோது உபாதைக்கான அறிகுறிகளைக் காணவில்லை. இவர் சபையின் கடந்த அமர்வின்போதும் அமர்ந்தே பேசுவேன் என்று அடம்பிடித்திருந்தார். (ந-8)

## மைத்திரியின்...

றர்) பதிவால் அரசியல் வட்டாரங்களில் நேற்றுப் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. சில நிமிடங்களில் அந்தப் பதிவு நீக்கப்பட்டது. அரச தலைவரின் ஊடகப் பிரிவுக்குள் ஊடுருவிய 'ஆசாமி' ஒருவரே அதைப் பதிவிட்டுள்ளார் என்றும் கண்டறியப்பட்டுள்ளது.

அரச தலைவர் மைத்திரிபால தனது கீச்சகத்தில் நாடாளுமன்றில்தான் ஆற்றிய கொள்கை விளக்க உரையின் ஒரு பகுதியைப் பதிவிட்டார். அந்தப் பதிவுக்கு பதிலளித்து அரச தலைவரின் ஊடகப் பிரிவு கீச்சகத்தால் ஒரு பதிவு பதிவேற்றப்பட்டது.

"நீங்கள் சிறந்த பேச்சாளர். ஆனால் உங்களால் தெரிவிக்கப்படும் கருத்துக்களை எவ்வாறு உறுதிப்படுத்துவீர்கள். செயலில் காட்டுங்கள்" என்று அதில் குறிப்பிட்டிருந்தது. இது அரசியல் வட்டாரங்களில் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

சில நிமிடங்களில் இந்தப் பதிவு நீக்கப்பட்டது. இது தொடர்பில் விளக்கமளித்துள்ள அரச தலைவர் ஊடகப் பிரிவு, அரச தலைவர் ஊடகப் பிரிவின் கீச்சகத்துக்குள் ஊடுருவிய 'ஆசாமி' ஒருவரே அதைப் பதிவிட்டுள்ளார் என்று தெரிவித்துள்ளது. இது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் தெரிவித்துள்ளது. (ந-5)

## மைத்திரிக்கு...

சிறிசேனவின் கொள்கை விளக்கவுரையும் நடைபெற்றது.

ஏப்ரல் மாதத்தின் இரண்டாவது நாடாளுமன்றக் கூட்டத்தொரை சிறப்பு அரசிதழ் அறிவித்தல் மூலம் அரச தலைவர் முடக்கியிருந்தார். அந்தக் கூட்டத்தொடர் நேற்று ஆரம்பமானது. அரசமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம், புதிய நாடாளுமன்றக் கூட்டத்தொடர் ஆரம்பமாகும் நாளில், அக்கிராசனத்திலிருந்து அரச தலைவர் அரசின் கொள்கைக் கூற்றை வாசிக்கவேண்டும்.

சபை அமர்வை ஆரம்பித்து வைப்பதற்கும், அரசின் கூற்றை வாசிப்பதற்கும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தனது பாரியார் சகிதம் பிற்பகல் 2 மணியளவில் நாடாளுமன்ற வளாகத்துக்கு வந்தார். சபாநாயகரும், நாடாளுமன்ற செயலரும் அவரை வரவேற்றனர். 21 பீரங்கிக் குண்டுகள் முழங்க அரச தலைவருக்கு அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது.

பிற்பகல் 2.15 மணியளவில் அரச தலைவர் அவைக்குள் வந்து, அக்கிராசனத்தில் அமர்ந்து, கொள்கைக் கூற்றை வாசிக்க ஆரம்பித்தார். சுமார் 30 நிமிடங்கள் வரை அது தொடர்ந்தது. அதன்பின்னர் சபை நடவடிக்கைகள் இன்று பிற்பகல் ஒரு மணிவரை ஒத்தி வைக்கப்பட்டன.

சபையிலிருந்து அரச தலைவர் வெளியேறிய பின்னர், தேசிய கீதத்துடன் சம்பிரதாயபூர்வ அமர்வு நிறைவுபெற்றது.

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச, அவரின் புதல்வர் நாமல் ராஜபக்ச, முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ச ஆகியோர் சபைக்கு வரவேயில்லை. (ந-5)

## மைத்திரி...

சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் 16 பேரும் ஆளுங்கட்சியிலிருந்து நேற்று வெளியேறி எதிரணி வரிசையில் அமர்ந்தனர்.

சபைக்குள் மேசைகளில் கைதட்டி, உற்சாக கோசம் எழுப்பி மகிந்த ஆதரவு அணியான கூட்டு எதிரணி உறுப்பினர்கள் அவர்களுக்கு அமோக வரவேற்பளித்தனர். மறுபுறத்தில் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் கூச்சலிட்டனர்.

எட்டாவது நாடாளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தொடர் நேற்றுப் பிற்பகல் 2.20 மணிக்கு ஆரம்பமானது.

சபாபீடத்தில் செங்கோல் வைக்கப்பட்டு, சபை நடவடிக்கை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பிப்பதற்கு முன்னர் அவைக்குள் வந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள், ஆளுங்கட்சியிலிருந்து எதிரணிப் பக்கம் சென்று அமர்ந்தனர்.

ஆளுங்கூட்டணியிலிருந்து புன்னகைத்தவாறு உறுப்பினர்கள் எதிரணிப் பக்கம் சென்றபோது மகிந்த அணியினர் அவர்களுக்கு உற்சாக வரவேற்பளித்தனர். ஆளுங்கட்சி உறுப்பினர்கள் கூச்சலிட்டனர். ஓரிரு நிமிடங்கள் சபை அதிர்ந்தது.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நேற்றுப் பிற்பகல் 2.15 மணியளவிலேயே அவைக்குள் வந்தார். அதற்கு ஓரிரு நிமிடங்களுக்கு முன்னரே சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் எதிரணிப் பக்கம் சென்றனர்.

எஸ்.பி.திசாநாயக்க, ஜோன் அமரதுங்க, சுமேதா ஜயசிங்க ஆகிய மூவருக்கும் எதிரணியில் முன்வரிசை ஆசனங்கள் வழங்கப்பட்டன. ஏனையவர்களுக்கு இரண்டாம், மூன்றாம் வரிசைகளில் ஆசனங்கள் ஒதுக்கப்பட்டன. ஏனைய சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் ஆளுங்கட்சியில் இருந்தனர். (ந-5)

## விவசாய...

சுமார் 15 ஏக்கர் விவசாயக் காணியில் அமைக்கப்படவிருந்த அரபுநாட்டின் நிதியுதவியுடனான வீட்டுத் திட்டம் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மக்கள் கையளித்த மனுவைப் பெற்றுக் கொண்ட முசலி பிரதேச செயலர் சம்பவ இடத்துக்குச் சென்று திட்டப் பணிகளை இடைநிறுத்தினார்.

முசலி பேருந்துத் தரிப்பிடத்துக்குப் பின்புறமாக சுமார் 15 ஏக்கர் விவசாயக் காணிகள் உள்ளன. அங்கிருந்த மக்கள் 1990ஆம் ஆண்டு போரால் இடம்பெயர்ந்தனர். 10 ஆண்டுகளின் பின்னர் அங்கு மீளக் குடியமர்ந்தனர். இடம்பெயர்வால் சிலரது காணி உரிமங்கள் தவறியிருந்தபோதும், பெரும்பாலானவர்களுக்கு மீண்டும் காணி ஆவணங்கள் வழங்கப்பட்டன. அந்தக் காணிகளில் கொக்குப்படையான் கிராம மக்கள் விவசாயத்தில் ஈடுபட்டனர்.

தற்போது அந்தக் காணிகளில் 45 வீடுகள் அமைப்பதற்கான அடிக்கல் நடப்பட்டுள்ளது. அரபு நாட்டு நிதியுதவியுடன் அந்த வீடுகள் அமைக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்த மக்கள் நேற்று பிரதேச செயலரிடம் மனுக் கையளித்தனர். மன்னார் நகர சபையின் தலைவர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன், உப தலைவர், உறுப்பினர் ஆகியோரும் மக்களுடன் சென்றிருந்தனர்.

மக்களின் மனுவைப் பெற்றுக் கொண்ட பிரதே செயலர் கே.எஸ்.வசந்தகுமார் காணி அலுவலர்கள் சகிதம் சம்பவ இடத்துக்குச் சென்றார். அடிக்கல் நடப்பட்ட காணியைப் பார்வையிட்டார். நிலமைகளை ஆராய்ந்த பின்னர் வீட்டுத் திட்டப் பணிகளை இடைநிறுத்துமாறு உத்தரவிட்டார்.

"என்னிடம் எந்த அனுமதியும் பெறாது வீட்டுத் திட்டத்துக்கான அடிக்கல் நடப்பட்டுள்ளது. காணிக்குரிய ஆவணங்கள் உள்ளவர்களுக்கு காணியை நீதியான முறையில் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். இது தொடர்பில் விசாரணை நடத்தப்பட்டு உரிய தரப்பினருக்கு அறிவிக்கப்படும்." என்று பிரதேச செயலர் தெரிவித்தார்., (ந-21,56)

## 6 கிலோ...

முல்லைத்தீவு, மே 9

இரு முச்சக்கர வண்டிகளில் கடத்திச் செல்லப்பட்ட 6 கிலோ கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது என்று புதுக்குடியிருப்புப் பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் தொடர்பில் இரு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புதுக்குடியிருப்பு, பரந்தன் வீதியிலேயே கஞ்சா கைப்பற்றப்பட்டது. முச்சக்கர வண்டிகளின் சாரதிகளே கைது செய்யப்பட்டுள்ளனர்.

கஞ்சா கிளிநொச்சிக்குக் கொண்டு செல்லப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்தனர். விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர். (ந-21,ரி3)

# சென்றலைட்ஸ் அணி இறுதிக்குத் தகுதி



யாழ்ப்பாணம், மே 9
கொக்குவில் சனசமூக நிலையம் நடத்தும் யாழ்ப்பாண மாவட்ட கிரிக்கெட் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான தொடரில் சென்றலைட்ஸ் அணி இறுதிக்குத் தகுதி பெற்றது.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அரையிறுதியாட்டத்தில் சென்றலைட்ஸ் அணியை எதிர்த்து மானிப்பாய் பரிஸ் அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் பரிஸ் அணி 26 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 127 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக சபேசன் 25, சுஜீவன் 24, அனோஜன் 21 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் சசோபன் 3, டார்வின், அலன் ராஜ் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் சாள்ஸ், மயூரன் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் அணி 23.3 பந்துப் பரிமாற்றங்களில் 5 இலக்குகளை மாத்திரம் இழந்து வெற்றி பெற்றது. அதிகபட்சமாக டார்வின் ஆட்டம் இழக்காமல் 65, ஜெரிக் துசாந் ஆட்டம் இழக்காமல் 32 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் கரிகரன், பனிஸ்ரன் ஆகியோர் தலா இரண்டு இலக்குகளையும் கிசோர்குமார் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

(ம-422)

# சந்திரன் கழகத்தின் கால்பந்து முடிவுகள்

யாழ்ப்பாணம், மே 9
செல்வபுரம் சந்திரன் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்கள் சிலவற்றின் முடிவுகள் வருமாறு.

கள்ளப்பாடு உதயம் விளையாட்டுக் கழக அணிக்கும் முள்ளியவளை வெண்மலர் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் 4:1 என்ற கோல் கணக்கில் கள்ளப்பாடு உதயம் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.

சுப்பர்றாங் விளையாட்டுக் கழக அணிக்கும் விசுவமடு நண்பர்கள் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் 2:0 என்ற கோல் கணக்கில் சுப்பர்றாங் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.

வட்டுவாகல் உதயசூரியன் விளையாட்டுக் கழக அணிக்கும் விசுவமடு சிலாவத்தை இளம் பறவைகள் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் 2:0 என்ற கோல் கணக்கில் சிலாவத்தை இளம் பறவைகள் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.

அளம்பில் இளந்தென்றல் விளையாட்டுக் கழக அணிக்கும் முள்ளியவளை வளர்மதி விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் 4:1 என்ற கோல் கணக்கில் அளம்பில் இளந்தென்றல் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.

முல்லைத்தீவு சென். யூட் விளையாட்டுக் கழக அணிக்கும் புதுகுடியிருப்பு விடியல் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் 4:1 என்ற கோல் கணக்கில் முல்லைத்தீவு சென். யூட் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.

புதுக்குடியிருப்பு விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக அணிக்கும் செம்மலை உதயம் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் 2:1 என்ற கோல் கணக்கில் செம்மலை உதயம் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.

(ம-23)

# ஜொனியன்ஸ் அணி இறுதிக்குச் சென்றது



யாழ்ப்பாணம், மே 9
கொக்குவில் சனசமூக நிலையம் தனது வெள்ளி விழாவை முன்னிட்டு நடத்தும் யாழ்ப்பாண மாவட்ட கிரிக்கெட் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான கிரிக்கெட்டில் ஜொனியன்ஸ் அணி இறுதிக்குத் தகுதி பெற்றது.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அரையிறுதியாட்டத்தில் ஜொனியன்ஸ் அணியை எதிர்த்து விக்டோரியன் அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொனியன்ஸ் அணி 26.4 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 198 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக யதுசன் 41, மயூரன் 39, சந்துஜன் 35 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் கிரிசாந், சரத்குமார் ஆகியோர் 3 இலக்குகளையும் சுஜிகரன், கவியோன், பிரசாந்த், பிரியங்கன் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய விக்டோரியன் அணி 21 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 102 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. அதிகபட்சமாக கவியோன் 30, பிரசாந்தன் 14, சரத்குமார் 13 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் யதுசன் 5, சஞ்சயன் 3 இலக்குகளையும், பிருந்தாபன் ஓர் இலக்கையும் கைப்பற்றினர். (ம-422)

# வீனஸின் தொடரில் யங்ஸ்ரார் சம்பியன்

யாழ். மே 9
புத்தூர் வீனஸ் விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்பட்ட வி.பி.எல். கால்பந்தாட்டத் தொடரில் யங் ஸ்ரார் அணி கிண்ணம் வென்றது.

வீனஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் யங் ஸ்ரார் அணியை எதிர்த்து யுனைற்ரெட் எப்.சி. அணி மோதியது. இரண்டு அணிகளும் ஆரம்பம் முதல் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தின. கோல்கள் இல்லாமல் முடிந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியிலும் கோல்கள் பதிவாகவில்லை. இதையடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 2:1 என்ற கோல் கணக்கில் யங் ஸ்ரார் அணி வெற்றிபெற்று கிண்ணம் வென்றது. (ம)



# 400 மீற்றர் ஓட்டப்போட்டி சாவகச்சேரிக்குத் தங்கம்



யாழ்ப்பாணம், மே 9
யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான தடகளத் தொடரில் ஆண்களுக்கான 400 மீற்றர் ஓட்டத்தில் சாவகச்சேரி பிரதேச செயலகத்தைப் பிரதிநிதித்துவம் செய்த ரி.விதுசன் தங்கப் பதக்கத்தைச் சுவீகரித்தார்.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்தப் போட்டி நடைபெற்றது.

ஆண்களுக்கான 400 மீற்றர் ஓட்டத்தில் சாவகச்சேரி பிரதேச செயலகத்தை பிரதிநிதித்துவம் செய்த ரி.விதுசன் 53 செக்கன்கள் ஒரு மில்லி செக்கனில் ஓடிமுடித்து தங்கப் பதக்கத்தையும் நல்லூர் பிரதேச செயலகத்தைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ்.டினேசன் 54 செக்கன்கள் 4 மில்லி செக்கன்களில் ஓடிமுடித்து வெள்ளிப் பதக்கத்தையும் காரைநகர் பிரதேச செயலகத்தை பிரதிநிதித்துவம் செய்த எஸ். தனராஜ் 55 செக்கன்கள் 9 மில்லி செக்கன்களில் ஓடிமுடித்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர்.

(ம-422-108)



## தடைதாண்டல் போட்டியில் சாவகச்சேரிக்குத் தங்கம்

யாழ்ப்பாணம், மே 9

யாழ்ப்பாண பிரதேச செயலக விளையாட்டுப் பிரிவால் நடத்தப்பட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான 400 மீற்றர் சட்டவேலி ஓட்டத்தில் சாவகச்சேரி பிரதேச செயலகத்தைப் பிரதிநிதித்துவம் செய்த என்.திருட்சிகா தங்கப்பதக்கம் வென்றார். 1 நிமிடம் 22 செக்கன்கள் 5 மில்லி செக்கன்களில் ஓடி முடித்து அவர் தங்கப் பதக்கத்தையும், நல்லூர் பிரதேச செயலகத்தைப் பிரதிநிதித்துவம் செய்த என்.சிவானுஜா 1 நிமிடம் 24 செக்கன்கள் 5 மில்லி செக்கன்களில் ஓடி முடித்துவெள்ளிப்பதக்கத்தையும், நெடுந்தீவு பிரதேச செயலகத்தைப் பிரதிநிதித்துவம் செய்த டி.பிரியவதனா 1 நிமிடம் 30 செக்கன்கள் 7 மில்லி செக்கன்களில் ஓடி முடித்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-422)

# சென். மேரிஸ் கழகம் அரையிறுதிக்குத் தகுதி



யாழ்ப்பாணம், மே 9

தெல்லிப்பழை நாமகள் சனசமூக நிலையத்தின் 55ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரில் நாவாந்துறை சென். மேரிஸ் அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

நாமகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தக் காலிறுதியாட்டத்தில் நாவாந்துறை சென். மேரிஸ் அணியை எதிர்த்து குப்பிளான் குறிஞ்சிக்குமரன் அணி மோதியது. முதல் பாதியின் முடிவில் இரண்டு அணிகளும் கோல்கள் எதையும் பதிவுசெய்யவில்லை.

இரண்டாவது பாதியில் சென். மேரிஸ் அணியின் கோலைப் பதிவுசெய்தார் தங்கன். முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் சென். மேரிஸ் அணி வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

(ம-23)

## தட்டெறிதலில் தங்கப்பதக்கம் வென்றது நல்லூர் செயலகம்

யாழ்ப்பாணம், மே 9

யாழ்பாண மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான தட்டெறிதலில் பெண்கள் பிரிவில் நல்லூர் பிரதேச செயலகத்தைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ்.சிவானுஜா தங்கப் பதக்கத்தைச் சுவீகரித்தார்.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்தப் போட்டிகள் நடைபெற்றன. நல்லூர் பிரதேச செயலகத்தைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ்.சிவானுஜா 24.11 மீற்றர் தூரத்துக்கு எறிந்து தங்கப் பதக்கத்தையும் வேலணை பிரதேச செயலகத்தைப் பிரதிநிதித்துவம் செய்த ஆர்.சுஜீபா 23.26 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெள்ளிப்பதக்கத்தையும், கோப்பாய் பிரதேச செயலகத்தைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ் கஜானி 21.57 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர்.

(ம-422)





## பெண்களுக்கான வன்னியின் சமர்

*யாழ்ப்பாணம், மே 9*

*'பெண்களுக்கான வன்னியின் சமர்' என வர்ணிக்கப்படும் மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரிக்கும் வவுனியா இந்துக் கல்லூரிக்கும் இடையிலான 19 வயதுப்பிரிவு பெண்களுக்கான துடுப்பாட்டம் இன்று ஆரம்பமாகிறது. வவுனியா நகர சபை மைதானத்தில் இந்த ஆட்டம் நடைபெறவுள்ளது. (ம-23)*

# யங்ஹென்றிஸ் அரையிறுதியாட்டத்துக்குத் தகுதி





யாழ்ப்பாணம், மே 9

தெல்லிப்பழை நாமகள் சனசமூக நிலையத்தின் 55ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரில் இளவாலை யங்ஹென்றிஸ் அணி அரையிறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றது.

தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற காலிறுதியாட்டத்தில் இளவாலை. யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பலாலி விண்மீன் விளையாட்டுக் கழக அணி மோதியது. 7:2 என்ற கோல் கணக்கில் யங்ஹென்றிஸ் அணி வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது. யங்ஹென்றிஸ் அணியின் சார்பில் தனேஸ், ஞானரூபன் இருவரும் தலா 3 கோல்களையும், யூட்சுபன் ஓர் கோலையும் பெற்றனர். விண்மீன் அணியின் சார்பில் காண்டீபன் 2 கோல்களைப் பதிவுசெய்தார்.

(ம-23)

## மட்ரிட் ரென்னிஸ் தொடர் செரபோவா முன்னேற்றம்

மட்ரிட் ரென்னிஸ் தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் காலிறுதிக்கு முன்னைய சுற்றுக்குத் தகுதி பெற்றார் ரஷ்ய வீராங்கனை மரிய செரபோவா.

ஸ்பெய்னின் பார்சிலோனாவில் நடைபெற்ற தொடரைத் தொடர்ந்து மட்ரிட் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் நடைபெற்ற இரண்டாவது சுற்று ஆட்டத்தில் ரஷ்ய வீராங்கனை செரபோவாவை எதிர்த்து உரோமானிய வீராங்கனை பெகு மோதினார்.

மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தின் முதலிரு செற்களையும் முறையே 7:5, 6:1 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:0 என்ற நேர்செற் கணக்கில் வெற்றிபெற்றார் செரபோவா.

(ம)



# பஞ்சாப்பை நேற்றுத் தோற்கடித்ததன் மூலம் தொடரில் உயிர்ப்புடன் உள்ளது ராஜஸ்தான்

ஐ.பி.எல். தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில் பஞ்சாப்பை 14 ஓட்டங்களால் வீழ்த்தியது ராஜஸ்தான். இந்த வெற்றியை அடுத்து பிளே ஆப் சுற்றுக்குச் செல்வதற்கான வாய்ப்புக்காக மும்பை, கொல்கத்தாவுடன் முண்டிக்கொள்ளும் நிலைக்குச் சென்றது அந்த அணி.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ராஜஸ்தான் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணியின் ஆரம்ப வீரர்களாக ரகானே மற்றும் பட்லர். 9 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் ரகானே. ரகானேயைத் தொடர்ந்து கௌதமனும் 8 ஓட்டங்களுடன் பவிலியன் நோக்கி நடந்தார். பட்லருடன் இணைந்தார் சாம்சன். ராஜஸ்தானின் திடீர்த் தடுமாற்றம் இல்லாமல் செய்யப்பட்டு அணி வலுவான நிலையை நோக்கி நடைபோட்டது. 12.3 பந்துப்பரிமாற்றங்களில் 100 ஓட்டங்களைத் தொட்டது ராஜஸ்தான். 22 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் சாம்சன். மறுமுனையில் அரைச்சதம் கடந்தார் பட்லர். 12 கோடியே 50 லட்சம் ரூபாவுக்கு வாங்கப்பட்டவரான ஸ்ரோக்ஸ் நேற்றும் தடுமாறினார். அவரால் முடிந்தது 14 ஓட்டங்களே. இந்தப் 14 ஓட்டங்களுக்காக அவர் 11 பந்துகளை எதிர்கொண்டமை இரட்டிப்புப் பின்னடைவு. 82 ஓட்டங்களுடன் பட்லரும் ஆட்டமிழக்க ராஜஸ்தான் அணியால் 8 இலக்குகள் இழப்புக்கு 158 ஓட்டங்களையே பெறமுடிந்தது.

பந்துவீச்சில் டை 4 இலக்குகளையும், ரகுமான் 2 இலக்குகளையும், ஸ்ரொய்னிஸ் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய பஞ்சாப் அணிக்கு வெறும் ஓர் ஓட்டத்துடன் ஆட்டமிழந்து பெரும் தலைவலியைக் கொடுத்தார் கெய்ல். மூன்றாம் நிலை வீரராகக் களமிறங்கினார் அஸ்வின். சுழல்பந்து ஆடுகளத்தில் வேலைசெய்யும் அறிகுறிகள் தென்பட்ட நிலையில், அத்



தகைய பந்துவீச்சுக்களை சந்திக்க இயல்பாகவே பெரும் சிரமப்படும் அஸ்வின் மூன்றாம் நிலை வீரராக தன்னை மாற்றிக்கொண்டமையானது பிற்போக்கான சிந்தனையே. கெய்ல் வீழ்ந்த அதே பந்துப்பரிமாற்றத்தில் ஓட்டமெதுவும் பெறாமல் ஆட்டமிழந்தார் அஸ்வின். அதுவும் கிளீன் போல்ட் முறையில். கிளீன் போல்ட் முறைகள் அணியை பாதாளத்துக்குத் தள்ளும் என்பது கிரிக்கெட்டில் எழுதப்படாத விதி. ஓர் முனையில் லோகேஸ் ராகுல் நிலைத்து நின்றாலும் மத்திய வரிசை வீரர்களான கருண் நாயர் 5, நாத் 9, திவாரி 7, அக்சர் பட்டேல் 9 என ஒருவர் பின்னர் ஒருவராக ஒன்றுமே செய்ய இயலாமல் இன்னிங்ஸை முடித்துத் திரும்பினர். பின்வரிசையில் ஸ்ரொய்னிஸ், தான் பெற்ற 11 ஓட்டங்களுக்காக 16 பந்துகளை எதிர்கொண்டார். ஆக, ஸ்ரொய்னிஸின் இன்னிங்ஸால் பஞ்சாப்புக்கு மேலும் பின்னடைவு வந்தமைந்தது. லோகேஸ் ராகுல் கடைசிக் கட்டத்தில் அடித்தாட எத்தனித்தார். எனினும் எவ்வித பயனும் ஏற்படவில்லை. 20 பந்துப்பரிமாற்றங்கள் வரையில் தாக்குப்பிடித்த போதிலும் 143 ஓட்டங்களையே பஞ்சாப்பால் பெறமுடிந்தது. 15 ஓட்டங்களால் வென்றது ராஜஸ்தான். லோகேஸ் ராகுல் 95 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார்.

பந்துவீச்சில் கௌதமன் 2 இலக்குகளையும், ஆச்சர், உனத்கட், ஸ்ரோக்ஸ், சொட்கி நால்வரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர். (ம)




**வீட்டுப் பணிப்பெண் தேவை**

ஏழாலை கிழக்கில் உள்ள வீடொன்றில் பணிபுரிய பணிப்பெண் தேவை. 40 வயதுக்கு மேற்பட்டவருக்கு முன்னுரிமை. தங்குமிடமும் உணவும் இலவசம். (CS/16438)(11.17)

**077 483 6307, 071 496 6658**

**வேலையாள்கள் தேவை**

மின்னிணைப்பு வேலை செய்வதற்கு வேலையாள்கள் தேவை. அனுபவம் உள்ளவர்களும், பழக விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம். அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானித்துக் கொள்ளலாம். வலிகாமம் தென் மேற்கு பிரதேசசபைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

எலக்ரிக்கல் கடைக்கு வேலையாள் (பெண்கள்) தேவை. கணினி அறிவுள்ளவர்கள் விரும்பத்தக்கது.

**077 540 3736** (CS/16441)(11.17)

**விரைவு பொதிகள் சேவை**

விசேட விலை குறைப்பு

UK- 550 /-Kg
கனடா-900 /-Kg
ஜேர்மனி-700 /-Kg
நெதர்லாந்து-700 /-Kg

- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை

0768226240

V2 TRAVELS

**ALLIANCE FRANCAISE DE JAFFNA**

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி



- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSY கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANCAISE மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.

www.ambafrancelk.org

**021 222 8093** 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

**பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நேரடி அங்கீகாரம் உள்ள இலங்கைத் தகவல் தொழில்நுட்ப நிறுவகம் - SLIIT - Jaffna**

**Sri Lanka Institute of Information Technology**

**Application for June intake**

**B.Sc(Hons)**
- Information Technology
- Software Engineering
- Interactive Media
- Cyber Security
- Information Systems Engineering
- Network Engineering
- Data Science

**B.Sc(Hons)**
A/L 1 'S' சித்தியுள்ளவர்கள் இப் பயிற்சி நெறியில் இணைய முடியும்.

இறுதிச் சந்தர்ப்பம் 25.05.2018

**Foundation for Degree**
O/L பெறுபேற்றுடன் நீங்கள் பட்டப்படிப்பின் அடிப்படைக் கற்கை யூடாக உங்கள் பட்டப் படிப்பைப் பூர்த்தி செய்ய முடியும்.
B.Sc, BBA

**BBA (Hons)**
- Human Capital Management
- Accounting & Finance
- Marketing Management
- Business Analytics
- Logistic & Supply ChainManagement

**வெளிநாட்டுக் கல்வி**
எமது நிறுவனத்தில் பட்டப்படிப்பின் 2 வருடங்களைப் பூர்த்தி செய்தவர்கள் UK, USA, CANADA, AUSTRALIA போன்ற நாடுகளிலுள்ள முன்னணி பல்கலைக்கழகங்களுக்கு இலகுவான முறையில் குறைந்த செலவில் கற்க முடியும்.

53, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் (ஆரியகுளம் சந்திக்கு அருகில்)

www.sliit.lk 021 720 4204 021 720 0406 (IN/6684)(11.17)

## மரண அறிவித்தல்

### பாலகுமார் ஸ்ரீசத்யா

**(உயர்தர மாணவர் 2019 கணிதபிரிவு, யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர், யாழ். புனித பரியோவான் கல்லூரி )**



இணுவில் வீதி, சுதுமலை வடக்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பாலகுமாரன் ஸ்ரீசத்யா கடந்த (07.05.2018) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் கந்தசாமி காலஞ்சென்ற ஜீவநாயகி காலஞ்சென்றவர்களான இராமநாதன் சர்வலோகேஸ்வரி தம்பதியரின் அன்புப் பேரனும் பாலகுமார் காலஞ்சென்ற எழிலரசிதம்பதியரின் அன்புமகனும் ஸ்ரீகஜன் (பழைய மாணவர் யாழ். இந்துக்கல்லூரி, மாணவர் SLIIT), ஸ்ரீபிரணவன் (தரம் 5 மாணவர், உடுவில் மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புச்சகோதரரும் காலஞ்சென்ற ஸ்ரீஸ்கந்தராஜா மற்றும் பிரபாகரன், மனோகரன் ஆகியோரின் பெறாமகனும் றேனுகா, மோகனாபிரியதர்சினி சிவக்குமார் ஆகியோரின் அன்புமருமகனும் காலஞ்சென்ற பாலேந்திரா மற்றும் சிவகாம்பிகை, நடேசர், கமலாம்பிகை, உருத்திரமூர்த்தி, இராஜேஸ்வரி (பவானி) தம்பதியரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.05.2018) புதன்கிழமை மு.ப. 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும ஏற்றுக்கொள்ளவும்.

இணுவில் வீதி,
சுதுமலை வடக்கு, மானிப்பாய்.

தகவல்: க.பாலகுமார் (தந்தை)
021 225 5134

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.05.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.